# ஆண்டு அறிக்கை
# 2011-12

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | வாரிய இயக்குநர்கள் | | 96 |
| 2 | வாரியத்தின் வரலாறு | | 99 |
| 3 | வாரியத்தின் குறிக்கோள் | | 101 |
| 4 | நிறுவனத்தின் விளக்கப்படம் | | 102 |
| 5 | மழைநீர் மற்றும் சேகரிக்கும் நிலை | | 103 |
| 6 | கூடுதல் நீராதாரங்களை கண்டறிதல் | | 104 |
| 7 | மழைநீர் சேகரிப்பு | | 105 |
| 8 | சென்னைக் குடிநீர் வாரியம் நீரின் தரத்தினை மேம்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் | | 105 |
| 9 | 2010-2011 & 2011-2012 ம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பணிகளின் பட்டியல் | | 108 |
| 10 | நிதி குறித்த திட்டப் பணிகள் | | 110 |
| 11 | நிதி | | 138 |
| | (அ) | தணிக்கையாளர்களின் அறிக்கை | 140 |
| | (ஆ) | இருப்பு நிலைக்குறிப்பு, வரவு-செலவு கணக்கு, மற்றும் அட்டவணை | 143 |
| | (இ) | கணக்குகள் மீதான குறிப்புகள் | 157 |
| | (ஈ) | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 163 |
| | (உ) | நிதிநிலைச்சுருக்கம் - ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 169 |
| 12 | பணி மற்றும் நிர்வாகத் துறை | | 170 |
| | • பணியாளர்களின் விவரம் | | 171 |
| | • பணியாளர் பணியிடம் மாற்றங்கள் | | 174 |
| | • அயல் துறை பணியாளர்களின் விவரங்கள் | | 175 |
| 13 | பயிற்சி மையம் | | 176 |
| 14 | பகுதி அலுவலகம் மற்றும் பணிமனை விவரங்கள் | | 179 |
| 15 | அசையாச் சொத்து விவரம் | | 180 |

# வாரியத்தின் தற்போதைய இயக்குநர்கள்



## தலைவர்

திரு.எஸ்.பி.வேலுமணி, எம்.ஏ., எம். பில்.
அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தலைவர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.

## முழுநேர இயக்குநர்கள்



டாக்டர். பி. சந்திர மோகன், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.



திரு. ந. சந்தீப், இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.



திரு. சி.ஆறுமுகம், இ.த. & க.ப.,
நிதி இயக்குநர்.
சென்னைக் குடிநீர் வாரியம்.



திரு. தூ. வெ. பிரபாகர், எம்.இ.,
பொறியியல் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.

## அலுவல் வழி இயக்குநர்கள்



திரு. கே.சண்முகம், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலர்,
நிதித்துறை,
தலைமைச் செயலகம்.



திரு. கே. பனீந்தர ரெட்டி, இ.ஆ.ப.,
அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்.



திரு. ஆர்.வெங்கடேசன், இ.ஆ.ப.,
உறுப்பினர் – செயலர்,
சென்னை வளர்ச்சிக் குழுமம் மற்றும்
இயக்குநர் சென்னைக் குடிநீர் வாரியம்.



திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
ஆணையர், சென்னை மாநகராட்சி.



திரு. சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

# வாரிய இயக்குநர்கள் - அறிக்கை காலம்



### தலைவர்

திரு.கே.பி.முனுசாமி, பி.ஏ., பி.எல்.
அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தலைவர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
05.11.2011 முதல் 31.03.2012 வரை

## முழுநேர இயக்குநர்கள்



திரு. ராஜேஷ் லகானி, இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்,
01.04.2011 முதல் 22.06.2011 வரை



டாக்டர். கே.கோபால், இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்
22.06.2011 முதல் 07.02.2012வரை



திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,
கூடுதல் முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
நிர்வாக இயக்குநர்( பொறுப்பு)
சென்னைக் குடிநீர் வாரியம்
07.02.2012 முதல் 08.03.2012 வரை



திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் மற்றும் நிர்வாக இயக்குநர் சென்னைக் குடிநீர் வாரியம்
08.03.2012 முதல் 31.03.2012 வரை



திரு. கே.மகரபூஷணம், இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்
01.04.2011 முதல் 03.06.2011 வரை



திரு. சி.ஆறுமுகம், இ.த. & க.ப.,
நிதி இயக்குநர்
29.09.2011 முதல் 31.03.2012 வரை



திரு. கே.வைத்திலிங்கம், பி.இ.,
பொறியியல் இயக்குநர்
01.04.2011 முதல் 31.10.2011 வரை



திரு. சி.பிரகாசம், பி.இ.,
பொறியியல் இயக்குநர்
01.11.2011 முதல் 30.03.2012 வரை

# அலுவல் வழி இயக்குநர்கள் - அறிக்கை காலம்



**திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
கூடுதல் முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம்.
09.12.2011 முதல் 31.03.2012 வரை



**திரு. கே.சண்முகம், இ.ஆ.ப.,**
அரசு முதன்மைச் செயலர், நிதித்துறை,
தலைமைச் செயலகம்,
இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம்.
01.04.2011 முதல் 31.03.2012 வரை



**திரு. எஸ்.கருத்தையா பாண்டியன், இ.ஆ.ப.,**
அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம்.
01.04.2011 முதல் 08.12.2011 வரை



**டாக்டர் டி.கார்த்திகேயன் இ.ஆ.ப.,**
ஆணையர் சென்னை மாநகராட்சி
மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
01.04.2011 முதல் 30.11.2011 வரை



**திரு. பி.வி.சி.டேவிடார், இ.ஆ.ப.,**
ஆணையர் சென்னை மாநகராட்சி
மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
01.12.2011 முதல் 31.03.2012 வரை



**திரு. ஆர்.வெங்கடேசன், இ.ஆ.ப.,**
உறுப்பினர் – செயலர்,
சென்னை வளர்ச்சிக் குழுமம்
மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
01.04.2011 முதல் 31.03.2012 வரை



**திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
01.04.2011 முதல் 13.06.2011 வரை



**திரு. ஆர்.சுடலைக்கண்ணன், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
14.06.2011 முதல் 30.08.2011 வரை



**திரு. பி.ஏகாம்பரம், இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம் மற்றும் இயக்குநர்,
சென்னைக் குடிநீர் வாரியம்.
01.09.2011 முதல் 31.03.2012 வரை

# வாரியத்தின் வரலாறு

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் தமிழ்நாடு சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலம் {சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று சட்டம் 1978 ( 1978 ன் சட்ட எண் 28 )} ஏற்படுத்தப்பட்டு 1.8.78 முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது. சென்னை மாநகராட்சியும், தமிழ்நாடு நில நீர்த்துறையினரால் செயல்பட்டு வந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சம்பந்தப்பட்ட பணிகளை வாரியம் எடுத்துக்கொண்டது.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் செயல் படக்கூடிய பகுதிகள் :**

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில், சென்னை நகரம் முழுவதும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் பகுதி அலுவலகம் இருந்தது. ஒரு பகுதிப் பொறியாளரின் தலைமையின் கீழ் இயங்கியது. ஒவ்வொரு பகுதி அலுவலகத்தின் கீழ் சராசரியாக 20 பணிமனைகள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுப் பணிகளை மக்களுக்குச் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ளது. பணிமனை அலுவலகம் வாரியத்தின் அடிப்படை பிரிவாகும். பொதுமக்கள் தங்களுடைய தேவைகள் குறித்தும், புகார்கள் குறித்தும் பணிமனை அலுவலர்களை அணுகுவார்கள். தற்போது வாரியம் 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனை அலுவலகங்களாக விரிவடைந்துள்ளது. வாரியம் இரண்டு வகை செயல் மண்டல அலுவலகங்களையும் கொண்டிருக்கிறது. ஒரு மண்டல அலுவலகம் செங்குன்றம், சோழவரம், பூண்டி மற்றும் கீழ்ப்பாக்கம் குடிநீர்ப் பணிகளில் உள்ள தரைமேல் நீர் வழங்குவதில் வழிமுறைகள் பற்றி செயல்படுகிறது. மற்றொரு மண்டல அலுவலகம் முக்கியமாகத் தொழிற்சாலைகளுக்கு மொத்தமாக நீர் வழங்குவது பற்றி நகரத்திற்கு வெளியில் கிடைக்கும் நிலநீர் வழிமுறைகளைப் பற்றி செயல்படுத்துகிறது.

**கூடுதல் நீராதாரங்கள் :**

வாரியம் தோற்றுவிக்கப்பட்ட பிறகு கீழ்காணும் திட்டங்களை செயல்படுத்தியதின் மூலமாக கூடுதலான நீராதாரங்களை அதிகப்படுத்தியுள்ளது

**1. கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்:**

ஏப்ரல் 14, 1976 அன்று ஓர் உடன்படிக்கை மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேச அரசுகளால், 15 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்ணா நதிநீரை சென்னைக்கு வழங்க கையெழுத்தானது. இதையடுத்து, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கு இடையில் ஓர் ஒப்பந்தம், 1983 ம் வருடம் ஏப்ரல் மாதம் 18ம் தேதி அன்று 15 ஆயிரம் மில்லியன் கன அடி (டி.எம்.சி) கிருஷ்ணா நீர் வழங்க கையெழுத்தானது. அந்த நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சோமசீலா வழியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திற்கு அனுப்பி முடிவாக நிகர அளவான 12 டி.எம்.சி நீர் (வழியில் நீர் ஆவியாவது மற்றும் கசிவு இழப்பு 3 டி.எம்.சி போக) தமிழ்நாடு எல்லையை வந்தடையும்.

**2. வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம்:**

சென்னை நகரத்திற்கு வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தியதன் மூலமாக கூடுதலாக நீராதாரம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதன் மூலம் 180 எம்.எல்.டி குடிநீரை வீராணம் ஏரியிலிருந்து பெறப்பட்டு, சென்னை நகரத்திற்கு வழங்கப்படுகிறது.

**3. 100 எம்.எல்.டி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், மீஞ்சூர்.**

**4. 100 எம்.எல்.டி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்,நெம்மேலி.**

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், மேற்கண்ட திட்டங்கள் மூலமாக தினந்தோறும் பெறப்படுகிறது.

**முக்கியமான வருவாய் இனங்கள் :**

1. குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரி
2. குடிநீர் விற்பனை
3. குடிநீர் கட்டணங்கள்
4. அரசிடமிருந்து பெறப்படும் மானியம்

சென்னை மாநகராட்சி விதித்து வந்த சொத்து வரியின் பல பகுதிகளில் ஒரு பகுதியே குடிநீர் வரியும் கழிவு நீரகற்று வரியும் ஆகும். வாரியம் ஏற்படுத்தப்பட்ட பிறகு சென்னை மாநகராட்சி விதித்த சொத்து வரியிலிருந்து இந்தப் பகுதி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரி தனியாக விதிக்க வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. நிர்வாக வசதிக்காக வாரியத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி 31–3–79 முடிய குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிகளை விதித்தும், வசூலித்தும் வந்தது. 1–4–79 முதல் வாரியம் தானாகவே குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிகளை விதித்தும் வசூலித்தும் வருகிறது. வாரியத்தின் சட்டங்கள் அமைக்கும் பொழுது குடிநீர் வரி நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பில் அதிகபட்சமாக 20 சதவீதமும், கழிவு நீரகற்று வரியாக நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு மதிப்பில் 10 சதவீதமும் வசூலிக்க அதிகாரம் வழங்கப்பட்டது. வாரியம் ஆண்டு மதிப்பில் 1.5 சதவீதம் குடிநீர் வரியும் 5.5 சதவீதம் கழிவு நீரகற்று வரியுமாக மொத்தம் ஆண்டு மதிப்பில் 7 சதவீதமாக வசூலிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. சொத்துவரி விதித்தபோது எவ்வளவு இருந்ததோ அந்தத் தொகைதான். தற்போது வாரியம் விதித்த வரிகளின் அளவாகும். சென்னை மாநகராட்சி பின்பற்றிய அதே மதிப்பில் தான் தற்போது வாரியமும் ஒவ்வொரு வீட்டின் நிர்ணயிக்ககப்பட்ட ஆண்டு மதிப்பைப் பின்பற்றுகிறது. குடிநீர் வரி மற்றும் கழிவு நீரகற்று வரிக்கான ஆண்டு மதிப்பில் 7 சதவீதத்தை இரண்டாகப் பிரித்து அரையாண்டிற்கு ஒருமுறை வசூலிக்கின்றது.

பலவகைப்பட்ட விதத்தில் குடிநீர் பயன்படுத்துபவர்களுக்கு விற்கப்பட்டு அவர்கள் பயன்படுத்துகிற குடிநீரின் அடிப்படையில் குடிநீர்க் கட்டணம் விதிக்கப்படுகிறது. கட்டணம் மற்றும் கேட்போலை மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

வாரியம் பொதுமக்களிடமிருந்து பெரும்பாலும் குடிநீர் கட்டணத்தை ஒரே விலை விகிதத்தில் வசூல் செய்கிறது.

வாரியம், பல்வேறு விதமான திட்டங்களை செயல்படுத்துவதற்கு, அரசிடமிருந்து அவ்வப்போது மானியம் பெறுகிறது.

## வாரியத்தின் குறிக்கோள்

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைத்தளித்துப் பராமரிக்கவும் அதனைச் செம்மையுற இயக்கவும் திட்டமிட்ட விரிவாக்கப் பணிகளை மேம்படுத்துதல்,

சென்னைப் பெருநகரின் வருங்காலக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று தேவை மதிப்பீடு கிடைக்கக்கூடிய நீரின் அளவு பயன்பாடு மற்றும் ஏனைய விவரங்களுக்கு ஏற்ப தொடர்ந்து ஆய்வு செய்து அதற்கேற்ப தற்கால நடைமுறை அடிப்படையில் நீண்ட காலத்திட்டங்களைத் தயாரித்தல், மறுமதிப்பீடு, மற்றும் மறு ஆய்வு செய்து தற்காலத்திற்கேற்ப திட்டம் தயார் செய்தல்.

சென்னை மாநகரின் வருங்காலக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் விரிவாக்கத்திட்டங்களை மேற்கொளல்.

அரசு வாரியத்திடம் ஒப்படைக்கும் வகையில் அறிவிப்பு செய்தலுக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதிகளை இயக்கிப் பராமரித்தல்.

வாரியத்திற்கு அறிவிக்கை செய்து, அரசு ஒப்படைக்கும் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிப் பணிகள் அனைத்தையும் செய்து முடித்தல்,

மேற்குறித்த கடமைகள் தொடர்பான துணை, இடை நிகழ்வு அல்லது, இவற்றின் விளைவாக நேரிடும் எந்த கடமைகளையும் மேற்கொளல்,

வாரியத்திற்கு சட்ட பூர்வமாகவோ அல்லது அவ்வப்போது அளிக்கப்படும் இவ்வாறான வேறு கடமைகள் மேற்கொளல்

வாரியப் பணிகளை நிறைவேற்றும் போது பின் வருவனவற்றில் கவனம் செலுத்துகிறது,

அ. பொது நலவாழ்வு, பாதுகாப்பு மற்றும் பொது மக்களின் வாய்ப்பு நலன் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்,

ஆ. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வசதி அமைக்கும் விரிவாக்கத் திட்டங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்துடன் இணைந்து ஆலோசித்து செயல்படுவதுடன், உள்ளாட்சித் துறைகளில் செயற்படுத்தப்படும் குடிநீர் வழங்கல் திட்டங்கள் அல்லது குடிநீர் வசதிப் பணிகள் அல்லது கழிவு நீரகற்று வசதிப் பணிகள் அல்லது சாலை அமைப்புப் பணிகள் அல்லது இது போன்ற பணிகள் யாவற்றிக்கும் முழு ஒத்துழைப்பையும் நல்குதல்.

இ. குடிநீர் வழங்கல், கழிவு நீர் தீர்வு செய்தல் ஆகிய துறைகளில் தேவைக்கேற்ப சிறந்த தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்ள நிபுணர்களைக் கொண்டு பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

ஈ. மாநிலத்திலுள்ள நகர உள்ளாட்சிகளுக்காக திட்டங்கள் மேற்கொளல், கலந்தறிதல் மற்றும் நிர்வாகப் பணிகள் அமைத்தல், விரிவான வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் அடிப்படை அளவுகள் அளிப்பதில் ஒருங்கிணைந்த திட்டங்களை நிறைவேற்றல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல்.

உ. சென்னை மாநகரில் நிலத்தடிநீர் உறிஞ்சப்படுவதைக் கட்டுப்படுத்தி, பாதுகாத்து அதனைப் பயன்படுத்துதல்.

ஊ. நீர் ஆதாரங்கள் சென்னை மாநகரிலுள்ள நீர் அமைப்புகள் கால்வாய்கள் ஆகியவற்றில் நீர் மாசுபடுவதைத் தடுத்தல்.

எ. தொழிலகக் கழிவு நீர் வெளியேற்றப்படுவதற்கு முன்னர் அவற்றைச் சென்னை மாநகரில் கழிவுநீர்க் கால்வாய்கள், ஆறுகள் அல்லது நீர்ப்படுகைகள் ஆகியவற்றில் செலுத்துவதற்கு ஏற்ப அளவு மற்றும் தன்மையினை அளவிடுதல்.

ஏ. தேவையான ஆராய்ச்சி, சோதனை, ஆராய்வு ஆகிவற்றை மேற்கொள்ளுதல்.


ஐ. தன் இயக்கங்களை நிறைவேற்றுவதற்காக உடமைகளைக் கையகப்படுத்துதல் மற்றும் தீர்வு செய்தல்.

ஒ. ஆண்டு கணக்குகள் மற்றும் வரவு செலவு மதிப்பீடு தயாரித்து மேற்கொள்ளுதல்.

ஓ. வரி விதிப்பு வசூலிப்பு வீதங்கள் தொகைகள், கட்டணங்கள் மேல் வரிகள், வாடகை விலை மற்றும் செலவினங்கள் ஆகியவை குறித்து நிர்ணயம் செய்தல்.

ஔ. சென்னைக் குடிநீர் வாரிய சட்ட விதி 1978 (1978 ஆம் ஆண்டு சட்ட விதி 28 ) இன் கீழ் வழி வகைகளையும், பணிகளையும் செயற்படுத்தும் வண்ணம் அனைத்துத் தேவைகளையும் செய்தல்,

# சென்னைக் குடிநீர் வாரியம் – நிறுவனத்தின் விளக்கப்படம்




விரிவாக்கம்

த.பொ. : தலைமை பொறியாளர்
மு.நி.க.அ. : முதன்மை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
நி.க.அ. (வ) : நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் (வருவாய்)
மே.பொ. : மேற்பார்வை பொறியாளர்
தொ.தொ.மே. : தொழில் தொடர்பு மேலாளர்
த.தொ.நு.மே. : தகவல் தொழில் நுட்ப மேலாளர்
வி.வ.மே. : விவர வகைப்பாட்டு மேலாளர்
து.நி.க.அ. : துணை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்
உ.த. : உள் தணிக்கையாளர்
கொ.மே. : கொள்முதல் மேலாளர்
ப.க.மே. : பண்டகக் கட்டுப்பாட்டு மேலாளர்
செ.பொ. : செயற்பொறியாளர்
ம.அ. (1). : மண்டல அலுவலகம் – 1
ம.அ. (2). : மண்டல அலுவலகம் – 2
தி.ம.வ. : திட்ட மற்றும் வரைவு
ப.மை. : பயிற்சி மையம்
சு.ம.அ. : சுத்திகரிப்பு மற்றும் அனுப்புதல்
மு.கு. : முதன்மைக் குழாய்

விரிவாக்கம்

இ.ம.பா. : இயக்குதல் மற்றும் பராமரிப்பு
ஒ.ம.க. : ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு
தெ\ தெ மே : தெற்கு \ தென் மேற்கு
வ \ வகி : வடக்கு \ வட கிழக்கு
ம : மத்திய
க.சு.நி. : கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்
கு.வ. : குடிநீர்வழங்கல்
க.நீ.சு. : கடல்நீர் சுத்திகரிப்பு
நி.அ.க.ப. : நிர்வாக அலுவலகம் கட்டிடப் பராமரிப்பு
அ.ந.ப. : அருகாமையில் உள்ள நகர்ப்புர பகுதி
த.உ.பி. : தர உறுதிப் பிரிவு

# நீராதாரம்

சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள் ஏரிகள் மற்றும் நிலத்தடி நீர் ஆகும். பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகியன ஏரிகள். மஹாராஷ்டிரம், கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளும் வருடத்திற்கு 15 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) கிருஷ்ணா நீர் சென்னை நகருக்குக் கொடுக்க வேண்டும் என்ற உடன்படிக்கையில் ஏப்ரல் 14, 1976ல் கையொப்பமிட்டன. இதன் தொடர்ச்சியாக, ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த்தேக்கங்கள் வழியாக 12 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) நீர் (வரும் வழியில் 3 கூஆஊ நீர் ஆவியாதல் மற்றும் நீர்க்கசிவு போன்ற இழப்புகள் நீங்கலாக) தமிழக எல்லையை கீழே குறிப்பிட்ட முறைப்படி வந்தடையும்.

ஜூலை முதல் அக்டோபர் வரை – 8 ஆயிரம் மில்லியன் கன அடி

ஜனவரி முதல் ஏப்ரல் வரை – 4 ஆயிரம் மில்லியன் கன அடி

சென்னைக் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேலும் ஒரு ஆதாரமாக அக்டோபர் 2004ம் ஆண்டு முதல் சென்னைக்கு தெற்கே 230 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியும் இணைந்துள்ளது. மேலும் மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில், (31.07.2010 முதல் இயங்கி வரும்) கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது. பூண்டி, தாமரைப்பாக்கம், வெள்ளப்பெருக்கு பகுதி, கன்னிகைப்பேர் பகுதி , பஞ்செட்டி, மீஞ்சூர் மற்றும் தென் கடற்கரைப் படுகையில் அமைந்துள்ள கிணற்றுத் தளங்களிலிருந்து நிலத்தடி நீர் பெறப்படுகிறது.

2) அ) செங்குன்றம், சோழவரம் மற்றும் பூண்டி சராசரி மழை அளவு

| வருடம் | மழையின் அளவு மி.மி |
|---|---|
| 2007 | 1449.47 |
| 2008 | 1655.00 |
| 2009 | 1119.60 |
| 2010 | 1561.03 |
| 2011 | 1315.80 |

2) இ) சராசரி குடிநீர் வழங்கல்

| நிதி ஆண்டு | குடிநீரின் அளவு (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) |
|---|---|
| 2007-08 | 642.79 |
| 2008-09 | 653.57 |
| 2009-10 | 610.95 |
| 2010-11 | 682.49 |
| 2011-12 | 794.77 |

2) ஆ) ஏரிகளின் நீர் இருப்பு

(மிகஅ)

| வ. எண் | ஏரியின் பெயர் | முழுக் கொள்ளளவு | நீர் இருப்பு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஜூன் 2010 | நவம்பர் 2010 | ஜூன் 2011 | நவம்பர் 2011 |
| 1 | பூண்டி | 3231 | 1195 | 1795 | 1700 | 2666 |
| 2 | சோழவரம் | 881 | 98 | 431 | 218 | 684 |
| 3 | புழல் | 3300 | 2004 | 1581 | 2207 | 3062 |
| 4 | செம்பரம்பாக்கம் | 3645 | 2106 | 1527 | 1822 | 2735 |
| 5 | வீராணம் | 1465 | 1124 | 704 | 0 | 687 |

2) ஈ) தேவை மற்றும் வழங்கலின் இடையே உள்ள இடைவெளி

| நிதி ஆண்டு | மக்கள் தொகை (இலட்சத்தில்) | குடிநீரின் தேவை | குடிநீர்வழங்கல் | இடைவெளி |
|---|---|---|---|---|
| | | நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில் | | |
| 2007 – 08 | 45.43 | 681.45 | 582.22 | 99.23 |
| 2008 - 09 | 45.77 | 686.55 | 586.59 | 99.96 |
| 2009 – 10 | 46.12 | 691.80 | 535.88 | 155.92 |
| 2010 – 11 | 46.46 | 696.90 | 606.13 | 90.77 |
| 2011 – 12 | 67.27 | 1009.05 | 722.85 | 286.20 |

## 2. இயக்குதல் மற்றும் பராமரிப்பு

### (i) செயலாக்க பரப்பளவு

2011-12ல், 42 உள்ளாட்சி அமைப்புகளை உள்ளடக்கி சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்டதன் விளைவாக சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயலாக்கப் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவடைந்துள்ளது.

### (ii) குடிநீர் வழங்கல்

வாரியம், தனது சேவைகளை வழங்க, விரிவான வசதிகளையும், தொடரமைப்புகளையும் பெற்றுள்ளது. 1978ல் உருவாக்கப்பட்ட வாரியம் தனது சேவையிலும், அடிப்படை கட்டமைப்பிலும் விரிவான வளர்ச்சி அடைந்துள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நுண்கிருமிகள் அகற்றப்பட்டு 16 பிரதான மற்றும் 30 சிறிய நீரேற்று நிலையங்கள் மற்றும் 5,275 கி.மீ நீளமுள்ள பகிர்மானக் குழாய்கள் மூலம் சென்னை நகருக்கு வழங்கப்படுகிறது. 2011-12ல் 9 கி.லி கொள்ளளவு கொண்ட 187 லாரிகள் மற்றும் 6 கி.லி கொள்ளளவு கொண்ட 77 லாரிகள் மூலம் 28 இடங்களிலுள்ள நீர் நிரப்பும் முனையங்களிலிருந்து சராசரி 2,000 நடைகள் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டது.

### iii) குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள்

புழல் ஏரியிலிருந்து பெறப்படும் நீர் புழல், சூரப்பட்டு (01.08.2009)அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டது) மற்றும் கீழ்பாக்கத்தில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பட்டு, சென்னை மாநகருக்கு விநியோகிக்கப் படுகின்றது. செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (19.07.2007 அன்று செயலாக்கப்பட்டது) சுத்திகரிக்கப்பட்டு சென்னைக்கு வழங்கப்படுகிறது.

வீராணம் ஏரியின் நீர், வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பட்டு அங்கிருந்து சென்னை நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. மேலும் மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி; சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (31.07.2010 முதல் இயங்கி வரும்) கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் நீர் பெறப்படுகிறது.

| வ எண் | குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | நிறுவப்பட்ட ஆண்டு | தற்போதைய சுத்திகரிப்பு | இடைவெளிக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | கீழ்ப்பாக்கம் | 270 | 1914 2005ல் புதுப்பிக்கப்பட்டது | 235 | ஏரியிலிருந்து நீர் பெறும் கால்வாய் புதுப்பிக்கப்பட வேண்டும் |
| 2 | புழல் | 300 | 1996 | 210 | கூடுதலாக நீர் உள் வாங்கும் அமைப்பு ஏற்படுத்தல் வேண்டும் |
| 3 | வீராணம் | 180 | 2004 | 180 | – |
| 4 | செம்பரம்பாக்கம் | 530 | 2007 | 266 | கூடுதலான நீர் அனுப்பும் குழாய் பதிக்கப்பட வேண்டும் |
| 5 | சூரப்பட்டு | 14 | 2009ல்தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து மேற்கொள்ளப்பட்டது | 11.5 | |
| 6 | கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் - மீஞ்சூர் | 100 | 2010 | 100 | |
| | மொத்த சுத்திகரிப்புத் திறன் | 1394 | | | |

## iv) மழைநீர்ச் சேகரிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சீரிய தொலைநோக்கான முயற்சியின் பயனாக தமிழ்நாடு மழைநீர்ச் சேகரிப்பில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. இதன் ஒரு பகுதியாக சென்னைப்பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால், சென்னை மாநகரில் மழைநீர்ச் சேகரிப்பு முறைகளை பொது மக்களிடம் பிரபலப்படுத்தும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைககளின் மூலம் சென்னை மாநகரில் சுமார் 8,00,000 மழைநீர்ச் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. மழைநீர்ச் சேகரிப்பு கட்டமைப்புகளை முறையாக பராமரிப்பதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு முன்பு சுமார் 40% விழுக்காடு என்றளவில் இருந்த பராமரிப்பு ஏற்பாடுகள் அதன்பின் சுமார் 90% விழுக்காடு என்றளவிற்கு உயர்ந்தது.

சென்னை மாநகரில் மழைநீர்ச் சேகரிப்பு முறைகள் மற்றும் அதன் பராமரிப்பு வழிமுறைகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நாளிதழ்கள், தொலைக்காட்சி, பண்பலை வானொலி, துண்டு பிரசுரங்கள், விளம்பர பலகைகள் மற்றும் செயல்முறை விளக்கத்துடன் கூடிய மிதவை ஊர்தி ஆகியவற்றின் மூலம் பிரச்சாரங்களை மேற்கொண்டது.

## v) சென்னைக் குடிநீர் வாரியம் நீரின் தரத்தினை மேம்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள்

426 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டு விரிவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகரம் 15 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மாநகரத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணியினை சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது.

அவ்வாறு மக்களுக்கு வழங்கிவரும் குடிநீரின் தரத்தை வாரியத்தின் தர உறுதி பிரிவு தினமும் 150 நீர்மாதிரிகளை சேகரித்து, அதில் உள்ள எஞ்சிய குளோரின் அளவினையும், 60 நீர்மாதிரிகளில் உள்ள நுண்ணுயிரிகளையும் ஆய்வு செய்து தரத்தினை உறுதிசெய்கின்றனர். மேலும் 200 பணிமனை அலுவலக கள ஊழியர்களினால் 2500 நீர்மாதிரிகளில் உள்ள எஞ்சிய குளோரின் சோதனை செய்யப்படுகிறது.

கீழ்ப்பாக்கத்தில் அமைந்துள்ள வாரியத்தின் தர உறுதி பிரிவின் நீர் ஆய்வுக்கூடத்தில் நீர் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் உரிய பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு சீரமைக்கப்படுகிறது. குளோரின் குறைபாடுகளை களப்பொறியாளர்களின் கவனத்திற்கு உடனடியாக தெரிவிக்கப்படுகிறது. களப்பொறியாளர்களால் குளோரின் குறைபாடுகளை நீக்கப்பட்ட பிறகு தரத்தினை உறுதி செய்யும் வரை செயல்படுகிறது.

களப்பொறியாளர்கள் மாசு அடைந்த பகுதிகளின் புகாரினை ஆராய்ந்து தேவைப்படின் அப்பகுதியில் உள்ள நீர்க்குழாய்களை அகற்றிவிட்டு, தேவையான குடிநீரை லாரியின் மூலம் மக்களுக்கு விநியோகிக்கின்றனர். மாசினை களைந்த பிறகு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

நீரினால் பரவும் காலரா போன்ற தொற்று நோய்கள் பரவும் நேரத்தில் தர உறுதி பிரிவின் களப்பொறியாளர், தொற்று நோய் மருத்துவமனையை தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் குடிநீர் தரத்தை ஆய்வு செய்து மேம்படுத்துகின்றனர்.

பருவநிலை மாறும் காலங்களில் அனைத்து நீர்சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் வழங்கும் நிலையங்களில் உள்ள மேல் நிலைத்தொட்டி மற்றும் கீழ்நிலைத்தொட்டிகள் சுத்தம் செய்யப்பட்டு தேவையான அளவு குளோரின் கலக்கப்படுகிறது. கடைநிலை குழாயில் செல்லும் நீருக்குத் தேவையான எஞ்சிய குளோரின் அளவு பராமரிக்கப்படுகிறது.

மேலும் தர உறுதி களப்பொறியாளர் சென்னை மாநகராட்சியின் சுகாதார அலுவலர் மற்றும் பொது சுகாதார இயக்குநருடன் இணைந்து நீரின் தரத்தினை இந்தியதர அளவுப்படி பராமரிக்கிறார்கள்.



vi) கழிவு நீரகற்றல்:

வீட்டுக் கழிவு நீர் இணைப்புகளிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீர் 3,643 கி.மீ நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்கள் மூலம் 214 கழிவு நீரகற்று நிலையங்களைச் சென்றடைகிறது. அங்கிருந்து சென்னையில் 6 இடங்களில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 558 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 11 கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு சுத்திகரிக்கப்படுகிறது. நகரின் கழிவுநீர் அகற்றும் அமைப்பானது 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் தனித்தனியாக கழிவுநீர் சேகரிப்பு, அனுப்புதல், சுத்தம் செய்தல் மற்றும் வெளியேற்றும் வசதியைக் கொண்டுள்ளது.

vii) பயன்பாட்டிலுள்ள கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள்

| வ.எண் | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | பயன்படும் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (2பிரிவுகள்-23+40) | 63 | 63 |
| 2 | கொடுங்கையூர் (3 பிரிவுகள் – 110 + 80 + 80) | 270 | 155 |
| 3 | கோயம்பேடு ( 2 பிரிவுகள் 34 + 60) | 94 | 80 |
| 4 | பெருங்குடி ( 2 பிரிவுகள் 54 + 60) | 114 | 104 |
| 5 | வில்லிவாக்கம் ( 1 பிரிவு 5) | 5 | 5 |
| 6 | ஆலந்துார் ( 1 பிரிவு 12) | 12 | 12 |
| | மொத்தம் (11 பிரிவுகள்) | 558 | 419 |

புதிதாக சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாளச்சாக்கடை வசதிகள் அமைக்கும் பணிகள் நிறைவேற்றியவுடன் ஏற்கனவே உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு கொள்ளளவுகள் மற்றும் தற்சமயம் கட்டப்பட்டுவரும் சுத்திகரிப்பு நிலையமான நெசப்பாக்கம் (54 எம்.எல்.டி) கொள்ளளவு முழுமையாக பயன்படுத்தப்படும்.

கழிவு நீரகற்றம் பணியை இயந்திரமயமாக்குதல்

கழிவுநீர் அமைப்பை சுத்தம் செய்வதற்காக மனிதர்கள், மனித நுழைவாயிலில் இறங்குவதற்கு உயர்நீதி மன்றம் தடையுத்தரவு பிறப்பித்ததை அடுத்து, சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீரகற்று அமைப்பில் ஏற்படும் அடைப்புகளை இயந்திரங்கள் மூலம் நீக்குவதற்கு ஜெட் ராடிங் இயந்திரங்கள், சிறப்பு உறிஞ்சு இயந்திரங்கள் மற்றும் தூர்வாரும் இயந்திரங்களை பயன்படுத்திவருகிறது. 2011-12ல் தூர்வாரும் இயந்திரங்கள், 83 ஜெட் ராடிங் இயந்திரங்கள் மற்றும் 3 சிறப்பு உறிஞ்சு இயந்திரங்கள் சென்னை நகர கழிவுநீரமைப்பைப் பராமரிக்க பயன்படுத்தப்பட்டன.

viii)) தானியங்கி கண்காணிக்கும் நடவடிக்கை புவியிடங்காட்டிடும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் ஊர்திகள் செல்லும் வழித்தடத்தினைக் கண்டறிந்து குடிநீர் வாரிய ஊர்திகளிலும் புவியிடங்காட்டிடும் அமைப்புக்களை பொருத்தும்(GPS)திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

ix) புகார் கண்காணிப்பு அமைப்பு

வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவை பெரும்பரப்பு வளையமைப்பு மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் தங்களது புகார்களை வாரியத்தின் ஏதாவது ஒரு அலுவலகத்தில் தொலைபேசி மூலம் அல்லது நேரடியாகப் பதிவு செய்யலாம், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள், புகார் கண்காணிப்பு அமைப்பின் மூலம், உரிய நடவடிக்கை உடனுக்குடன் எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பணிமனை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. புகார்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்தும் இந்த அமைப்பின் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையையும் (எஸ்.எம்.எஸ்) செயல்படுத்தியுள்ளது. இதன் மூலமாக நுகர்வோர் தங்களது புகார்களை தொலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்வதுடன், வாரியத்திடமிருந்து புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையையும் குறுந்தகவல் சேவை மூலமாக பெற முடியும். வாரியத்தால் அவ்வாறு பெறப்படும் புகார்கள், தானாகவே புகார் கண்காணிப்பு அமைப்பு மூலமாக சம்பந்தப்பட்ட பணிமனை பொறியாளர்களுக்கு புகார்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்காக குறுந்தகவல் சேவை வாயிலாகவே அனுப்பப்படுகிறது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக அவர்கள் கொடுத்துள்ள அலைபேசி எண்ணுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் தரப்படுகிறது.

**குறைபாடுகளைக் கையாளுதல் மற்றும் தீர்க்கும் முறை:**

பணிமனை, பகுதி மற்றும் தலைமை அலுவலகங்களில் பெறப்படும் புகார்தாரரின் பெயர், முகவரி, புகார் விவரம், நிவர்த்தி செய்யப்பட்ட நாள் போன்ற விவரங்களை கணிப்பொறியில் பதிவு செய்து முதுநிலை பொறியாளர்களைக் கொண்டு ஆய்வு செய்வதன் மூலம் பொது மக்களின் புகார்கள் கையாளுதல் மற்றும் நிவர்த்தி செய்தல் முறைகளை வாரியம் மேலும் சீர்படுத்தியுள்ளது.

தொடர்ந்து வரும் புகார்களை ஆய்வு செய்து அவை தொடரா வண்ணம் நிவர்த்தி செய்ததின் மூலம் புகார்கள் பெருமளவில் 2011–12ஆம் ஆண்டில் 2,35,277 புகார்கள் நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டன.

## 2010 2011 ம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பணிகளின் பட்டியல்

குடிநீர்

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | மாதவரம் நகராட்சிக்கு முழுமையான குடிநீர் வழங்கும் திட்டம் | 55.00 | 21.02.11 |

கழிவுநீர்

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | அம்பத்தூர் பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடை திட்டம் அமைக்கும் பணி சிப்பம்-1 (மீதமுள்ள பணிகள்), அம்பத்தூர்நகராட்சியில் பகுதி 1A, I, II, III, மற்றும் IV ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டக் குழாய்கள் அமைத்தல், கழிவுநீரகற்று நிலையம் அமைத்தல் மற்றும் கழிவுநீரகற்றும் குழாய்கள் பதிக்கும் பணி | 35.86 | 05.05.10 |
| 2. | மேற்கு தாம்பரம் தர்காஸ் சாலையில் நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் கழிவு நீர்ச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (தொடர்ச்சியான திரள்பாங்கு உலை தொழில்நுட்ப அடிப்படையில்) வடிவமைத்தல், கட்டுமானம் நிலைநிறுத்தல் மற்றும் இயக்கத் துவக்குதல் | 29.00 | 20.02.09 |
| 3. | திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலையத்திற்கு சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு கழிவுநீர் வசதி அமைத்தல் | 1.34 | 13.08.10 |
| 4. | தாம்பரம் நகராட்சியில், மண்டலம் - 4ல் உள்ள தொடர் கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து புதிதாக அமைக்கப்பட இருக்கும் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் வரை 700 மி.மீ விட்டமுள்ள வார்ப்பிரும்புக் குழாய் பதித்தல் மற்றும் மண்டலம் - II கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து மண்டலம் - IV கழிவுநீரேற்று நிலையம் வரை 400 மி.மீ விட்டமுள்ள வார்ப்பிரும்புக் குழாய் பதித்தல் | 21.36 | 20.02.09 |

## 2011 - 2012 ம் ஆண்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பணிகளின் பட்டியல்

குடிநீர்

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | பெரும்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான வசதி அமைத்தல் | 1.07 | 26.09.11 |
| 2. | தேர்வாய்கண்டிகையிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் பூங்காவிற்கு குடிநீர் வசதி அமைத்தல் - தொகுப்பு - I | 1.30 | 10.11.11 |
| 3. | தேர்வாய்கண்டிகையிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகத்தின் தொழில் பூங்காவிற்கு குடிநீர் வசதி அமைத்தல் - தொகுப்பு - II | 2.10 | 10.11.11 |
| 4. | தேர்வாய்கண்டிகையிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் பூங்காவிற்கு குடிநீர் வசதி அமைத்தல் - தொகுப்பு - III | 22.60 | 10.11.11 |
| 5. | தேர்வாய்கண்டிகையிலுள்ள தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் பூங்காவிற்கு குடிநீர் வசதி அமைத்தல் -தொகுப்பு - IV | 28.00 | 10.11.11 |
| 6. | ஒக்கியம் - துரைப்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான 8048 வீடுகளுக்கு குடிநீர் வசதி அமைத்தல் | 3.53 | 10.05.12 |
| 7. | செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி மாற்றுப்பாதை சந்திப்பு வரை (சவீதா பல் மருத்துவ கல்லூரி) 2000 மி.மீ விட்டமுள்ள உருக்கு இரும்பு குழாய் வழங்குதல், பதித்தல், இணைத்தல் பரிசோதனை செய்தல் மற்றும் இயக்கத் துவக்குதல் | 43.75 | 28.02.12 |
| 8. | மீனம்பாக்கத்திற்கு குடிநீர் வசதி அமைத்தல் | 0.39 | 07.02.12 |

கழிவுநீர்

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடியில்) | நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | ஒக்கியம் - துரைப்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான 8048 வீடுகளுக்கு கழிவுநீர் வசதி அமைத்தல் | 2.13 | 10.05.12 |
| 2. | மீனம்பாக்கத்திற்கு கழிவுநீர் வசதி அமைத்தல் | 3.50 | 07.02.12 |

# நிதி குறித்த திட்டப் பணிகள்

| வ. எண் | திட்டப்பணி | ஒப்பந்த மதிப்பு ரூபாய் இலட்சத்தில் | நிதி படிவம் | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | செயல் | நிதிபற்றிய (ரூ) |
| | குடிநீர் திட்டம் | | | | |
| 1 | 100 எம் எல் டி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 533.38 + 500.30 | அரசு மானியம் | 89.33% | 66.83% |
| 2 | அம்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 18276.62 | ஜநேதேநபுதிநி | 88.57% | 56.96% |
| 3 | நெற்குன்றம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1460.22 | ஜநேதேநபுதிநி | 17.32% | 17.94% |
| 4 | மதுரவாயல் குடிநீர் வழங்கும் திட்டம் | 1690.67 | ஜநேதேநபுதிநி | 70.53% | 58.80% |
| 5 | உள்ளகரம் புழுதிவாக்கம் குடிநீர் வழங்கும் திட்டம் | 1750.00 | ஜநேதேநபுதிநி | 61.78% | 37.66% |
| 6 | திருவொற்றியூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 7120.00 | ஜநேதேநபுதிநி | 43.65% | 41.55% |
| 7 | ஆவடி குடிநீர் வழங்கும் திட்டம் | 8329.00 | ஜநேதேநபுதிநி | 87.80% | 61.46% |
| 8 | ஆலந்தூர் குடிநீர் வழங்கும் திட்டம் | 3738.00 | ஜநேதேநபுதிநி | 49.45% | 46.73% |
| 9 | சென்னை நகர குடிநீர் வினியோக மேம்பாட்டு பணிகள் | 31266.00 | ஜநேதேநபுதிநி | 89.66% | 66.83% |
| 10 | தகவல் தொழில் நுட்ப சாலை திட்டம் | 4177.00 | ஜநேதேநபுதிநி | 82.93% | 89.79% |
| | கழிவுநீர் திட்டம் | | | | |
| 11 | மதுரவாயல் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4691.67 | ஜநேதேநபுதிநி | 38.03% | 22.08% |
| 12 | போரூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 3441.29 | ஜநேதேநபுதிநி | 20.05% | 18.37% |
| 13 | அம்பத்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 12384.00 | ஜநேதேநபுதிநி | 33.96% | 29.39% |
| 14 | உள்ளகரம் புழுதி வாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2780.13 | ஜநேதேநபுதிநி | 31.25% | 24.18% |
| 15 | பெருங்குடி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 2195.04 | ஜநேதேநபுதிநி | 49.06% | 24.27% |
| 16 | பள்ளிக்கரணை பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4611.68 | ஜநேதேநபுதிநி | 32.37% | 18.30% |
| 17 | திருவொற்றியூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 5475.00 | ஜநேதேநபுதிநி | 71.48% | 27.62% |
| 18 | மாதவரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 4133.00 | ஜநேதேநபுதிநி | 77.75% | 49.52% |
| 19 | ஆவடி பாதாளச் சாக்கடைத் திட்டம் | 17352.00 | ஜநேதேநபுதிநி | 53.04% | 46.88% |
| 20 | திருமழிசை பாதாளச் சாக்கடைத் திட்டம் | 1624.33 | ஜநேதேநபுதிநி | 52.87% | 44.46% |
| 21 | தாம்பரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 14464.00 | ஜநேதேநபுதிநி | 45.86% | 20.30% |
| 22 | பெருங்குடி கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் | 5244.00 | ஜநேதேநபுதிநி | 100% | 84.50% |
| 23 | நெசப்பாக்கம் – 54 எம். எல். டி | 4843.52 | ஜநேதேநபுதிநி | 84% | 62.37% |

## நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்

| மக்கள் தொகை- 15,00,000 | தெருக்கள்-2794 |
|---|---|

நிதி: மத்திய அரசின் கூடுதல் நிதி உதவி

அரசு ஆணை எண்.108, நாள் 29.06.2003.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (கோடியில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 97.46% | 519.82 |
| தமிழக அரசு | 2.54% | 13.56 |
| மொத்தம் | 100% | 533.38 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 740.52 | 533.38+500.30 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 30.12.09 | 23.02.10 | 31.12.11 | 31.12.13 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வழங்குதல் | - | - | 48% | 50% | 98% |
| நிறுவுதல் | - | - | 20% | 60% | 80% |
| கட்டமைப்பு | - | 5% | 65% | 20% | 90% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 300.00 | 126.84 | 426.84 |
| செலவு | 164.65 | 191.81 | 356.46 |






## கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திலிருந்து குடிநீரை எடுத்துச் செல்லும் கட்டமைப்பு (நெம்மேலி)

நிதி: மத்திய அரசு
பயனாளி : சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
அரசு ஆணை எண்.108, நாள் 29.06.2009.

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 14561.60 | 12249.70 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 20 | 30.12.09 | 24.02.10 | 23.10.11 | Feb- 2013 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| குழாய் பதித்தல் (மீட்டரில்) | 64370 | 45920 | 12320 | 58240 |
| கீழ்நிலை தொட்டி கட்டுதல் மற்றும் நீரேற்று நிலையம் கட்டுதல் (4எண்ணிக்கை) | 100% | 42% | 50% | 92% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 30000.00 | 12684.00 | 42684.00 |
| செலவு | 7394.63 | 3716.37 | 11111.00 |





# அம்பத்தூர் குடிநீர் வழங்கல் திட்டம்

| மக்கள் தொகை 4,42,252 | | தெருக்கள்-2350 | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2009 | 2024 | 2039 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்.330, ந.நி.மற்றும் கு.வ.துறை, நாள் 17.07.09, ரூ.26708 இலட்சத்தில்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 9347.80 |
| தமிழக அரசு | 15% | 4006.20 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 13354.00 |
| மொத்தம் | 100% | 26708.00 |



மேல்நிலை தொட்டி–அத்திப்பட்டு

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 20480 | 18276.62 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 30.09.09 | 28.10.09 | 27.10.11 | 30.06.13 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய்கள் பொருத்துதல் (மீட்டரில்) | 501880 | 89074 | 320562 | 73148 | 482784 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 16846 | 0 | 8992 | 4191 | 13183 |
| வீட்டு குழாய் இணைப்புகள் (எண்ணிக்கையில்) | 53766 | 0 | 26397 | 19285 | 45682 |
| மேல்நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 22no | 1% | 73% | 18% | 92% |
| கீழ்நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 11no | 2% | 48% | 40% | 90% |
| நீரேற்று நிலையம் கட்டுதல் (எண்கள்) | 19no | 2% | 14% | 74% | 90% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 3100.00 | 9450.00 | 1360.00 | 13910.00 |
| செலவு | 4364.48 | 7798.54 | 3048.68 | 15211.70 |



கீழ்நிலை தொட்டி மற்றும்
மேல்நிலை தொட்டி–அத்திப்பட்டு

# நெற்குன்றம் குடிநீர் வழங்கல் திட்டம்



| மக்கள் தொகை- 12,869 | | | தெருக்கள்-562 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்.43 நாள் : 26.02.10, ரூ.1917 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 670.95 |
| தமிழக அரசு | 15% | 287.55 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 958.50 |
| மொத்தம் | 100% | 1917.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 1730.00 | 1460.22 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 18 | 28.07.10 | 24.01.11 | 23.07.12 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 11-12 | Cumulative |
|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 66540 | 48388 | 48388 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 1000 | - | - |
| ஊட்டுக் குழாய் (மீட்டரில்) | 3672 | - | - |
| வீட்டு குழாய் இணைப்பு (எண்கள்) | 12921 | 3386 | 3386 |
| மேல்நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 4 | 5% | 5% |
| கீழ் நிலை தொட்டி கட்டுதல் (எண்கள்) | 1 | - | - |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 11-12 | Cumulative |
|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 680.00 | 680.00 |
| செலவு | 343.90 | 343.90 |



# மதுரவாயல் குடிநீர் வழங்கல் திட்டம்

| மக்கள் தொகை– 1,31,200 | | தெருக்கள்-740 | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்



மேல்நிலை தொட்டி–ஆலப்பாக்கம்

அரசு ஆணை எண்: 407,நாள் : 31.08.2007, ரூ. 2330 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 815.50 |
| தமிழக அரசு | 15% | 349.50 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 1165.00 |
| மொத்தம் | 100% | 2330.00 |

| சிப்பம் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| I | 233.00 | 275. 27 |
| II | 1910.00 | 1415.40 |

| சிப்பம் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| I | 15 | 05.05.08 | 22.08.08 | 21.11.09 | ஆகஸ்ட் -09 |
| II | 24 | 25.03.10 | 23.04.10 | 22.04.12 | 22.12.13 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 106659 | 12923 | - | 35410 | 52790 | 101123 |
| விசைக் குழாய் (மீட்டரில்) | 577 | 500 | 77 | - | - | 577 |
| வீட்டு குழாய் இணைப்பு (எண்ணில்) | 14945 | - | - | 250 | 2335 | 2585 |
| மேல்நிலை தொட்டி கட்டுதல் (எண்ணில்) | 4no | - | - | 47% | 23% | 70% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 200.00 | 100.00 | 370.00 | 125.00 | 795.00 |
| செலவு | 6.60 | 473.64 | 501.03 | 388.74 | 1370.01 |

## உள்ளகரம் புழுதிவாக்கம் குடிநீர் வழங்கல் திட்டம்



| மக்கள் தொகை- 1,09,789 | | | தெருக்கள்-497 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை (டி) எண்.619 நாள்: 20.12.07, ரூ.2424 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 848.40 |
| தமிழக அரசு | 15% | 363.60 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 1212.00 |
| மொத்தம் | 100% | 2424.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 2242.00 | 1750.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 21.06.10 | 09.07.10 | 08.07.12 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 77891 | 16849 | 54276 | 63574 |
| ஊட்டுக்குழாய் (மீட்டரில்) | 5650 | - | 4758 | 4758 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 4050 | - | 1178 | 1178 |
| மேல்நிலை தொட்டி கட்டுதல் (6எண்கள்) | 100% | 7% | 36% | 43% |
| கீழ்நிலை தொட்டி கட்டுதல் (6எண்கள்) | 100% | 30% | 41% | 81 |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 303.00 | - | 314.80 | 671.22 | 1289.02 |
| செலவு | - | - | 347.00 | 565.92 | 912.92 |

# திருவொற்றியூர் குடிநீர் வழங்கல் திட்டம்

| மக்கள் தொகை- 3,78,000 | | | தெருக்கள்-1235 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்(2டி) 46,நநிமற்றும் குவ துறை,நாள்: 02.06.09, ரூ.8511.70 இலட்சம்.




| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 2979.10 |
| தமிழக அரசு | 15% | 1276.75 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 4255.85 |
| மொத்தம் | 100% | 8511.70 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 8800.00 | 7120.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 06.05.10 | 20.07.10 | 19.07.12 | 19.01.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 172775 | 19440 | 98805 | 118245 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 13336 | - | 4295 | 4295 |
| வீட்டு குழாய் இணைப்பு (எண்ணிக்கையில்) | 22719 | - | 9990 | 9990 |
| குடிநீர் பகிர்மான நிலையம்(6எண்ணிக்கை) | 100% | 3% | 27% | 30% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 1064.00 | - | - | 2763.48 | 3827.48 |
| செலவு | - | - | 2359.33 | 1177.31 | 3536.64 |


# ஆவடி குடிநீர் வழங்கல் திட்டம்

| மக்கள் தொகை- 4,29,000 | | | தெருக்கள்-1445 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்.20 நாள்: 22.01.08, ரூ.10384 இலட்சம்.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 3634.00 |
| தமிழக அரசு | 15% | 1558.00 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 5192.00 |
| மொத்தம் | 100% | 10384.00 |




ஆவடி குடிநீர் வழங்கல் திட்டம் சிப்பம் I

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 10384.00 | 8329.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 09.02.09 | 27.02.09 | 10.11.11 | பிப்ரவரி-2014 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 329221 | 78184 | 172736 | 59585 | 310505 |
| குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் (மீட்டரில்) | 18128 | 5519 | 5530 | 3251 | 14300 |
| மேல் நிலை தொட்டி (8 எண்ணிக்கை) | 100% | 2% | 77% | 6% | 85% |
| கீழ்நிலை தொட்டி (7 எண்ணைிக்கை) | 100% | 21% | 68% | 4% | 93% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 2500.00 | 2615.00 | 1175.00 | 6290.00 |
| செலவு | 3898.94 | 1064.56 | 1418.21 | 6381.71 |

## ஆலந்தூர் குடிநீர் வழங்கல் திட்டம்

| மக்கள் தொகை- 2,86,000 | | | தெருக்கள்-816 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2010 | 2025 | 2040 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்



அரசு ஆணை (2டி)எண்.57, நநிமற்றும் குவ துறை ( நநி 2)துறை நாள்:23.06.09, ரூ.6439.00 இலட்சம்.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 2253.60 |
| தமிழக அரசு | 15% | 1965.90 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 3219.50 |
| மொத்தம் | 100% | 6439.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 6439.00 | 3738.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 01.12.09 | 23.12.09 | 22.12.11 | 30.11.13 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பகிர்மான குழாய் (மீட்டரில்) | 14756 | 77045 | 40875 | 117920 |
| ஊட்டுக்குழாய் (மீட்டரில்) | 10804 | 1500 | 2800 | 4300 |
| கீழ்நிலை தொட்டி கட்டுதல் (5எண்ணிக்கை) | 100% | 58% | 30% | 88% |
| மேல் நிலை தொட்டி கட்டுதல் (6எண்ணிக்கை) | 100% | 30% | 27.5% | 57.5% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 809.46 | 856.89 | 685.84 | 1045.15 | 3397.94 |
| செலவு | 809.46 | 856.89 | 654.00 | 688.86 | 3009.21 |

# சென்னை நகர குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள்

பயனாளிகள் – சென்னை நகரம்
நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்



அரசு ஆணை எண்.42, நாள் 19.02.2007.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 11270.00 |
| தமிழக அரசு | 15% | 4830.00 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 16100.00 |
| மொத்தம் | 100% | 32200.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 32379.00 | 31266.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 12 to 24 | 29.08.07 | 18.10.2007 | 09.02.11 | மார்ச்-14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 07-08 | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| குடிநீர் பகிர்மான நிலையம் கட்டுதல் | 4 | 29% | 34% | 21% | 14% | 1% | 99% |
| குடிநீர் பகிர்மான அமைப்பை வலுப்படுத்துதல் | 251802 | - | 49450 | 59560 | 28954 | 47945 | 185909 |
| நீர்க்கசிவு கண்டறிதல் மற்றும் சரி செய்தல் குழாய்களை புதுப்பித்தல் | 51400 | - | - | 13593 | 21113 | 10919 | 45625 |
| வீட்டுக் குழாய் இணைப்பை புதுப்பித்தல் | 8533 | - | - | 1939 | 3317 | 2278 | 7534 |
| மண்டலங்களை பிரிப்பதற்கான வால்வு பொருத்துதல் | 700 | - | - | 54 | 232 | 403 | 689 |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 07-08 | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 2012.50 | 6528.99 | 5601.99 | 5193.14 | 2183.02 | 21519.64 |
| செலவு | 2033.77 | 5278.66 | 8895.57 | 3128.62 | 2183.02 | 21519.64 |

## தகவல் தொழில்நுட்ப சாலையின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் திட்டம்



| மக்கள் தொகை-6,41,000 | | | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2006 | 2021 | 2036 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை (டி) எண்.106, நநிமற்றும் குவ நாள் 13.03.2007.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 1462.00 |
| தமிழக அரசு | 15% | 626.00 |
| TUFIDCO கடன் | 25% | 1044.50 |
| சுய பங்களிப்பு | 25% | 1044.50 |
| மொத்தம் | 100% | 4177.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 4785.00 | 4177.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 6 to 12 | 24.03.07 | 23.04. 07 | 22.04.08 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| குடிநீர் பிரதான குழாய் (மீட்டரில்) | 34140 | 24595 | 6340 | 3205 | - | 34140 |
| குடிநீர் பகிர்மான குழாய் (மீட்டரில்) | 34000 | 8140 | 9804 | 4356 | 11700 | 34000 |
| கழிவுநீர் சேகரிக்கும் குழாய் (மீட்டரில்) | 33180 | 17173 | 4087 | 10821 | 1099 | 33180 |
| கழிவுநீர் உந்து விசை குழாய் (மீட்டரில்) | 12433 | - | - | 7469 | 4664 | 12133 |
| நீரேற்று நிலையம் கட்டுதல் (1 எண்ணிக்கை.) | 100% | - | 100% | - | - | 100% |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல் (2 எண்ணிக்கை.) | 100% | - | - | - | - | - |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 905.22 | 783.22 | 728.32 | 78.60 | 2495.36 |
| செலவு | 1500.11 | 1134.74 | 818.71 | 297.00 | 3750.56 |

# மதுரவாயல் பாதாள சாக்கடை திட்டம்



| மக்கள் தொகை- 1,31,200 | | | தெருக்கள்-740 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்2 (டி) 47, நாள் 02.06.2009, ரூ5745 லட்சம்.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 2010.93 |
| தமிழக அரசு | 15% | 861.80 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 2872.75 |
| மொத்தம் | 100% | 5745.50 |

| சிப்பம் | திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| I | 3125.00 | 2177.28 |
| II | 2971.00 | 2514.39 |

| சிப்பம் | ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| I | 24 | 28.07.10 | 15.09.10 | 14.09.12 | மார்ச் -14 |
| II | 24 | 18.08.09 | 05.11.09 | 04.11.11 | மார்ச் -14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் (மீட்டரில்) | 81940 | 4700 | 13600 | 21392 | 39692 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 3280 | 260 | 663 | 931 | 1854 |
| கழிவுநீர் வீட்டு இணைப்பு குழாய்கள் (எண்ணிக்கை) | 12400 | - | 1206 | 2810 | 4016 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டரில்) | 9950 | - | 1723 | 1242 | 2965 |
| கழிவு நீரகற்று நிலையம் (எண்ணிக்கை) | 6 | - | 16% | 7% | 23% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 400.00 | 350.00 | 300.00 | 1050.00 |
| செலவு | 64.85 | 762.56 | 441.26 | 1268.67 |

# போரூர் பாதாள சாக்கடை திட்டம்

| மக்கள் தொகை- 1,28,000 | | | தெருக்கள்-451 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்




அரசு ஆணை எண்2 (டி) 66, நாள்: 20.07.09, ரூ.3829.00 இலட்சம்.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 1340.15 |
| தமிழக அரசு | 15% | 574.35 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 1914.50 |
| மொத்தம் | 100% | 3829.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 3829.00 | 3441.29 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 21.06.10 | 16.09.10 | 15.09.12 | மார்ச்-14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் (மீட்டரில்) | 60440 | 6090 | 9751 | 15841 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 2223 | 333 | 595 | 928 |
| கழிவுநீர் வீட்டு இணைப்பு குழாய்கள் (எண்ணிக்கை) | 13338 | 265 | 1172 | 1437 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டரில்) | 4107 | - | - | - |
| கழிவு நீரகற்று நிலையம் (எண்ணிக்கை) | 4 | 5% | 16.5% | 21.5% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 628.00 | - | 50.00 | 678.00 |
| செலவு | 150.00 | - | 553.54 | 703.54 |

# அம்பத்தூர் பாதாள சாக்கடை திட்டம்




| மக்கள் தொகை - 2,57,319 | | தெருக்கள் -1100 | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2009 | 2024 | 2039 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை (2 டி) எண்.81, நாள்: 22.05.08,ரூ13091.00 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 4581.85 |
| தமிழக அரசு | 15% | 1963.65 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 6545.50 |
| மொத்தம் | 100% | 13091.00 |



| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 15522.00 | 12384.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 29.06.09 | 16.09.09 | 15.09.11 | 31.03.14 |


திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் (மீட்டரில்) | 180879 | 16634 | 20338 | 28760 | 65732 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 6860 | 718 | 1183 | 1668 | 3569 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள்(மீட்டரில்) | 33422 | 138 | 3331 | 9020 | 12489 |
| கழிவுநீர் வீட்டு இணைப்பு குழாய்கள்(எண்ணிக்கை) | 41160 | 710 | 2100 | 2982 | 5792 |
| கழிவு நீரகற்று நிலையம் (18 எண்கள்) | 100% | 2% | 13% | 15% | 30% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 350.00 | 1500.00 | 2200.00 | 4050.00 |
| செலவு | 506.67 | 2045.93 | 1295.72 | 3848.32 |

## உள்ளகரம் புழுதிவாக்கம் பாதாள சாக்கடை திட்டம்




| மக்கள் தொகை- 1,09,789 | | தெருக்கள் -497 | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்2 (டி) 70, நாள்: 07.05.08, சுஎ.2808.00 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 982.82 |
| தமிழக அரசு | 15% | 421.20 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 1404.03 |
| மொத்தம் | 100% | 2808.05 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 3401.00 | 2780.13 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 07.12.10 | 24.01.11 | 23.01.13 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டரில்) | 67868 | 1459 | 18241 | 19700 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 2409 | 192 | 862 | 1054 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டரில்) | 9500 | - | 2301 | 2301 |
| கழிவு நீரகற்று நிலையம் (3 எண்கள்) | 100% | 3% | 25% | 28% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 142.50 | 208.50 | - | 947.42 | 1298.42 |
| செலவு | - | - | 247.00 | 432.08 | 679.08 |



## பள்ளிக்கரணை பாதாள சாக்கடை திட்டம்

| மக்கள் தொகை- 2,14,156 | | | தெருக்கள் -681 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2010 | 2025 | 2040 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்



அரசு ஆணை எண் (டி) 544, நாள்: 24.12.09, ரூ.5861.00 இலட்சம்.

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 2051.35 |
| தமிழக அரசு | 15% | 879.15 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 2930.50 |
| மொத்தம் | 100% | 5861.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 5253.00 | 4611.68 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 07.12.10 | 11.02.11 | 10.02.13 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டரில்) | 86459 | 198 | 37631 | 37829 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 3237 | 105 | 1782 | 1887 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டரில்) | 13521 | - | 1679 | 1679 |
| கழிவு நீரகற்று நிலையம் (4 எண்கள்) | 100% | - | 15% | 15% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 512.00 | - | 673.54 | 1648.68 | 2834.22 |
| செலவு | - | - | 461.00 | 611.62 | 1072.62 |

# திருவொற்றியூர் பாதாள சாக்கடை திட்டம்



| மக்கள் தொகை- 3,31,000 | | | தெருக்கள் -372 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2002 | 2017 | 2032 |

நிதி: தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்ட கடன்–III

அரசு ஆணை (டி) எண் 557, நாள்: 31.12.09 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம் –III நிதி

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்ட கடன்–III | 8.9% | 781.00 |
| தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு நிதி மானியம் | 3.4% | 300.00 |
| உள்ளாட்சிஅமைப்பு மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு | 8.2% | 719.00 |
| கூடுதல் மானியம் | 79.5 | 6963.00 |
| கட்டுமானத்திற்கான வட்டி | - | 94.00 |
| மொத்தம் | 100% | 8857.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 6128.00 | 5475.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 15 to 24 | 02.03.07 | 08.05.07 | 13.03.13 | 28.02.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 07-08 | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| கழிவுநீர் சேகரிக்கும் குழாய்கள் (மீட்டரில்) | 69840 | 15326 | 13144 | 16995 | 8996 | 5437 | 59898 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் | 7660 | - | - | - | - | 2055 | 2055 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 2625 | 723 | 520 | 721 | 347 | 187 | 2498 |
| கழிவுநீர் வீட்டு இணைப்பு குழாய்கள் (எண்ணிக்கை) | 78466 | 4030 | 10754 | 17154 | 17321 | 8132 | 57391 |
| கழிவு நீரகற்று நிலையம் (18 எண்ணிக்கை) | 100% | 27% | 13% | 3% | 3% | 2% | 48% |
| கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் | 100% | - | - | - | - | - | - |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 07-08 | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 400.00 | 250.00 | 520.00 | 852.00 | 280.00 | 2302.00 |
| செலவு | 267.63 | 245.46 | 418.54 | 540.11 | 974.90 | 2446.64 |

## மாதவரம் பாதாள சாக்கடை திட்டம்

| மக்கள் தொகை- 1,25,000 | | | தெருக்கள் -498 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி திட்டம்



அரசு ஆணை எண் (டி)132, நாள்:28.02.2011,ரூ.5022 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு நிதி | 25.47% | 1279.00 |
| மானிய நிதி கடன் | 60.73% | 3050.00 |
| உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு | 13.80% | 693.00 |
| மொத்தம் | 100% | 5022.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 5022.00 | 4133.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 12.01.09 | 03.03.09 | 02.03.11 | 28.02.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டர்) | 82421 | 14148 | 19970 | 30240 | 64358 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 2983 | 507 | 845 | 1227 | 2579 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டர்) | 7954 | - | 1803 | 4677 | 6480 |
| கழிவு நீரகற்று நிலையம் (6 எண்கள்) | 100% | 7% | 13% | 45% | 65% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 20.00 | 870.00 | 438.77 | 700.00 | 2028.77 |
| செலவு | 2.98 | 320.87 | 926.69 | 1236.53 | 2487.07 |



# ஆவடி பாதாள சாக்கடை திட்டம்



| மக்கள் தொகை- 4,29,000 | | | தெருக்கள் -1713 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2008 | 2023 | 2038 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்.62, நாள்: 12.04.08, ரூ.15805.00 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 5531.89 |
| தமிழக அரசு | 15% | 2370.81 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 7902.71 |
| மொத்தம் | 100% | 15805.41 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 15805.41 | 17352.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 30 | 31.12.08 | 24.02.09 | 03.04.14 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டர்) | 293642 | 69839 | 46444 | 82809 | 199092 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 10900 | 3113 | 1539 | 3137 | 7789 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டர்) | 31601 | 3070 | 7343 | 8522 | 18935 |
| கழிவு நீரகற்று நிலையம் (19 எண்கள்) | 100% | 19% | 28% | 19% | 66% |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (2 எண்கள்) | 100% | - | - | - | - |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 2095.00 | 3050.00 | 3100.00 | 8245.00 |
| செலவு | 1822.49 | 3295.86 | 2291.65 | 7410.00 |

## திருமழிசை பாதாள சாக்கடைத் திட்டம்




கழிவு நீரகற்று நிலையம் – திருமழிசை பாதாள சாக்கடைத் திட்டம்

| மக்கள் தொகை- 37,264 | | | தெருக்கள் -111 |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2010 | 2025 | 2040 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை (டி) எண் 544, நநி மற்றும் குவ (டிபி2) துறை, நாள்: 24.12.09, ரூ.2047.00 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 716.56 |
| தமிழக அரசு | 15% | 307.10 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 1023.66 |
| மொத்தம் | 100% | 2047.32 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 2047.32 | 1624.33 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 30.12.09 | 15.02.10 | 14.02.12 | 31.10.13 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டர்) | 26590 | 11910 | 4763 | 16673 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 1028 | 620 | 168 | 788 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டர்) | 1971 | 292 | 299 | 591 |
| கழிவு நீரகற்று நிலையம் (4 எண்கள்) | 100% | 42% | 25.5% | 67.5% |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (1 எண்) | 100% | 0% | 27.5% | 27.5% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 300.00 | 350.00 | 270.00 | 920.00 |
| செலவு | 168.18 | 527.58 | 214.34 | 910.10 |



# தாம்பரம் பாதாள சாக்கடைத் திட்டம்



| மக்கள் தொகை- 3,61,000 | | தெருக்கள் -995 | |
|---|---|---|---|
| வருடம் | அடிப்படை வருடம் | இடைப்பட்ட வருடம் | உச்ச வருடம் |
| | 2010 | 2025 | 2040 |

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண் 80, (நநி) மற்றும் (குவ) துறை நாள்: 28.05.09, ரூ.16097.00 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 5634 |
| தமிழக அரசு | 15% | 2414 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 8049 |
| மொத்தம் | 100% | 16097 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 17424.00 | 14464.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 30.09.09 | 11.12.09 | 10.12.11 | 31.03.14 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் குழாய்கள் (மீட்டர்) | 176551 | 6793 | 48862 | 26661 | 82316 |
| மனித நுழைவாயில் (எண்ணிக்கை) | 6767 | 474 | 3188 | 1009 | 4671 |
| கழிவுநீர் உந்து விசைக் குழாய்கள் (மீட்டர்) | 23079 | - | 4939 | 2165 | 7104 |
| கழிவு நீரகற்று நிலையம் (17 எண்கள்) | 100% | - | 24% | 13% | 37% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 100.00 | 1960.00 | 1022.00 | 3082.00 |
| செலவு | 114.03 | 2015.17 | 1138.77 | 3267.97 |



## பெருங்குடி 60 எம்.எல்.டி.கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்

பயனாளிகள் – தென் சென்னை

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

சென்னைக் குடிநீர் வாரியம் எண் 178/2008 நாள் 11.08. 08, ரூ.6119 இலட்சம்

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 1101.793 |
| தமிழக அரசு | 15% | 472.197 |
| கடன் (TUFUDCO) | 25% | 786.995 |
| சென்னைக் குடிநீர் வாரியம் | 25% | 786.995 |
| சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு ஒப்புதளிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு நிதி தொகைக்கு மேலாக | | 2096.02 |
| மொத்தம் | | 5244.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 6119.00 | 5244.00 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில் | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டப்படி முடிக்கப்பட வேண்டிய நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|---|
| 24 | 24.02. 09 | 20.05. 09 | 19.05. 11 | 31.12. 11 |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கட்டுமான பணிகள் | 100% | 27% | 58.6% | 14.4% | 100% |
| இயந்திரப் பணிகள் | 100% | 7% | 73.3% | 19.7% | 100% |
| மின்சாரப் பணிகள் | 100% | 24% | 56.1% | 19.9% | 100% |
| கருவி பணிகள் | 100% | 0% | 70.2% | 29.8% | 100% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 07-08 | 08-09 | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 39.28 | 2.32 | 937.51 | 594.88 | 676.81 | 2250.80 |
| செலவு | 0.34 | 8.69 | 1611.41 | 3170.93 | 379.30 | 5170.67 |



# நெசப்பாக்கம் 54 எம்.எல்.டி.கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம்

பயனாளிகள் – தென் மேற்கு சென்னையின்ஒரு பகுதி, வளசரவாக்கம், போரூர்,முகலிவாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ராமாவரம்

நிதி: ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

அரசு ஆணை எண்171 நாள்.23.09. 07

| நிதி ஆதாரம் | திட்டத்தின் மதிப்பு விகிதம் | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| மத்திய அரசு | 35% | 1909.95 |
| தமிழக அரசு | 15% | 818.55 |
| உள்ளாட்சி அமைப்பு | 50% | 2728.50 |
| மொத்தம் | 100% | 5457.00 |

| திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்த மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|
| 5857.00 | 4843.52 |

| ஒப்பந்த காலம் (மாதங்களில்) | பணி வழங்கப்பட்ட நாள் | பணி துவங்கப்பட்ட நாள் | திட்டம் முடிக்க அட்டவணை இட்ட நாள் |
|---|---|---|---|
| 24 | 29.09.09 | 21.12.09 | பணி முடிக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |

திட்டப் பணி வளர்ச்சி

| பொருள் | மொத்த அளவு | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல் | 100% | 8% | 34% | 42% | 84% |

நிதி முன்னேற்றம் /இலட்சத்தில்

| | 09-10 | 10-11 | 11-12 | ஒட்டு மொத்தம் |
|---|---|---|---|---|
| பெறப்பட்ட நிதி | 682.64 | 731.34 | 1211.73 | 2625.71 |
| செலவு | 153.04 | 1328.60 | 1921.63 | 3403.31 |





## கொடுங்கையூர் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம்

கொடுங்கையூர் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் வட சென்னை சுற்றுப்புற எல்லையில் அமைந்துள்ளது. வடசென்னை மற்றும் மத்திய சென்னையின் சில பகுதியில் இருந்து பெறப்படும் கழிவுநீரினை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளின் படி கொடுங்கையூர் சுத்திகரிப்பு நிலையத்தினுள் அமைந்துள்ள 3 சுத்திகரிப்பு நிலையம் முறை-யே மண்டலம் - 1, மண்டலம் - 2 மற்றும் 110 எம்.எல்.டி மூலம் தினந்தோறும் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. சுமார் 200 மில்லியன் லிட்டர் கழிவு நீரினை சென்னை வடக்கு மற்றும் மத்திய சென்னையின் சில பகுதிகளில் அமைந்துள்ள 94 கழிவு நீரகற்று நிலையங்கள் மூலம் பெறப்பட்டு சராசரியாக தினந்தோறும் 165 முதல் 170 மில்லியன் லிட்டர் கழிவு நீரினை இம்மூன்று நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மீதியுள்ள 30 முதல் 35 மில்லியன் லிட்டர் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்யப்படாமல் பங்கிங்காம் கால்வாய் மற்றும் கொடுங்கையூர் கால்வாயில் செலுத்தப்படுகிறது. இந்த 35 மில்லியன் லிட்டர் கழிவுநீரில் தண்டையார்பேட்டை “F” 34.0 மில்லியன் லிட்டர், கிருஷ்ணமூர்த்தி நகர் 0.4 மில்லியன் லிட்டர் மற்றும் ஆர்.ஆர்.நகர் 0.6 மில்லியன் லிட்டர் அடங்கும், தண்டையார்பேட்டை “F” கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் குழாயில் வைத்தியநாதன் பாலத்தின் அடிப்பகுதியில் ஏற்பட்டிருக்கும் உடைப்பை சரியான வசதி இல்லாத காரணத்தால் சரிசெய்ய முடியவில்லை. இதனால் பங்கிங்கால்வாயில் வெளியேற்றப்படுகிறது. மேலும் ராஜரத்தினம் மற்றும் கிருஷ்ணமூர்த்தி நகர் கழிவுநீரேற்று நிலையத்திலிருந்து வெளியேறும் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு கொடுங்கையூர் கால்வாயில் வெளியேற்றப்படுகிறது.

சென்னைக் குடிநீர் வாரியம் கொடுங்கையூர் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் மூலம் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட நீரினை மணலி பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தினந்தோறும் சுமார் 36 மில்லியன் லிட்டர் விற்கப்படுகிறது. இதன் மூலம் 2011-12, ஆண்டு ரூபாய் 13.20 கோடி வருமானம் ஈட்டப்பட்டது என்றும் 1989 முதல் மார்ச் 2012 வரை ரூபாய் 98.86 கோடி சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு கிடைத்த வருமானம் ஆகும்.

மேலும் 2006-ஆம் ஆண்டு இந்நிலையத்தில் உயிர் வாயு இயந்திரம் (Bio-Gas Engine) மூலம் நிலையத்திற்கு தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2011-12 ஆம் ஆண்டு சுமார் 4176800 யூனிட் மின்சாரம் தயாரித்து நிலையத்திலுள்ள மின் உபகரணங்கள் இயக்கப்பட்டது. இதனால் ரூபாய் 1,67,07,200 க்குமின்சாரத்திற்குரிய செலவு சேமிக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2006 முதல் மார்ச் 2012 வரை சுமார் 9,67,88,210.00 தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கட்ட வேண்டிய செலவு இதன் மூலம் சேமிக்கப்பட்டுள்ளது



கொடுங்கையூர் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் (110 எம் எல் டி) - மீத்தேன் எரிவாயு தொட்டி



கொடுங்கையூர் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் (110 எம் எல் டி) - மீத்தேன் எரிவாயு செரிமான தொட்டி



கொடுங்கையூர் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் (80 எம் எல் டி) - இரண்டாம் நிலை தெளிவிப்பான்

## இணைப்பு–1

### சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விற்பனை மூலம் நிதி வசூல் – 2011–12

| வ எண் | மாதம் | ஒரு கி.லி. விலை | திரு வாளர்கள் சி.பி. சி.எல் | | திரு வாளர்கள் எம்.பி. எல் | | திரு வாளர்கள் எம்.எப். எல் | | மொத்த எண்ணிக்கை கி.லி | மொத்த வருவாய் ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கி.லி. | ரூபாய் | கி.லி. | ரூபாய் | கி.லி. | ரூபாய் | | |
| 1 | ஏப்ரல்.11 | 10.2 | 623950 | 63,64,290 | 81482 | 8,31,116 | 344441 | 35,13,298 | 10,49,873 | 1,07,08,704 |
| 2 | மே.11 | 10.2 | 717340 | 73,16,868 | 80236 | 8,18,407 | 369272 | 37,66,574 | 11,66,848 | 1,19,01,849 |
| | மே.11 | 10.75 | | 3,94,537 | | 44,130 | | 2,03,100 | - | 6,41,767 |
| 3 | ஜூன்.11. | 10.75 | 676930 | 72,76,998 | 81051 | 8,71,298 | 341691 | 36,73,178 | 10,99,672 | 1,18,21,474 |
| 4 | ஜூலை.11 | 10.75 | 726090 | 78,05,468 | 90175 | 9,69,381 | 363339 | 39,05,894 | 11,79,604 | 1,26,80,743 |
| 5 | ஆகஸ்ட் 11 | 10.75 | 634960 | 68,25,820 | 98288 | 10,56,596 | 363566 | 39,08,335 | 10,96,814 | 1,17,90,751 |
| 6 | செப்டம்பர்.11 | 10.75 | 643560 | 69,18,270 | 79750 | 8,57,313 | 326147 | 35,06,080 | 10,49,457 | 1,12,81,663 |
| 7 | அக்டோபர்.11 | 10.75 | 669540 | 71,97,555 | 85017 | 9,13,933 | 350808 | 37,71,186 | 11,05,365 | 1,18,82,674 |
| 8 | நவம்பர்.11 | 10.75 | 638670 | 68,65,703 | 79202 | 8,51,422 | 344776 | 37,06,342 | 10,62,648 | 1,14,23,467 |
| 9 | டிசம்பர்.11 | 10.75 | 653440 | 70,24,480 | 61351 | 6,59,523 | 337965 | 36,33,124 | 10,52,756 | 1,13,17,127 |
| 10 | ஜனவரி.12 | 10.75 | 647680 | 69,62,560 | 64208 | 6,90,236 | 300117 | 32,26,258 | 10,12,005 | 1,08,79,054 |
| 11 | பிப்ரவரி.12 | 10.75 | 577820 | 62,11,565 | 62018 | 6,66,694 | 313402 | 33,69,072 | 9,53,240 | 1,02,47,331 |
| 12 | மார்ச்.12 | 10.75 | 391080 | 42,04,110 | 74540 | 8,01,305 | 117277 | 12,60,728 | 5,82,897 | 62,66,143 |
| | மொத்தம் | | **7601060** | **81368224** | **937318** | **10031354** | **3872801** | **41443169** | **12411179** | **13,28,42,747** |

## இணைப்பு–2

### பல்வேறு தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட இரண்டாம் கட்ட கழிவுநீரை விற்பனை செய்ததன் மூலம் ஈட்டிய வருடாந்திர வருவாய்

| வருடம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 2000-01 | 420.41 |
| 2001-02 | 485.82 |
| 2002-03 | 514.04 |
| 2003-04 | 577.61 |
| 2004-05 | 710.32 |
| 2005-06 | 603.83 |
| 2006-07 | 692.18 |
| 2007-08 | 941.91 |
| 2008-09 | 1073.02 |
| 2009-10 | 1206.57 |
| 2010-11 | 1331.50 |
| 2011-12 | 1328.42 |
| மொத்த வருவாய் | **9885.63** |


## இணைப்பு – 3


### 2011–12 ல் கொடுங்கையூர் 110 எம்.எல்.டி. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தில் பயோ கேஸ் இயந்திரம் மூலம் பெறப்பட்ட மின்சாரத்தின் அளவு

| மாதாந்திர இயக்கம் | மின்சாரபயன்பாடு கசடு இயந்திரத்தின் மூலம் கிலோவாட்டில் மணித்துளிகள் | மின்சார வாரியத்தின் செலவு மெகாவாட்டில் மணித்துளிகள் ரூபாய் | மொத்த சேமிப்பு கசடு இயந்திரம் மூலம் ரூபாயில் |
|---|---|---|---|
| ஏப்ரல்–11 | 428200 | 4.00 | 17,12,800.00 |
| மே–11 | 458800 | 4.00 | 18,35,200.00 |
| ஜூன்–11 | 362100 | 4.00 | 14,48,400.00 |
| ஜூலை–11 | 283200 | 4.00 | 11,32,800.00 |
| ஆகஸ்ட்–11 | 185100 | 4.00 | 7,40,400.00 |
| செப்டம்பர்–11 | 240900 | 4.00 | 9,63,600.00 |
| அக்டோபர்–11 | 352200 | 4.00 | 14,08,800.00 |
| நவம்பர்–11 | 282200 | 4.00 | 11,28,800.00 |
| டிசம்பர்–11 | 383600 | 4.00 | 15,34,400.00 |
| ஜனவரி–12 | 386000 | 4.00 | 15,44,000.00 |
| பிப்ரவரி–12 | 373500 | 4.00 | 14,94,000.00 |
| மார்ச்–12 | 441000 | 4.00 | 17,64,000.00 |
| | 4176800 | | 1,67,07,200.00 |
| மொத்த மின் சேமிப்பு ஆகஸ்ட் 2006–மார்ச் 2012 | **26602190** | | **96788210.00** |


## நிதி விளைவுகள்


சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்தின் விளைவாக நடப்பு ஆண்டில் வாரியத்தின் பணி தொகுதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பணியாளர் செலவினங்களும் செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவினங்களும் கணிசமாக அதிகரித்தமையால் வாரியம் தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டும் பற்றாக்குறை நிலையில் உள்ளது. இந்த ஆண்டின் மொத்த வருமானம் ரூபாய் 530 .15 கோடிகளும் செலவினங்கள் ரூபாய் 711.87 கோடிகளும் விளைவாக, நிகர பற்றாக்குறை ரூபாய் 181.72 கோடிகளும் ஆகும். சென்ற ஆண்டு (2010 – 11 ) பற்றாக்குறை ரூபாய் 125.45 கோடிகள் ஆகும். இந்த ஆண்டு மழை போதுமானதாய் இல்லாததால், வாரியம் , வறட்சியை சமாளித்து குடிநீர் வழங்கும் அளவை தக்க வைக்கவும் மற்றும் சென்னை நகரத்தின் கீழ் விரிவாக்கப்பட்ட தொகுதிகளின் தேவைகளை பூர்த்தி செய்யவும் அதிகமான செலவுகளை மேற்கொண்டுள்ளது.




சென்ற ஆண்டைப் போல் , குடிநீர் கட்டணம் மொத்த வருவாயில் சென்னை நகர் விரிவாக்கத்தினால் செயல்முறை மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் பெரும் பங்கு வகிக்கிறது. பணியாளர் கூலி இரண்டாம் முக்கிய இடம் வகிக்கிறது. இருப்பினும் வாரியம் தொடர்ந்து ஊழியர் நலத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது..





## பண நிர்வாகம்

பண நிர்வாகம் நடப்பாண்டிலும் சிறந்த முறையில் கையாளப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். எதிர்பாராத வறட்சி மற்றும் குறைந்த சேவை அளவிலும் வாரியத்திற்கு வரவேண்டிய பணவரவு திருப்திகரமாகவே அமைந்தது. சிறந்த முறையில் ஒருங்கிணைந்த பட்டியலிடுதல் மற்றும் வசூலித்தல் ஆகியவற்றின் மேம்பாடு காரணமாகவே மேற்கண்ட சாதனைகளை அடைய முடிந்தது.

## திட்ட முதலீடுகள்

குடிநீர் வழங்குதல் , கழிவு நீரகற்றுதல் பணிகளில் நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவையினைத் திருப்தி செய்வதென்பது வாரியத்தின் சட்டப்படியான நோக்கங்களில் ஒன்றாகும்.

விரிவாக்கப்பட்ட தொகுதிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வாரியம் ஏற்கனவே பல வளர்ச்சிப் பணிகளை பெரும் அளவில் மேற்கொண்டுள்ளது. இருந்த போதிலும் எதிர்காலத்திட்டங்கள் அனைத்திற்கும் குறைந்த செலவுச் சுமையில் நிதி ஏற்பாடு செய்வதென்பது வாரியத்தின் முன் உள்ள பெரும் சவாலாகும். ஏனென்றால் வாரியம் முழுவதுமாக கடன் முதலீட்டையே சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறது.




**பட்டியல் மற்றும் வசூல்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் முக்கிய வருவாய் ஆதாரம் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவை கட்டணங்களாகும். சென்னை மாநகராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்ட கட்டடங்களுக்கான ஆண்டு மதிப்பீட்டில் 7% குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியாக ஆண்டுதோறும் சென்னைக் குடிநீர் வாரியத்தால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி ஒவ்வொரு முறை ஆண்டு மதிப்பீட்டினை உயர்த்தும்போதும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் வரி வசூல் ஆதாரமும் உயரும். 2011–12 வருடத்திற்கான சென்னைக்குடிநீர் வாரியத்தின் ஒரு ஆண்டிற்கான குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி கேட்பு தொகை ரூ.103.69 கோடியாகும்.

எந்த ஒரு நிலையான நிதி மேலாண்மை முறைக்கும் ஒரு வலுவான கட்டணவீதக் கொள்கையே முதுகெலும்பாக விளங்கும். வாரியத்தின் நுகர்வோர்களின் வகைப்பாடு (1) வீட்டு உபயோகம் (2) பகுதி வணிகம் (3) வணிகம் – குடிநீர் முனைப்பில்லாத மற்றும் குடிநீர் முனைப்புள்ள (4) நிறுவனங்கள் (5) நகராட்சி பெருமளவு பயனீட்டு வழங்கல் ஆகிய வகைப்பாடுகளுடன் பொருத்தமான கட்டணங்கள் வெவ்வேறு வகையான நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 2011–12 வருடத்திற்கான சென்னைக்குடிநீர் வாரியத்தின் ஒரு ஆண்டிற்கான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவைக் கட்டண கேட்புத் தொகை ரூ.236.36 கோடியாகும். அதிகப்படியான வருவாயினை ஈட்டுவதற்கும் மற்றும் வசூல் திறனை மேம்படுத்தவும் எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு பட்டியல் மற்றும் வசூல் பிரிவு ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது.

தணிக்கையாளர் அறிக்கை

**எஸ் வெங்கட்ராம் மற்றும் குழுமம்**
**பட்டயக் கணக்காளர்கள்**

எண், 218, டி.டி.கே சாலை,,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018
தொலைபேசி எண் : 24992155 / 6 / 7
தொலைநகலி : 24670343
மின் அஞ்சல் : svco@vsnl.com

**தணிக்கையாளர்களின் அறிக்கை**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய இயக்குநர்களுக்கு**

நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2012 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் இருப்பு நிலைக் குறிப்பினையும், அந்நாளில் முடிவுற்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கையும் அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளையும் தணிக்கை செய்து முடித்துள்ளோம். இந்த நிதிநிலை அறிக்கைக்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாகமே பொறுப்பாகும். இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது தணிக்கையை அடிப்படையாக வைத்து கருத்து தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும்.

1. நாங்கள்,இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தணிக்கையின் தரத்தில் தணிக்கை செய்துள்ளோம். இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று உறுதி அளிக்கும் வகையில் நாங்கள் தணிக்கையைத் திட்டமிட்டு நடத்தி முடிக்க இந்தத் தணிக்கைத் தரங்கள் வலியுறுத்துகின்றன. நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கும், விவரங்களுக்கும் தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்பதை சோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதும் தணிக்கையில் அடங்கும். கணக்கு கோட்பாடுகளையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் ஆய்வதுடன் ஒட்டு மொத்த நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தலும் இத்தணிக்கையில் அடங்கும். நாங்கள் மேற்கொண்ட தணிக்கை எங்களது கருத்துகளுக்கு அடிப்படையான காரணங்களை வழங்குகின்றன.

2. மேலே பத்தி 1 ல்குறிப்பிட்டுள்ள எங்களது கருத்துக்களை மையமாகக் கொண்டு நாங்கள் கூறுவது என்னவென்றால்

அ.) நாங்கள் எங்கள் மேலான அறிவுக்கும், நம்பிக்கைக்கும் ஏற்றவகையில் எங்கள் தணிக்கைக்குத்தேவையான அனைத்து விவரங்களையும், விளக்கங்களையும் பெற்றுள்ளோம்.

ஆ.) எங்களது ஆய்வின் போது வாரியம் முறையான கணக்கு பதிவேடுகளை வைத்திருக்கிறது எனத் தெரிகிறது.

இ.) இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இருப்பு நிலைக் குறிப்பும், வரவு செலவு கணக்கும் வாரியத்தின் கணக்குப் பதிவேடுகளோடு இணங்கியுள்ளன.

ஈ.) கீழ்க்கண்ட குறிப்புகளின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

(i) அட்டவணை - க்யு - பொது- குறிப்பு எண் 1. வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, தணிக்கை செய்யப்படாத 42 முன்னாள் ஊராட்சி அமைப்புகளின் (24.10.2011 முதல் இந்த உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் ஏற்றுக்கொண்டதன் விளைவாக) நிதிநிலையும் உள்ளடக்கியதாகும். உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை அறிக்கை இல்லாத நிலையில், நிர்வாகத்தால் அளிக்கப்பட்ட / தொகுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலைத் தகவல்களையே நாங்கள் சார்ந்துள்ளோம்.

(ii) அ) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு. குறிப்பு எண் II - 1 - அரசு மானியம் (உள்ளாட்சி அமைப்பு ) 42 உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்றுக் கொண்டதன் விளைவாக, புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஆறு பகுதிகளுக்காக மானியமாக அரசிடமிருந்து பெறப்பட்ட ரூ.117.78 கோடிக்கான நோக்கம் / உபயோகிப்பு குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறாததால் நிதிநிலையில் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

ஆ) அட்டவணை - க்யு - இருப்பு நிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் எண் II - 2 - அரசு மானியம் பொறுப்புரிமை மாற்ற நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.126.25 கோடியில் மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவுகளை நிலையான சொத்துக் கணக்கிலிருந்து குறைக்காமலும் மற்றும் பட்டயக் கணக்குகள் அலுவலகம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை 12 இன் படி நிறுத்தி வைக்கப்பட்ட வரவாகக் கருதாமல் நிலையான சொத்துக்கணக்கில் மாற்றப்பட்டுள்ளதால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(iii) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு. குறிப்பு எண் IV - 3 - ரூபாய் 64.08 கோடிக்கு நில விற்பனைக்காக முன்பணம் - சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ ரயில்நிறுவனத்திற்கு அதன் நிலத்தை விற்பனை / மாற்றம் செய்ய வருமான வரிக்கான வழிவகைகளைச் செய்யாமலேயே முன்பணம் பெற்றுக் கொண்டுள்ளது.

(iv) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் V - 4 - பட்டயக் கணக்காளர் அலுவலகம் பிறப்பித்துள்ள கணக்கு வைப்பு முறை - 22இன்படி வரையறுத்த நிறுத்தி வைக்கப்பட்ட வரிகள் கண்டறியப்படாததால் கணக்கீட்டில் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(v) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VI - 4 - அசையாச் சொத்துக்கள் ரூ.461.33கோடி மதிப்பில் தற்போது முன்னேற்றத்தில் உள்ள 470 பணிகளுக்கு வாரியக் கோட்பாட்டின் படி தற்காலிக விலையில் தேய்மானம் அளிக்கப்படாமல் உள்ளது. கணக்குகளில் அசைவு ஏதுமில்லாமலும் மற்றும் 2011-12 ஆம் ஆண்டில் இந்தப் பணிகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததாலும் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(vi) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் VI - 5 - அசையாச் சொத்துக்கள் - நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்காக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்யப்படாதது குறித்ததாகும்.

(vii) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு - குறிப்பு எண் 1,2,3 & 4 பின்வரும் கணக்கு வகைகளுக்கான தாக்கத்தை அறிய முடியவில்லை.

(அ) 2012 மார்ச் 31 தேதியில் 2 நடப்பு கணக்குகளில் மீதம் உள்ள ரூ.17.53 கோடி சரி செய்யப்படவில்லை.

ஆ) 2012 மார்ச் 31 தேதியில் ஒரு நடப்பு கணக்கில் உள்ள மீதக் கடன் ரூ.14.96 லட்சம் சரி செய்யப்படவில்லை.

இ) 2012 மார்ச் 31 தேதியில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் 71 வங்கிக் கணக்குகள் சரி செய்யப்படவில்லை. ரூ.17.99 கோடி அளவில் முடிக்கப்பட்ட இந்த வங்கி கணக்குகளில் ரூ.14.13 கோடி மட்டுமே வாரியத்திற்கு மாற்றப்பட்டு ரூ.3.86 கோடி பற்றாக்குறை உள்ளது.

ஈ) வசூல் கட்டுப்பாடு கணக்கின் வரவுகளில் மீதம் உள்ள ரூ.0.13 கோடி நிகர் செய்யப்படவில்லை.

உ) தலைமை அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தின் நடவடிக்கைகளுக்கான வரவுகள் மீதம் ரூ.22.01 கோடி சரி செய்யப்படவில்லை.

(viii) அட்டவணை - க்யு- இருப்புநிலைப் பட்டியலுக்கான குறிப்பு- குறிப்பு எண் VII - 6 - முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் சில்லறைக் கடனாளிகளை கணக்கீடு செய்யாதது மற்றும் ஆறு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் குடிநீர்க்கட்டணம் மற்றும் கழிவுநீர்க்கட்டணமாக மொத்தம் ரூ.8.66கோடி மட்டுமே கருதப்பட்டுள்ளதால் கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(ix) அட்டவணை - க்யு- வரவு செலவு கணக்கிற்கான குறிப்புகள் - குறிப்பு எண் I - குடிநீர் விற்பனை அளவி பொருத்தப்படாதது - வீட்டு உபயோகம் -அக்டோபர் 2011 லிருந்து மார்ச் 2012 வரை புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சென்னைக் குடிநீர் வாரியம் நிர்ணயித்த அடிப்படையில் குடிநீர்க் கட்டணங்களை வசூலிக்காமல் முன்னாள் ஊராட்சிஅமைப்புகள் நிர்ணயித்த அடிப்படையிலேயே வசூல்செய்திருப்பதால் அதன்தாக்கத்தை அறிய முடியவில்லை.

(x) அட்டவணை - க்யு- வரவுசெலவு கணக்கிற்கான குறிப்புகள் - குறிப்பு எண் குடிநீர் வரி - சென்னைக்குடிநீர் வாரிய எல்லை 31.03.2012லிருந்து விரிவாக்கப்பட்டதால் அத்தேதியிலிருந்தே முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் குடிநீர்வரி கருதப் படாமல் உள்ளதால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(xi) அ.) அட்டவணை - க்யு- வரவு செலவு கணக்கிற்கான குறிப்புகள்- குறிப்பு எண் III - 1,2,3 - பணியாளர்கள் ஓய்வு காலப் பயன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான தொகுத்த பொறுப்புகள் 31.03.2013 முடிய கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை அறிய முடியவில்லை.

ஆ.) அட்டவணை - க்யு- வரவு செலவு கணக்கிற்கான குறிப்புகள் -குறிப்பு எண் III - 4 - முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களின் ஓய்வு காலப் பயன்களான ஓய்வூதியம் , பணிக்கொடை. விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான தொகுத்த பொறுப்புகள் 31.03.2012 முடிய கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படாததால் இது குறித்து ஏற்படும் விளைவுகளை அறிய முடியவில்லை.

இ. ) அட்டவணை - க்யு- வரவு செலவு கணக்கிற்கான குறிப்புகள்- குறிப்பு எண் III - 4 - முன்னாள் ஊராட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு நவம்பர் 2011 மற்றும் டிசம்பர் 2011 ஆகிய மாதங்களுக்கான ஊதியத்தை சென்னை மாநகராட்சி வழங்கியது. ஊதிய விவரம் குறித்த கேட்புகள் சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்படாததால் டிசம்பர் 2012ல் வாரியத்தால் வழங்கப்பட்ட ஊதிய அளவே வாரியக் கணக்குகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி வழங்கிய ஊதியவிவரத்திற்கு பதிலாக வாரியம் வழங்கிய ஊதிய விவரமே கணக்கிடப்பட்டுள்ளதால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(xii) அட்டவணை - க்யு- வரவுசெலவுக் கணக்கிற்கான குறிப்புகள்- குறிப்பு எண் V - I - சென்னைக் குடிநீர் வாரியம் 01.04.2003 லிருந்து யூனிக்ஸ் முறையிலிருந்து ஆரக்கள் முறைக்கு மாறியுள்ளது. அவ்வாறு முறைமாற்றம் செய்த போது அசையாச் சொத்துக்கள் அனைத்தும் ஒவ்வொரு சொத்தும் வாங்கப்பட்ட தினத்திலிருந்து கணக்கிடப்படாமல் ஆரக்கள் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னைக் குடிநீர் வாரியம் விலை அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும் முறையைப் பின்பற்றி வருவதால் காலம் முதிர்வுற்ற சொத்துக்களின் உண்மையான மதிப்பை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளது. வரவுசெலவுகளில் இதனால் ஏற்படும் விளைவுகளை அறிய முடியவில்லை.

(xiii) அட்டவணை - க்யு- வரவுசெலவுக் கணக்கிற்கான குறிப்புகள்- குறிப்பு எண் VI - முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள், நிதி நிறுவனங்களிலிருந்து 25.10.2011 முதல் 31.03.2012 வரை பெற்ற கடன்களின் வட்டித்தொகை ரூ.5.38 கோடி மற்றும் அதன் தகுதியான சொத்துக்களின் கடன் மதிப்பீடு போன்றவற்றை வாரியச் சொத்துக் கணக்கில் சேர்க்காமல் வரவு செலவுக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

(xiv) அட்டவணை - க்யு- பொது - குறிப்பு எண் 2- 2012ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான சென்னைக் குடிநீர் வாரியத்தின் வரவு செலவுக் கணக்கில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வரவு செலவுக் கணக்கு, நிதி பரிவர்த்தனை மற்றும் இருப்பு நிலைப் பட்டியல், குடிநீர் , கழிவு நீர்க்கட்டணத்தைப் பொறுத்தவரை 24.10.2011 முதல் 31.03.2012 வரை ஒட்டு மொத்தமாக வாரியத்தில் பின்பற்றிவரும் ஈட்டிய ஆதாய முறைப்படி இல்லாமல் விலை மதிப்பீட்டில் கருதப்பட்டுள்ளதால் வாரிய நிதிக் கணக்கில் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(xv) அட்டவணை - க்யு - பொது - குறிப்பு எண் 3- 2012ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி நிலயிலான சென்னைக் குடிநீர் வாரிய நிதிநிலை அறிக்கையில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் குறித்த உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் நிலுவையில் உள்ள தணிக்கைப் பத்திகள் மற்றும் நிலுவையில் உள்ள தலைமை தணிக்கைத் துறையின் பொது அறிக்கைகள் போன்றவை கருத்தில் கொள்ளப்படாமல் உள்ளதால் கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை அறிய முடியவில்லை.

(xvi) அட்டவணை - க்யு - பொது - குறிப்பு எண் 5 - உறுதி ஆக்கமும், இணக்கத்துக்கும் உடன்பட்ட மூன்றாமவர் இருப்பு குறித்து ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

உ.) பத்தி எண் ஈயில் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் எங்கள் கருத்துக்கள், எங்களுக்கு அளிக்கப்பட்ட விவரங்கள், விளக்கங்கள், மற்றும் முக்கிய கணக்கு முறை கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த இருப்பு நிலைக் குறிப்பும், வரவு செலவு கணக்கும் பொதுவாக நடைமுறையில் உள்ள இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு கோட்பாடுகளுக்கு உகந்த வகையில் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களைத் தருவதாகக் கருதுகிறோம்.

(i) இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2012 அன்று வாரியத்தின் செயல்பாட்டு நிலைமைகளுக்கானது.

(ii) வாரியத்தின் வரவு செலவு கணக்கில் உள்ள பற்றாக்குறை (வருமானத்தை விட அதிக செலவு)முடிவடைந்த ஆண்டுக்கானது

**எஸ் வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக**
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண் 04656 S

**ஆர். கந்தவேலு**
கூட்டாளி
உறுப்பினர் எண்: 12811

இடம்:சென்னை
நாள்:08.08.2013

## 2012-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2011-12 ரூபாய். | 2010-11 ரூபாய். |
|---|---|---|---|
| பொறுப்புகள் | | | |
| பங்குகள் | எ | 12,31,77,46,006 | 11,74,41,50,289 |
| அரசுமானியம் | பி | 14,85,62,26,488 | 10,75,58,20,930 |
| நீண்டகாலக் கடன்கள் | சி | 13,70,31,54,271 | 12,40,38,36,955 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | டி | 8,61,16,93,016 | 8,47,59,98,272 |
| நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | இ | 8,40,04,00,692 | 7,37,44,61,930 |
| **மொத்தம்** | | **57,88,92,20,473** | **50,75,42,68,376** |
| சொத்துக்கள் | | | |
| நிலையான சொத்துக்கள் | எப் | 44,80,87,37,708 | 40,36,35,47,564 |
| நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | ஜி | 9,16,25,98,525 | 8,29,00,39,192 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 3,91,78,84,240 | 2,10,06,81,620 |
| **மொத்தம்** | | **57,88,92,20,473** | **50,75,42,68,376** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
**எஸ்.வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக**
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 04656S

வாரியத்திற்காக

சி.ஆறுமுகம், இ.த.க.ப.
நிதி இயக்குநர்

டாக்டர்,பி.சந்திரமோகன்,இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்

ஆர். கந்தவேலு
கூட்டாளி
உ.எண்: 12811

இடம்:சென்னை
நாள்:08.08.2013

## 2012-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு-செலவு கணக்கு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2011-12 ரூபாய். | 2010-11 ரூபாய். |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | எச் | 2,37,68,35,424 | 2,41,27,01,424 |
| அரசுமானியம் | | 1,17,48,37,500 | 1,00,36,80,500 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | ஐ | 1,03,69,22,939 | 98,78,62,465 |
| இதர வருமானம் | ஜே | 69,84,82,849 | 79,55,15,689 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| - குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 0 | 31,14,393 |
| - குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்படாதது | | 26,54,209 | 31,71,248 |
| - வரிகள் | | 1,17,89,284 | 0 |
| வரவை விட செலவு அதிகம் | | 1,81,72,02,620 | 1,25,44,50,414 |
| **மொத்தம்** | | **7,11,87,24,825** | **6,46,04,96,133** |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | கே | 2,63,26,64,784 | 2,27,72,71,989 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | எல் | 1,58,66,19,841 | 1,31,97,44,883 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | எம் | 6,35,13,502 | 6,35,62,015 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | என் | 32,64,58,390 | 48,08,78,899 |
| குடிநீர் ஊர்தி வாடகைக் கட்டணங்கள் | | 19,47,95,912 | 15,44,71,103 |
| வறட்சி பணிச் செலவுகள் | | 0 | 2,17,41,599 |
| தேய்மானம் | | 1,30,14,94,303 | 1,20,27,18,858 |
| கடன் பணிச் செலவுகள் | ஓ | 93,98,78,132 | 93,11,23,599 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு | | | |
| - குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | | 7,32,99,961 | 0 |
| - வரிகள் | | 0 | 89,83,188 |
| **மொத்தம்** | | **7,11,87,24,825** | **6,46,04,96,133** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
**எஸ்.வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக**
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 04656S

வாரியத்திற்காக

சி.ஆறுமுகம், இ.த.க.ப.
நிதி இயக்குநர்

டாக்டர்,பி.சந்திரமோகன்,இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்

ஆர். கந்தவேலு
கூட்டாளி
உ.எண்: 12811

இடம்:சென்னை
நாள்:08.08.2013

### அட்டவணை - எ

| பங்குகள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,87,96,58,365 | 4,59,70,95,311 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 5,34,74,70,342 | 4,72,26,65,945 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 15,91,67,365 | 15,91,67,365 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380 | 5,18,87,380 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 8,42,252 | 8,42,252 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | (57,99,73,283) | 0 |
| மூலதன ஒதுக்கீடு | 1,46,19,87,861 | 1,26,46,70,690 |
| நிதி | 99,67,05,724 | 94,78,21,346 |
| **மொத்தம்** | **12,31,77,46,006** | **11,74,41,50,289** |

### அட்டவணை - பி

| அரசு மானியம் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,001 | 1,37,37,90,001 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000 | 3,51,59,00,000 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் | 1,70,93,50,885 | 1,29,38,05,333 |
| நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 4,57,00,00,000 | 3,07,00,00,000 |
| இதர வகைகள் | 1,24,68,45,497 | 60,86,53,497 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,17,78,31,084 | 0 |
| பொறுப்புரிமை மற்றும் நிதி | 1,26,25,09,021 | 89,36,72,099 |
| **மொத்தம்** | **14,85,62,26,488** | **10,75,58,20,930** |

### அட்டவணை - சி

| நீண்ட கால கடன்கள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து கடன்கள் | 7,27,51,13,540 | 7,27,51,13,540 |
| கடன் பத்திரங்கள் | 8,33,33,335 | 32,00,00,001 |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 6,34,47,07,396 | 4,80,87,23,414 |
| **மொத்தம்** | **13,70,31,54,271** | **12,40,38,36,955** |

## அட்டவணை - டி

| நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை | | |
| - இணைப்புப் பணிகளுக்கு- கழிவுநீர் | 63,33,02,357 | 41,50,79,721 |
| - பொதுப்பணிகளுக்கு | 5,28,28,03,719 | 6,09,44,08,003 |
| - சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 2,25,18,408 | 1,78,19,025 |
| - மதுரை கும்பகோணம் | 1,44,09,06,870 | 1,44,09,06,870 |
| | | |
| **பிணை வைப்புத்தொகைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணம்** | | |
| அ. நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 59,94,701 | 37,25,316 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 57,05,91,392 | 36,99,89,583 |
| | | |
| ஆ.பிணை வைப்புத்தொகைகள் | | |
| - பணியாளர்கள் | 51,60,066 | 15,37,727 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 95,85,388 | 84,80,912 |
| | | |
| நில விற்பனை முன்பணம் | 64,08,30,115 | 12,40,51,115 |
| **மொத்தம்** | **8,61,16,93,016** | **8,47,59,98,272** |

## அட்டவணை - இ

| நடப்பு பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| கடனீந்தோர் | | |
| - பொருட்கள் வழங்குபவர்கள் | 7,71,06,096 | 10,83,62,413 |
| - ஒப்பந்தக்காரர்கள் | 71,52,00,456 | 1,21,58,24,784 |
| - செலவுகள் | 16,10,71,967 | 22,65,75,239 |
| | | |
| **முதலீடு சேர்ந்த வட்டி** | | |
| - அரசுக் கடன்களுக்கு | 4,44,51,73,081 | 3,85,88,25,300 |
| - பத்திரம் | 11,29,212 | 42,57,123 |
| - நிதிநிறுவனக் கடன்களுக்கு | 10,36,30,773 | 3,46,44,896 |
| | | |
| **இதர பொறுப்புகள் - பணியாளர்கள்** | 1,33,30,88,562 | 1,19,93,24,168 |
| **மற்றவை** | 1,56,40,00,545 | 72,66,48,007 |
| **மொத்தம்** | **8,40,04,00,692** | **7,37,44,61,930** |

அட்டவணை - எப்

| நிலையான சொத்துக்கள் | ரூபாய் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|---|
| **அ. அடக்கவிலையில் குடிநீர் வழங்கல்** | 24974828483 | | |
| கழிக்க: தேய்மானம் | 8336612025 | 16,63,82,16,458 | 16,80,82,41,570 |
| | | | |
| **ஆ.அடக்கவிலையில் கழிவுநீரகற்றல்** | 9149353343 | | |
| கழிக்க: தேய்மானம் | 3942043717 | 5,20,73,09,626 | 5,33,86,62,146 |
| | | | |
| **இ.அடக்கவிலையில் பொதுவானவை** | 572332367 | | |
| கழிக்க: தேய்மானம் | 422373339 | 14,99,59,028 | 14,83,90,265 |
| | | | |
| **ஈ.முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள்** | | | |
| 1. குடிநீர் வழங்கல் | | | |
| வைப்புத் தொகை பணிகள் | 3441848330 | | |
| இதர பணிகள் | 10617352272 | 14,05,92,00,602 | 10,36,69,49,203 |
| | | | |
| 2. கழிவுநீரகற்றல் | | | |
| வைப்புத் தொகை பணிகள் | 3489071712 | | |
| இதர பணிகள் | 4021028934 | 7,51,01,00,646 | 6,44,18,06,354 |
| | | | |
| 3.பொதுவானவை | | 16,54,63,096 | 18,10,09,773 |
| | | | |
| **உ. வறட்சி நிவாரணப் பணிகள்** | | 1,07,84,88,252 | 1,07,84,88,252 |
| | | | |
| **மொத்தம்** | | **44,80,87,37,708** | **40,36,35,47,563** |

## அட்டவணை - ஜி

| நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள் | ரூபாய் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|---|
| **அ. பொருட்கள்** | | 9,15,45,577 | 13,14,04,169 |
| **ஆ.கடனாளிகள்** | | | |
| 1.குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | 31,45,98,586 | | |
| கழிக்க : ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 13,15,70,698 | 18,30,27,888 | 18,30,27,888 |
| 2.குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொறுத்தப்பட்டது | 28,00,11,504 | | |
| கழிக்க : ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 18,64,69,177 | 9,35,42,327 | 24,90,35,117 |
| 3.வரிகள் | 92,32,06,639 | | |
| கழிக்க : ஐயப்பாடுள்ள பற்று - ஒதுக்கீடு | 5,14,17,405 | 87,17,89,234 | 97,78,92,790 |
| 4.பொது ஆணைக்குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 2,17,59,391 | 88,06,163 |
| 5. கட்டண கடனாளிகள் - அரசுக்கு ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல் | | 25,74,14,078 | 24,68,97,552 |
| 6. கட்டண கடனாளிகள் கழிவுநீரகற்றல் | | 21,18,35,739 | 16,14,99,712 |
| 7. கட்டண கடனாளிகள் - குடிநீர் இதர வகைகள் | | 7,230 | 5,735 |
| 8. வரவேண்டிய நூற்று வீதக்கட்டணம் | | 0 | 4,86,82,000 |
| 9. செ.கு.வா. பணிக்கொடை பொ.குழுமம் | | 49,87,669 | 10,14,93,296 |
| 10.வரி பிடித்தங்கள் | | 1,97,98,898 | 1,15,30,356 |
| 11. கட்டணக் கடனாளிகள் - மேல்வரி | | (1,02,121) | 4,12,843 |
| 12. கட்டணக் கடனாளிகள் - அவமதிப்பு காசோலை | | 42,589 | 31,224 |
| 13. கட்டணக் கடனாளிகள் -சுத்திகரிக்கப்படாத கழிவு | | 12,70,751 | 18,84,969 |
| 14.சென்னை மாநகராட்சியிடமிருந்து பெறப்பட வேண்டியவை-புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் | | 1,20,10,000 | 0 |
| 15. புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளிலிருந்து பெறப்பட்ட நிதி | | (26,82,193) | 0 |
| **இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள்** | | | |
| 1. தலைமை அலுவலக / பகுதி அலுவலக நடவடிக்கை | | (17,46,98,853) | (5,93,41,586) |
| 2. வசூல்கட்டுப்பாடு | | 12,76,240 | (6,06,88,316) |
| 3. அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு | | 1,37,39,46,351 | 32,30,87,618 |
| 4.இந்திய ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | 1,48,72,05,014 | 5,014 |
| 5.அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 2,27,47,46,060 | 3,26,59,44,742 |
| 6.கையிருப்புத் தொகை | | 54,989 | 18,899 |
| 7. உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட வேண்டிய பணத்தொகை | | 4,12,73,304 | 0 |
| 8.பணியாளர் முன்பணம் | | 30,370 | 1,03,175 |

அட்டவணை (தொடர்ச்சி...)

அட்டவணை - ஜி

தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| **ஈ. கடன் மற்றும் முன்பணம்** | | |
| 1. ஒப்பந்தக்காரர்கள் | 6,07,84,760 | 13,22,53,049 |
| 2.பொருள் வழங்குபவர்கள் | 23,66,257 | 12,88,845 |
| 3.செலவினங்களுக்கு | 73,79,407 | 74,56,868 |
| 4.பணியாளர்களுக்கு | 10,91,37,947 | 12,14,80,259 |
| 5. இதர வகை | 4,99,450 | 4,99,451 |
| | | |
| **உ.வைப்புத்தொகை மற்றும் முதலீடு** | | |
| **அ.பணியாளர்கள்** | | |
| 1.சிறப்பு சேமநல முதலீடு | 4,34,80,847 | 4,11,06,492 |
| 2.பொது சேமநல முதலீடு | 51,62,34,097 | 53,33,15,014 |
| 3.ஓய்வூதிய நிதி முதலீடு | 62,04,52,134 | 67,28,54,613 |
| 4.செபெகுவா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | 1,11,90,699 | 1,02,22,334 |
| 5.விபத்து உள்ளடக்கிய முதலீடு | 69,07,828 | 55,90,977 |
| 6.முதலீடு சேர்ந்த இதர வட்டிகள் | 10,16,76,169 | 17,32,56,985 |
| 7.முதலீடு சேர்ந்த வட்டி - வருங்கால வைப்புநிதி பங்களிப்புத் திட்டம் | 32,82,644 | 23,23,701 |
| 8.முதலீடு சேர்ந்த வட்டி - ஓய்வூதிய முதலீடு | 5,83,59,498 | 14,65,45,636 |
| | | |
| **ஆ.மற்றவை** | | |
| 1. வைப்பு நிதி | 7,77,56,822 | 7,04,99,568 |
| 2. பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | 36,62,61,431 | 33,31,14,519 |
| 3.நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | 40,67,48,003 | 44,64,97,521 |
| | | |
| **மொத்தம்** | **9,16,25,98,525** | **8,29,00,39,192** |

அட்டவணை - எச்

| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| | | |
| **அளவி பொருத்தப்பட்டவை** | | |
| வீட்டு உபயோகம் | 18,74,43,440 | 18,23,77,759 |
| வாணிபம் | 1,01,49,24,032 | 1,06,84,92,352 |
| நிறுவனங்கள் | 13,69,38,162 | 13,89,15,243 |
| நகராட்சிகள் | 6,98,74,941 | 9,26,19,933 |
| | | |
| **அளவி பொருத்தப்படாதவை** | | |
| வீட்டு உபயோகம் | 27,83,78,143 | 25,95,96,296 |
| வாணிபம் | 17,57,79,993 | 17,40,55,814 |
| நிறுவனங்கள் | 21,44,200 | 20,83,400 |
| | | |
| ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கல் | 13,81,46,313 | 13,64,44,970 |
| சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வாயிலாக வருமானம் | 16,18,71,497 | 16,82,08,878 |
| கழிவுநீர்க் கட்டணங்கள் | 21,13,34,703 | 18,99,06,779 |
| | | |
| **மொத்தம்** | **2,37,68,35,424** | **2,41,27,01,424** |

அட்டவணை - ஐ

| குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| | | |
| குடிநீர் வரி | 22,16,57,477 | 21,15,67,864 |
| கழிவுநீரகற்றுவரி | 81,52,65,462 | 77,62,94,601 |
| | | |
| **மொத்தம்** | **1,03,69,22,939** | **98,78,62,465** |

அட்டவணை - ஜே

| இதர வருமானம் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| பயனற்ற பொருட்கள் விற்பனை | 1,84,52,789 | 1,17,10,023 |
| வங்கியிலிருந்து வட்டி | 15,90,06,488 | 5,68,46,423 |
| இதர வட்டி | 4,93,53,379 | 9,93,28,513 |
| ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் விற்பனை | 4,52,400 | 5,81,500 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 0 | 53,26,840 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 71,73,590 | 17,78,63,719 |
| இதர பல்வகைப்பட்ட வருமானம் | 46,39,23,203 | 44,38,58,671 |
| பண்ணை விளைச்சல் விற்பனை | 1,21,000 | 0 |
| **மொத்தம்** | **69,84,82,849** | **79,55,15,689** |

அட்டவணை - கே

| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| **அ. இயக்குதல் செலவுகள்:** | | |
| மின்சக்தி | 63,34,13,458 | 63,84,65,541 |
| இரசாயனப் பொருட்கள் | 5,61,31,280 | 5,91,27,281 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 3,52,61,407 | 2,17,69,828 |
| உதிரிக் கருவிகள் | 21,00,707 | 14,46,639 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 62,065 | 2,40,905 |
| கழிவுநீர் ஊர்தி - வாடகைக் கட்டணம் | 1,14,65,593 | 1,11,19,801 |
| தூர் எடுப்பு | 3,12,05,992 | 3,31,14,033 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,28,09,85,040 | 97,85,56,043 |
| | 2,05,06,25,542 | 1,74,38,40,071 |
| **ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம், தளவாடம் மற்றும் இதர உபகரணங்கள் | 30,38,31,747 | 25,53,64,604 |
| கட்டடம் மற்றும் கட்டடப் பணிகள் | 9,12,96,260 | 7,92,26,410 |
| வாகனங்கள் | 12,13,988 | 10,01,256 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச்செலவுகள் | 18,56,97,247 | 19,78,39,648 |
| | 58,20,39,242 | 53,34,31,918 |
| **மொத்தம்** | **2,63,26,64,784** | **2,27,72,71,989** |

அட்டவணை - எல்

| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 1,89,49,80,366 | 1,63,98,46,347 |
| பணியாளர் நலச் செலவுகள் | 10,43,54,108 | 5,60,87,632 |
| அயல்துறை பணியிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | (4,97,145) | 9,75,564 |
| | | |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | 41,22,17,488 | 37,71,64,660 |
| | | |
| **மொத்தம்** | **1,58,66,19,841** | **1,31,97,44,883** |

அட்டவணை - எம்

| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| | | |
| **அலுவலகச் செலவுகள்:** | | |
| வாடகை மற்றும் வரி | 39,52,506 | 61,12,616 |
| மின் கட்டணம் | 1,03,87,931 | 70,54,105 |
| கம்பியில்லாத தந்தி, தகவல் தொடர்பு செலவு | 2,17,938 | 80,669 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 98,00,456 | 1,05,87,215 |
| தபால் மற்றும் தந்திகள் | 38,66,160 | 51,99,631 |
| அச்சிடுதல் மற்றும் எழுதுபொருட்கள் | 84,29,052 | 90,56,080 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 20,25,219 | 11,37,342 |
| இதர அலுவலகச் செலவுகள் | 66,05,482 | 1,00,82,537 |
| பயணம் மற்றும் பயணப்படிச் செலவுகள் | 2,28,91,525 | 2,03,59,995 |
| | | |
| **நிர்வாகச் செலவுகள்:** | | |
| வாரியக்கூட்டத்திற்கான செலவுகள் | 0 | 1,84,29 |
| தணிக்கைக் கட்டணங்கள் | 1,12,360 | 82,725 |
| வழக்குகளுக்குச் செலவுகள் | 83,36,829 | 46,04,226 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும்செலவுகள் | 52,038 | 6,103 |
| வங்கிக் கட்டணம் | 77,59,353 | 78,85,254 |
| மதிப்பூதியம் | 1,000 | 1,000 |
| பத்திர கடன் நிர்வாகச் செலவு | 1,96,445 | 3,93,708 |
| பிற நிர்வாகச் செலவுகள் | 60,53,224 | 82,39,831 |
| வாரியத்தின் அமர்வுக்கட்டணம் | 0 | 19,269 |
| | **9,06,87,518** | **9,09,20,735** |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடு | 2,71,74,016 | 2,73,58,720 |
| | | |
| **மொத்தம்** | **6,35,13,502** | **6,35,62,015** |

அட்டவணை - என்

| முந்தைய கால சரிகட்டிய கணக்கு | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| **பற்று:** | | |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 22,65,41,911 | 30,89,29,372 |
| குடிநீர்க் கட்டணம் - அளவி பொறுத்தப்படாதது | 6,46,82,806 | 5,40,62,640 |
| குடிநீர்க்கட்டணம்-அளவிபொறுத்தப்பட்டது | 1,47,28,115 | 23,60,200 |
| கழிவு நீர்க் கட்டணம் | 3,03,31,031 | 1,93,08,086 |
| வட்டி | 99,94,367 | 1,00,41,780 |
| பயணம் மற்றும் பயணப்படி | 0 | 28,14,381 |
| நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | 8,66,11,538 | 0 |
| பிணை வைப்புத்தொகை | 40,650 | 0 |
| சில்லரைச் செலவுகள் | 0 | 6,11,77,184 |
| ஓய்வு ஊதியர்களின் மருத்துவ நிதி | 0 | 11,43,386 |
| அக விலைப்படி நிலுவை | 96,37,984 | 0 |
| தேய்மானம் | 3,68,17,839 | 52,70,32,871 |
| முன்பண உபரிப்பயன் வரி | 0 | 66,78,153 |
| **மொத்தம் 'அ'** | **47,93,86,241** | **99,35,48,053** |
| **வரவு:** | | |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | 7,93,27,457 | 40,94,31,437 |
| குடிநீர்க் கட்டணங்கள் - அளவி பொறுத்தப்படாதது | 2,66,55,538 | 7,21,30,166 |
| குடிநீர்க் கட்டணங்கள் - அளவி பொறுத்தப்பட்டது | 1,36,93,389 | 52,88,944 |
| கழிவு நீர்க் கட்டணங்கள் | 1,31,46,856 | 2,57,60,773 |
| வங்கிச் செலவினங்கள் | 0 | 15,737 |
| சில்லறைச் செலவுகள் | 0 | 42,097 |
| வட்டி | 59,96,249 | 0 |
| தேய்மானம் | 1,41,08,362 | 0 |
| **மொத்தம் 'ஆ'** | **15,29,27,851** | **51,26,69,154** |
| | | |
| **மொத்தம் (அ- ஆ)** | **32,64,58,390** | **48,08,78,899** |

## அட்டவணை - ஓ

| கடன்மீதான வட்டி | 2011-12 ரூபாய் | 2010-11 ரூபாய் |
|---|---|---|
| **வட்டி** | | |
| அரசுக்கடன் | 58,63,47,781 | 58,63,47,781 |
| நிதி நிறுவனங்கள் | 36,95,05,102 | 34,57,75,735 |
| பத்திரங்கள் | 94,24,249 | 2,54,69,083 |
| | **96,52,77,132** | **95,75,92,599** |
| கழிக்க : வட்டி முதலாக்கம் | 2,53,99,000 | 2,64,69,000 |
| **மொத்தம்** | **93,98,78,132** | **93,11,23,599** |

## அட்டவணை - பி
## குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள்

1. கணக்குமுறை கோட்பாடு

நிதிநிலை அறிக்கை வரலாறுமிக்க அடக்கவிலை கருத்து மற்றும் "நிறுவனத் தொடர்ச்சி அனுமானம்" ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. ஈட்டிய ஆதாயத்தின் அடிப்படையிலான கணக்குமுறையை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பின்பற்றுகிறது.

பொதுமக்களின் பங்களிப்பு: குடிநீர் / கழிவு நீர் இணைப்புப் பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை அடுத்த நிதி ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2.சரக்கு மதிப்பீடு:

பண்டக சாலையில் உள்ள பொருட்களின அடக்கவிலை நிறையிட்ட சராசரி முறையில் கணக்கிடப்படுகிறது.

3.இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள்:

இருப்புநிலை குறிப்பிற்கு பின்னர்நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலை குறிப்பு தேதி மற்றும் நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள்.

4.முந்தைய கால வகைகள்:

முந்தைய ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் உள்ள வரவு, செலவு பிழைகள் நடப்பு ஆண்டில் குறிப்பிடுவது முந்தைய காலச் சரி கட்டுதல் ஆகும். முந்தைய ஆண்டிற்கான வரவு செலவு வைப்பு கணக்கையும் தேவையிருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் வரவு செலவு தொடர்பான முந்தைய ஆண்டுகளோடு தொடர்புடைய இந்த ஆண்டு செலவுகள் கூட முந்தைய வகைகளாக கருதப்படுகிறது.

5. தேய்மானம்

அசையாச் சொத்துக்கள் விலை அடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிய தேய்மான விகிதப்படி ஒரே தொகை முறையில் தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தேய்மானம் வருடத்தில், செப்டம்பர் 30ம் தேதிக்குப்பின்னர் கணக்கில் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு ஒரு வருட தேய்மானமும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்த பிப்ரவரி மாதம் முடிய புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு அரை ஆண்டு தேய்மானமும் கணக்கிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் சேர்க்கப்பட்ட சொத்துக்களுக்கு தேய்மானம் விடுக்கப்பட்டுள்ளது. முன்னேற்றத்தில் உள்ள திட்டப்பணிகள் முடிவடைந்து உபயோகத்திலுள்ள சொத்துக்களின் தேய்மானம் முடிப்பதற்காக காத்திருந்த போதிலும் (நேர்கோட்டு முறையில்) ஒரே தொகை முறையில் 5 சதவிகிதமும் கணக்கிடப்படுகிறது.

6.வருவாய் ஏற்பு;

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஈட்டிய ஆதாயத்தில் அடிப்படையிலான கணக்குமுறையை பின்பற்றுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரவுகளும் செலவினங்களும் வரவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு அடிப்படையில் நடப்பு ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. பணியாளர்களின் கடனுக்கான வட்டி மற்றும் ஓய்வூதிய கால பலன்கள் ரொக்கமாக கணக்கிடப்பட்டுள்ளது.

7.ஐயப்பாடுள்ள கடன்கள்:

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் சில்லறைக் கடனாளிகளின் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.அசையாச் சொத்து:

அசையாச் சொத்து எனப்படுவது கொள்முதல் விலை அல்லது கட்டமைப்பு செலவிலிருந்து வந்த அசையாச் சொத்தின் மீதான தொடர் தேய்மான மதிப்பீட்டை கழிக்கப் பெருவது ஆகும். அசையா சொத்துக்கான செலவு எனப்படுவது அடிப்படை செலவு மற்றும் நிறுவனத்திற்காக செலவழிக்கப்படும் செலவு முதல் அதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும்வரை செலவழிக்கப்படும் அனைத்து செலவுகளை உள்ளடக்கியது ஆகும். திட்டவளர்ச்சி செலவினங்கள் திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் குறிக்கும். திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக கொடுக்கப்படும் ஊதியம், சம்பளம், மற்றும் இதரபடிகள், அலுவலக செலவுகள், நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு ஆகியவற்றில் விகிதாச்சாரம் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

9.மானியம்

அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தனியாக காண்பிக்கப்படுகிறது. இந்த வகையான மானியத்திற்காக தொகை ஏதும் திருப்பி செலுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

10.முதலீடுகள்:

பொதுவாக முதலீடு எனப்படுவது ரொக்கமாக வங்கிகளில் செலுத்தப்படும் குறித்த கால வைப்புத் தொகை. அந்த வைப்புத்தொகை மீது பெறப்படும் வட்டி, வரவு மற்றும் செலவு கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த வைப்புத்தொகை அல்லாத மற்ற நிதிகள் அல்லது வளர்ச்சி திட்ட முதலீடுகள் மீது பெறப்படும் வட்டி அந்த நிதி திட்ட முதலீடு கணக்கில் வரவு வைக்கப்படும்.

11.ஓய்வூதிய பணியாளர்களின் பலன்கள்:

பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு கால நிதி நலன்கள் ரொக்க அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

12.கடன்களின் மதிப்பு

சொத்து வாங்குவதற்காக வாங்கும் கடன் மீதான செலவுகளையும் அந்த சொத்து மதிப்பின் மீது முதலீடு செய்யப்படும்.

13.ஒதுக்கீடு, நிச்சயமற்ற பொறுப்புகள்:-

வாரியத்திற்கு எதிரான நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு வழக்கும் சட்டப்படியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் சில்லறைச் செலவினப் பொறுப்பாக வைத்துள்ளது.

அட்டவணை - க்யூ

2012 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள்
இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

I அட்டவணை - ஏ - பங்குகள்

1. அரசிடமிருந்து பெறப்படும் பங்குகள்
இந்த கணக்கு முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளான ஆலந்தூர், கத்திவாக்கம் மற்றும் திருவொற்றியூர் ஆகியவற்றின் மீதத் தொகை முறையே ரூ.24.29 கோடி, ரூ.0.21 கோடி மற்றும் ரூ.3.76 கோடி ஆக ரூ.28.26 கோடியை உள்ளடக்கியதாகும்.

2. பொது மக்களிடமிருந்து பெறப்படும் பங்குகள்
குடிநீர் / கழிவு நீர் இணைப்புப் பணிகளுக்காக பொது மக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை ரூ.41.51 கோடி (சென்ற ஆண்டு ரூ.34.98 கோடி) இந்த ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பொது மக்கள் வைப்புத் தொகை கணக்கில் இருந்த ரூ.20.96 கோடியும் இதே கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. பொறுப்புகளுக்கு மேற்பட்ட சொத்துக்கள்
சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இடைக்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ.15.92 கோடி, ரூ.5.19 கோடி, மற்றும் ரூ.0.08 கோடி பெறப்பட்ட பொறுப்புகளுக்கும் மிகையான தொகை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நீண்ட காலமாக உள்ளது.

4. சொத்துக்களுக்கும் மேற்பட்ட பொறுப்புகள்
2012 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி 42 உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து மொத்தமாக ரூ.57.99 கோடி அளவில் சொத்துக்களுக்கு மேற்பட்ட பொறுப்புகள் மாற்றப்பட்டுள்ளது.

5. மூலதன ஒதுக்கீடு
சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணமாக பெறப்பட்ட ரூ.19.73 கோடி (சென்ற ஆண்டு ரூ.27.87 கோடி) மூலதன ஒதுக்கீடு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

6. நிதி
நிலையானச் சொத்துக்களை புதுப்பிக்கும் நிதியில் உள்ள ரூ.99.67 கோடியில் ரூ.40.67 கோடி வரை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

II - அட்டவணை - பி - அரசுமானியம்

1. அரசுமானியம் (உள்ளாட்சி அமைப்புகள்) - ரூ.117.78 கோடி (சென்ற ஆண்டு - இல்லை)
42 முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்றுக்கொண்டதற்காக அரசு மானியத் தொகை மொத்தமாக ரூ.117.78 கோடியாகும். மானியத்தின் நோக்கம் / உபயோகிக்கும் விவரங்கள் அறியப்பட்டு வருகின்றன.

| பகுதி | பெயர் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| I | திருவொற்றியூர் | 19.70 |
| III | மாதவரம் | 13.33 |
| VII | அம்பத்தூர் | 47.58 |
| XI | வளசரவாக்கம் | 16.64 |
| XII | ஆலந்தூர் | 6.45 |
| XIV | பெருங்குடி | 14.08 |
| | **மொத்தம்** | **117.78** |

2. பொறுப்புரிமை மாற்றம் நிதி - ரூ.126.25 கோடி (சென்ற ஆண்டு ரூ.89.37 கோடி)
சென்னைக் குடிநீர் வாரியத்தின் மாநில வரி வருவாயிலிருந்து மானியமாக நிலையான சதவிகிதத்தில் பெறப்பட்ட தொகை பொது நோக்கில் பயன்படுத்துவதற்காக பொறுப்புரிமை மாற்றம் நிதியாக கணக்கிடப்பட்டுள்ளது.
2012 மார்ச் 31 உடன் முடிவடைந்த நிதியாண்டில் சென்னைக்குடிநீர் வாரியம் ரூ.36.88 கோடி (சென்ற ஆண்டு ரூ.31.29 கோடி) மானியமாக பெற்றுள்ளது. மூலதன செலவுகளுக்கு மானியமாக பெறப்பட்ட தொகை, நிலையான சொத்துக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

III - அட்டவணை - சி - நீண்ட கால கடன்கள்

1. அரசிடமிருந்து பெற்ற கடன் ரூ.727.51 கோடி (சென்ற ஆண்டு ரூ.727.51 கோடி)

   அரசிடமிருந்து பெறப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது சென்னைக் குடிநீர் திட்டங்களுக்கும் நடப்பிலுள்ள திட்டங்களுக்கான முன்பணமும் இந்த கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அசல் மற்றும் வட்டி வகைகள் இந்தக் கணக்கில் திருப்பி செலுத்தவில்லை. தவணை கடந்த மற்றும் நிலுவையில் உள்ள அசலும் வட்டியும் சேர்த்து மொத்தம் ரூ.770.96 கோடி ஆகும். தவணை கடந்த நிலுவைக்கு அபராத வட்டி எதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை

2. நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்கள் ரூ.183.66 கோடி (சென்ற ஆண்டு - இல்லை)

   முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் டுபிட்கோ மற்றும் டுபீசல் நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுள்ளன. 2012 மார்ச் 31 இல் இக்கடன்களின் நிலுவைத் தொகை ரூ.183.16 கோடி ஆகும். உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளதால் இத்தொகை வாரியக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

IV - அட்டவணை - டி - நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும்

1. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை - கழிவு நீரகற்றல்

   2009-10 ஆம் ஆண்டு வரை மதுரை கும்பகோணம் மற்றும் சென்னை மாநகர நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டம் போன்ற பிற கழிவு நீரகற்றல் பணிகளுக்காக ரூ.144.09 கோடி வைப்புத் தொகையாக வாரியம் பெற்றுள்ளது. தேசிய நதி நீர்ப்பாதுகாப்பு இயக்குனரகத்தின் இப்பணிகளுக்காக வாரியம் ரூ.162.21 கோடி செலவழித்துள்ளது. இந்த வைப்புத் தொகை திட்ட செலவில் காட்டப்படாமல் முடிவு அறிக்கைக்காக காத்திருக்கின்றன.

2. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை - பொதுப்பணிகள் - ரூ.528.28 கோடி

   அ) 2012 மார்ச் 31 ஆம் தேதி நிலையில் இந்தத் தலைப்பில் (கணக்கு எண் 5150) காட்டப்பட்டிருக்கும் தொகை ரூ.1.38 கோடியையும் உள்ளடக்கியதாகும். இந்த கணக்கில் நடப்பு நிதியாண்டில் வரவு செலவு ஏதுமில்லை.

   ஆ) இந்த கணக்கில் மீதுமுள்ள தொகை முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வாரியம் முன்பணமாக பெற்ற ரூ.297.24 கோடியை நிகர் செய்த பிறகும் உள்ளதாகும்.

   இ) முன்னாள் உள்ளாட்சி பகுதியான பெருங்குடியில் குடிநீர் இணைப்பு அளிப்பதற்காக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை ரூ.0.65 கோடி இதுவரை இணைப்பு வழங்கப்படாததால் இக்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. நில விற்பனை முன்பணம் - ரூ.64.08 கோடி (சென்ற ஆண்டு ரூ.12.41 கோடி)

   இத்தொகை சுமார் 5.604 ஏக்கர் பரப்பளவில் கோயம்பேடு மற்றும் சென்னையில் உள்ள இரு இடங்களில் உள்ள நிலத்தை வாரியம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்காகப் பெற்ற முன்பணமாகும். நில விற்பனை மற்றும் மாற்றத்திற்கு வருமான வரிக்கான வழிவகைகள் ஏதும் புத்தகங்களில் செய்யப்படவில்லை.

V - அட்டவணை - இ - நடப்பு பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

1. பொது வைப்பு நிதியிலிருந்து பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் முன்பணமாக வழங்கிய தொகை நிதியிலுள்ள தொகையிலிருந்து கழிக்கப் பெற்று மீதத் தொகையான ரூ.38.99 கோடி (சென்ற ஆண்டு ரூ.38.26 கோடி) நடப்பு பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

2. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களைப் பொறுத்தவரை பொது வைப்பு நிதி, பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் ஆகியவற்றில் அவர்களின் கணக்கில் இருக்கும் தொகையை சென்னை மாநகராட்சி / தமிழக அரசிடமிருந்து பெறப்பட வேண்டும்.

   அ. பொது வைப்பு நிதி - ரூ.1.05 கோடி

   ஆ. பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் - ரூ.0.16 கோடி

3. 2005-2006 ஆம் ஆண்டில் முன்பணமாக வசூலிக்கப்பட்ட குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணத்தொகையான ரூ.2.66 கோடி பணம் செலுத்தியோரால் கோரப்படாத காரணத்தினால் வாரியத்தின் வருவாய் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

4. வாரியத்தின் வருங்காலத்தை முன்னிட்டு தற்போது ஏற்பட்டுள்ள நிரந்தர இழப்பை சரி செய்ய வரி பொறுப்புகள் மதிப்பீடு செய்யப்படாததால் வரி தள்ளி வைப்புக்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

VI - அட்டவணை - எப் - நிலையான சொத்துக்கள்

1. நிலையான சொத்துக்களில் ரூ.275.77 கோடி சேர்க்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ள மற்றும் முடிப்பறிக்கை பெறப்படாத நான்கு திட்டப்பணிகள் இரண்டாம் சென்னைக் குடிநீர் திட்டப்பணி, நாளொன்றுக்கு 530 மில்லியன் குடிநீர் வழங்கும் திட்டப்பணி, சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டம் மற்றும் மதுரை மற்றும் கும்பகோணம் வடிகால் பணிகள் ஆகும்.

2. முன்னேற்றத்திலுள்ள பணிகளுக்காக ஊதியம், கூலி மற்றும் படிகள், அலுவலகச் செலவினங்கள், மற்றும் நிர்வாகச் செலவினங்கள், எரிபொருள் மற்றும் மசகுகளின் செலவுகள் போன்றவை சரிவிகித விழுக்காடு

முறையில் முறையே 23 சதவீதம், 30 சதவீதம் மற்றும் 30 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளுக்காக ரூ.182.00 கோடி (சென்ற ஆண்டு ரூ.653.57 கோடி) முன்னேற்ற திட்டப் பணிகளில் உள்ளது. இப்பணிகள் முடிவடைந்த பிறகு உள்ளாட்சிகளால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையில் மொத்தச் செலவும் சரிக் கட்டப்படும்.
4. பின்வரும் முன்னேற்றத்தில் உள்ள திட்டப் பணிகளின் கணக்கில் 2011-12 ஆம் ஆண்டில் எந்த வித வரவு செலவும் இல்லை. மற்றும் திட்டப் பணிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. இத்திட்டப் பணிகளின் முடிப்பறிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

| முன்னேற்றத்திலுள்ள திட்டப் பணி | நிகழ்வுகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| குடிநீர் | 250 | 143.19 |
| கழிவு நீரகற்றல் | 163 | 296.69 |
| பொது | 29 | 3.78 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் | 23 | 1.99 |
| சென்னைக் குடிநீர் பெருக்கு திட்டம் | 5 | 15.68 |
| **மொத்தம்** | **470** | **461.33** |

மேற்குறிப்பிட்டுள்ள முன்னேற்றத்திலுள்ள திட்டப் பணிகளுக்கு தேய்மானம் கணக்கிடப்படவில்லை.

5. நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்கு அருகில் உள்ள மீனவ கிராமத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததால் ஜனவரி 2011 முதல் ஜனவரி 2013 வரை தலா ஒருவருக்கு மாதத்திற்கு ரூ.2,000/- வீதம் 223 மீனவர்களுக்கு நஷ்ட ஈடுவழங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த நஷ்ட ஈட்டுத் தொகை இத்திட்டத்திற்கான முதலீட்டுத் தொகையிலிருந்து வழங்கப்படுகிறது. மார்ச் 2012க்கான ரூ.4,46,000 வழங்கப்படவில்லை.
6. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்றுக்கொண்ட அசையா சொத்துக்கள்

அ) 24.10.2011 அன்றைய நிலையில், உள் நிதித் தணிக்கைத் துறையின் அறிக்கைப்படி மதிப்பே இல்லாத சொத்துக்கள், சேதமடைந்த சொத்துக்கள் / உபயோகத்தில் இல்லாத / செயல்படாத நிலையில் உள்ள சொத்துக்கள் ஒவ்வொன்றும் அதன் மதிப்பு ரூ.100/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆ)நேரடி ஆய்வின் போது கண்டறியப்பட்ட மற்றும் கணக்கில் வராத சொத்துக்கள் ஒவ்வொன்றிற்கும்சொத்தின் தன்மைக்கேற்ப ஒரு சொத்திற்கு ரூ.100/- / ரூ.1,000/- என மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7. சில உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாததாகும். அச்சொத்துக்களை அவை உபயோகப்படுத்தி வந்தாலும் நஷ்டஈட்டுடன் கூடிய உரிமையாளர் மாற்றம் அல்லது தற்போது இருக்கும் ஏற்பாட்டினையே தொடர்வது போன்றவை இறுதி செய்யப்படவில்லை.

VII - அட்டவணை - ஜி - நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும்வைப்புத் தொகைகள்

1. அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் உள்ள நடப்புக் கணக்கு - ரூ.137.40 கோடி (சென்ற ஆண்டு ரூ.32.31 கோடி) மேற்குறிப்பிட்ட தொகையில் மொத்தம் சேர்த்து ரூ.17.53 கோடி இரண்டு நடப்பு கணக்கில் உள்ளது. அதில் ரூ.14.96 கோடி உள்ள ஒரு நடப்புக் கணக்கு சரி செய்யப்படாமல் உள்ளது. இதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
2. வசூல் கட்டுப்பாடு கணக்கு - ரூ.0.13 கோடி (செலவு வீதம்) (சென்ற ஆண்டு ரூ.6.07 கோடி மீதமுள்ள நிகர வரவு) மேற்குறிப்பிட்டுள்ள மண்டல அலுவலகம் II- இன் கணக்கில் வரும் இத்தொகை தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். சென்னைக் குடிநீர் வாரியம் இதைச் சரி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.
3. தலைமை அலுவலகம் / பகுதி அலுவலகம் நடவடிக்கை - ரூ.22.01 கோடி (நிகர மீதமுள்ள வரவு) (சென்ற ஆண்டு ரூ.5.93 கோடி (நிகர மீதமுள்ள வரவு)

மீதமுள்ள, தலைமை அலுவலகம் / பகுதி அலுவலகங்களின் நடவடிக்கையின் கணக்குகள் சரிசெய்யப்பட்டு முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வங்கிக் கணக்குகளின் மீதம் ரூ.4.13 கோடி (சென்ற ஆண்டு - இல்லை)

அ) சென்னைக் குடிநீர் வாரியம் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதால் உள்ளாட்சி அமைப்புகளின் மொத்தத் தொகையான ரூ.17.99 கோடிக்கான 71 வங்கிக் கணக்குகள் முடிக்கப்பட்டன. வங்கிக் கணக்குகள் முடிக்கப்பட்ட பின் பெறப்பட்ட தொகையான ரூ.14.13 கோடியில் ரூ.13.86 கோடிக்கு மட்டுமே விவரங்கள் உள்ளன. மீதமுள்ள ரூ.0.27 கோடி புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்காக பெறப்படும் நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கில் மீதத் தொகையான ரூ.4.13 கோடி (ரூ.17.99 கோடி - ரூ.13.86 கோடி) 2012 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி

நிலுவையில் உள்ளது. மீதத் தொகையான ரூ.0.27 கோடி (ரூ.14.13 கோடி - ரூ.13.86 கோடி) புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்காக பெறப்படும் நிதிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

ஆ. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வங்கிக்கணக்குகள் முடிக்கப்பட்டிருந்தாலும், அவை 24.10.2011 முதல் கணக்கு முடிக்கப்பட்ட நாள் வரையிலான இடைக்காலத்தில் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. விவரங்கள் கிடைக்கப் பெறாததால் இதனை ஆய்வு செய்ய முடியவில்லை.

இ. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் வங்கிக் கணக்குகளை முடித்த நாளில் வங்கிக் கணக்கில் இருந்த மீதத் தொகையை வங்கி மீதமான சென்னைக் குடிநீர் வாரியம் அதன் 2012 மார்ச் 31 ஆம் தேதிப்படியான நிதிநிலை அறிக்கையில் ஏற்றுக்கொண்டுள்ளது.

5. முன்னாள் ஊராட்சி அமைப்புகள் வங்கிகளில் வைத்திருந்த நிலையான வைப்புக் கணக்கின் மீதம்- ரூ.16.60 கோடி (சென்ற ஆண்டு- இல்லை)

உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சென்னைக் குடிநீர் வாரியம் ஏற்றுக்கொண்டதால் அவற்றால் வங்கிகளில் துவக்கப்பட்ட 2012 மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி மொத்தத் தொகையான ரூ.16.60 கோடிக்கான நிலையான வைப்புநிதிக் கணக்குகள் முடிக்கப்பட்டன.

6. சில்லறைக் கடனாளிகள் - ரூ.8.66 கோடி (சென்ற ஆண்டு - இல்லை)

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் சில்லறைக் கடனாளிகளைப் பொறுத்தவரை குடிநீர்க் கட்டணம் மற்றும் கழிவு நீரகற்றல் கட்டணமாக 31.3.2012 தேதிப்படி பின்வரும் ஆறு உள்ளாட்சிகளுக்கும் மொத்தம் ரூ.8.66 கோடி கருதப்பட்டுள்ளது.

| உள்ளாட்சியின் பெயர் | குடிநீர்க்கட்டணம் ரூ.கோடியில் | கழிவுநீர்க் கட்டணம் ரூ.கோடியில் |
|---|---|---|
| ஆலந்தூர் | 2.49 | 3.61 |
| அம்பத்தூர் | 0.55 | - |
| கத்திவாக்கம் | 0.07 | - |
| மாதவரம் | 0.26 | - |
| மதுரவாயல் | 0.12 | - |
| வளசரவாக்கம் | 0.10 | 1.46 |
| **மொத்தம்** | **3.59** | **5.07** |

7. வாரியத்தின் குழுமப் பணிக்கொடை பொறுப்பாட்சியிடமிருந்து வரவேண்டிய ரூ.0.50 கோடி (சென்ற ஆண்டு ரூ.10.15 கோடி) நடப்புச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் முன்பணத்தில் சேர்ந்துள்ளது)

வரவு-செலவு கணக்கிற்கான குறிப்புகள்

I - அட்டவணை - எச் - குடிநீர் விற்பனை மற்றும் கழிவு நீரகற்றல் கட்டணம்

குடிநீர் விற்பனை - அளவி பொருத்தப்படாதது - வீட்டு உபயோகம் இந்தக் கணக்கில் காட்டப்பட்டிருக்கும் ரூ.27.84 கோடி உள்ளாட்சி அமைப்புகளின் தொகையையும் உள்ளடக்கியதாகும். ஆயினும், அக்டோபர் 2011 முதல் மார்ச் 2012 வரை இணைப்புக்கு முன்பு உள்ளாட்சிகள் நிர்ணயம் செய்திருந்த கட்டணமே வசூலிக்கப்பட்டுள்ளது.

II - அட்டவணை - ஐ - குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி

புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளின் ஆண்டு மதிப்பு நிர்ணயம் செய்யப்படாததால் குடிநீர் வரியில் காட்டப்பட்டிருக்கும் ரூ.22.16 கோடியில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வரித்தொகை சேர்க்கப்படவில்லை.

III - அட்டவணை - எல் - பணியாளர்களுக்கான கொடுப்பு மற்றும் ஒதுக்கீடு

1. ஓய்வூதியம்

சேர்ந்துள்ள ஓய்வூதிய நிதி ரூ.81.84 கோடி (சென்ற ஆண்டு ரூ.75.98 கோடி). அதில் ரூ.62.05 கோடி (சென்ற ஆண்டு ரூ.67.29 கோடி) தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ.4.79 கோடி (சென்ற ஆண்டு ரூ.2.47 கோடி) பங்குத் தொகை பெறும் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 2012 மார்ச் 31 தேதிய நிலையில் பிற்கால ஓய்வூதியத் தேவை குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை.

2.பணிக்கொடை

வாரியம் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிக்கொடை குழுமநிதி ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தில் உள்ள பங்குத்தொகை வருவாய்க்கான கணக்கில்உள்ளது. இந்த ஆண்டில் ரூ.3.75 கோடி வரவு செலவு கணக்கில் காட்டப்பட்டுள்ளது.2012 மார்ச் 31 தேதி நிலையில் பிற்கால பணிக்கொடை தேவை குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை.

3.விடுப்பைப் பணமாக்குதல்

பணியாளர்கள் ஓய்வு பெறும்போது விடுப்பை பணமாக்கிய தொகை வரவு செலவு கணக்கில் காட்டப்படுகிறது

4.புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் பணியாளர்களுக்கான கொடுப்பு

(i) 24.10.2011 முதல் 31.12.2011 வரை பணியாளர்களின் ஊதியம் சென்னை மாநகராட்சியில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உரிய விவரங்கள் சென்னை மாநகராட்சியிடமிருந்து கிடைக்கப் பெறாததால், தற்காலிக அடிப்படையில் ஜனவரி 2012ல் வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் வாரிய கணக்குகளில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

(ii) 2012 மார்ச் 31 ஆம் தேதி நிலையில் வாரியக் கணக்குகளில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களுக்கான பொது வைப்பு நிதி, பங்களிப்பு பெறும் ஓய்வூதியத்திட்டம் மற்றும் விடுப்பைப் பணமாக்குதல் போன்றவற்றிற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

(iii) 2012 மார்ச் 31 ஆம் தேதி நிலையில் வாரியக் கணக்குகளில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கான பணிக்கொடைக்காக ரூ.2.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

IV. ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஏற்பாடு

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை 24.10.2011 தேதிய நிலையில் நிலுவையில் இருக்கும் குடிநீர்வரி மற்றும் குடிநீர் கட்டணங்களுக்காக சரிவிகித நிலையில் ஐயப்பாடுள்ள கடன்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

V தேய்மானம்

1. சென்னைக் குடிநீர் வாரியம் 1.4.2003 லிருந்து யூனிக்ஸ் முறையிலிருந்து ஆரக்கள் முறைக்கு மாறியுள்ளது. அவ்வாறு முறை மாற்றம் செய்த போது அசையாச் சொத்துக்கள் அனைத்தும், ஒவ்வொரு சொத்தும் வாங்கப்பட்ட தினத்திலிருந்து கணக்கிடப்படாமல் பல்வேறு இனங்களில் ஆரக்கள் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னைக் குடிநீர் வாரியம் விலை அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும் முறையைப் பின்பற்றி வருவதால் காலம் முதிர்வுற்ற சொத்துக்களின் உண்மையான மதிப்பை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளது.
2. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வாரியம் ஏற்றுக்கொண்ட அசையாச் சொத்துக்களைப் பொறுத்தவரை பின்வரும் நடைமுறை கையாளப்படுகிறது.

அ) முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வாரியம் ஏற்றுக்கொண்ட அசையாச் சொத்துக்களைப் பொறுத்தவரை பின்வரும் நடைமுறை கையாளப்படுகிறது.

அ)அசையாச் சொத்துக்களின் தேய்மானம் 01.04.2011 முதல் 24.10.2011 வரை இறங்கு முக மதிப்பீடு) அடிப்படையிலும் 25.10.2011 முதல் 31.03.2012 வரை ஒரே தொகை விலை அடிப்படையிலும் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆ) ஒரு சில சொத்துக்களின் நிர்ணயிக்கப்பட்ட புத்தக மதிப்பை ஏற்று, இம்மதிப்புகளின் தேய்மானம் 24.10.2011 முதல் 31.03.2012 வரையிலான மீதக் காலத்திற்கு ஒரே விலை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

VI அட்டவணை - ஒ - கடன் சேவைக் கட்டணம்

நிதி நிறுவனங்கள்

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் டுபிட்கோ மற்றும் டுபிசல் நிறுவனங்களிலிருந்து சில கடன்களைப் பெற்றுள்ளன. 2012 மார்ச் 31 ஆம் தேதிய நிலையில் இக்கடன்களில் மொத்தம் ரூ.183.66 கோடி ஆகும்.வாரியம் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதால் இந்த கடன்களும் வாரியக் கணக்கில் மாற்றப்பட்டுள்ளது. 25.10.2011 முதல் 31.03.2012 வரை இக்கடன்களுக்கான வட்டியாக ரூ.5.38 கோடி வரவு செலவு கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இதனை முறையாக சரி செய்ய வேண்டும்.

பொது

1. 2011 அக்டோபர் 24 ஆம் தேதியிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளதால், 2012 மார்ச் 31 ஆம் தேதிய நிலையிலான வாரிய நிதிநிலை அறிக்கை, 42 உள்ளாட்சிகளின் தணிக்கை செய்யப்படாத கணக்கையும் உள்ளடக்கியதாகும்.
2. 2012 மார்ச் 31 நிலையிலான வாரிய இருப்பு நிலைப்பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வாரியக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. வாரியத்தின் 2012 மார்ச் 31 நிலையிலான வரவு செலவு கணக்கில் முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் 24.10.2011 முதல் 31.03.2012 வரையிலான காலத்திற்கான வரவு செலவு கணக்குகள், நிதிபரிவர்த்தனைகள் மற்றும் இருப்பு நிலைப்

பட்டியலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கட்டணம் மற்றும் சில செலவினங்களைப் பொறுத்தவரை ரொக்க அடிப்படையிலான கணக்கீட்டு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

3. முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த வரை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிலும், தலைமை தணிக்கைத் துறையின் பொது அறிக்கையிலும், நிதி தாக்கம் குறித்த பல தணிக்கை பத்திகள் சரி செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன. 2012 மார்ச் 31 நிலையிலான வாரிய நிதி நிலை அறிக்கையில், உரிய விவரங்கள் இல்லாததால் இவை கருதப்படவில்லை.

4. நிச்சயமற்ற பொறுப்புகள்

அ. வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள 173 வழக்குகளின் (சென்ற ஆண்டு 91 வழக்குகள்) கேட்புத் தொகையான ரூ.14.89 கோடியை (சென்ற ஆண்டு ரூ.13.60 கோடி) வாரியம் கடனாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் 3 வழக்குகளுக்கான தொகை ரூ.12.77 கோடி மத்தியஸ்தம் கீழ் வருகிறது. (கடந்த ஆண்டு ரூ.12.77 கோடி)

ஆ. ரூ.15.32 கோடி வாரியத்திற்கும், சென்னை கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திற்குமிடையே தகராறிலுள்ளது.

இ. முன்னாள் உள்ளாட்சி அமைப்பான ஆலந்துார் நகராட்சியைப் பொறுத்தவரை ரூ.3.02 கோடி நிச்சயமற்ற பொறுப்பாக உள்ளது. ஆலந்துார் நகராட்சி அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைக்க ஐவிஆர்சிஎல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது. இதில் ஏற்பட்ட தகராறில் மத்தியஸ்தர் ஐஆர்விசிஎல் நிறுவனத்திற்கு ஆதரவாக அளித்த தீர்ப்பை எதிர்த்து ஆலந்துார் நகராட்சி மேல் முறையீடு செய்துள்ளதால் நிச்சயமற்ற பொறுப்பாக உள்ளது.

ஈ. 2009-10 ஆம் ஆண்டிற்கான தலைமை தணிக்கை அறிக்கைப்படி முன்னாள் உள்ளாட்சி அமைப்பான திருவொற்றியூர் நகராட்சி குடிநீர் சேவை வரியாக ரூ.0.17 கோடியை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தத் தவறியுள்ளது. இத்தொகை 2012 மார்ச் 31 நிலவரப்படி நிச்சயமற்ற பொறுப்பாக வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது.

5. மூன்றாம் நபர் நிலுவைகள் உறுதி செய்யப்படும்.

6. சென்ற ஆண்டின் கணக்கு மதிப்புகள் தேவைப்படும் இடங்களில், இந்த ஆண்டின் வகைப்பாடுகளுக்கேற்ப மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
**எஸ்.வெங்கட்ராம் மற்றும் குழுமத்திற்காக**
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண். 04656S

வாரியத்திற்காக

**சி.ஆறுமுகம், இ.த.க.ப.**
நிதி இயக்குநர்

**டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப.**
நிர்வாக இயக்குநர்

**ஆர். கந்தவேலு**
கூட்டாளி
உ.எண்: 12811

இடம்:சென்னை
நாள்:08.08.2013

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( சென்னைக் குடிநீர் ) துறை

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயற்பாடுகள் பற்றிய 31. 03. 2012 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழக அரசின் ஆய்வறிக்கை :

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும், குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்டதாமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28, 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

அரசாணை எம்.எஸ்.256 ந.நி. மற்றும் கு.வ. (தேர்தல்) துறை நாள் 26.12.2009 மற்றும் வாரிய தீர்மானம் எண்.150/2011 நாள் 21.11.2011 படி 2011–12 ஆம் ஆண்டில் 42 உள்ளாட்சி மன்றங்கள் (9 நகராட்சிகள் 8 பஞ்சாயத்துக்கள் மற்றும் 25 கிராம பஞ்சாயத்துக்கள்) விரிவாக்கப்பட்டு சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயலாக்கப் பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் முந்தைய உள்ளாட்சி மன்றங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மதிப்பு சரிபார்க்கப்பட்டு வாரியத்தின் கணக்குடன் சேர்க்கப்பட வேண்டும். எனவே, என். சி. ஆர். கன்சல்டன்ட்.லிமிடெட்., உள்ளாட்சி கணக்குகளை வாரிய கணக்குடன் சேர்ப்பது தவிர உள்ளாட்சி நிர்வாகத்தின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் வருவாய்க்கான நடவடிக்கையின் தன்மையை அறிந்து கொள்வதற்காகவும் கலந்தறிவாளராக நியமிக்கப்பட்டனர். அவர்கள் அளித்த அறிக்கையின் படி முந்தைய உள்ளாட்சி மன்றங்களின் கணக்கு வழக்குகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு சட்டப்படியாக தணிக்கையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. 31–03–2012 ஆம் தேதியில் இவ்வாரியத்தின் சொத்துகளின் மதிப்பு ரூபாய் 5397.13 கோடிகள் ஆகும். இதில் நிகர நிலையான சொத்துக்கள் ரூபாய் 4480.87 கோடியும், நடப்பு சொத்துக்கள் ரூபாய் 916.26 கோடிகள் மதிப்புள்ள கடன்கள், முன்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகியவைகள் அடங்கும்.

3. வாரியத்தின் பொறுப்புகள் மொத்தம் ரூபாய் 5788.92 கோடி ஆகும். இதில் பங்குகள் ரூபாய் 1231.77 கோடி, அரசு மான்யம் ரூபாய் 1485.62 கோடி, நீண்ட கால கடன்கள் ரூபாய் 1370.31 கோடி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும், வைப்புத் தொகை மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூபாய் 1701.21 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

சென்னைக்குடிநீர் வாரியத்தின் குடிநீர் கட்டணங்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி பற்றிய வருவாய் விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் தெளிவாகின்றன :

| அ. குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கட்டணங்கள் | 2011-12 | 2010-11 |
|---|---|---|
| அளவிடப்பட்டது | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 1874.43 | 1823.78 |
| வணிகத்திற்கு | 10149.24 | 10684.92 |
| நிறுவனங்களுக்கு | 1369.38 | 1389.15 |
| நகராட்சிகளுக்கு | 698.74 | 926.20 |
| அளவிடப்படாதவை | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 2783.78 | 2595.96 |
| வணிகத்திற்கு | 1757.80 | 1740.56 |
| நிறுவனங்களுக்கு | 21.44 | 20.83 |
| தனியார்க்கு ஊர்திகள் மூலம் குடிநீர் வழங்கியது | 1618.71 | 1682.09 |
| கழிவு நீரகற்று கட்டணங்கள் | 2113.35 | 1899.07 |
| சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விற்பனை | 1381.46 | 1364.45 |
| மொத்தம் ( அ) | **23768.34** | **24127.01** |
| ஆ, குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | | |
| குடிநீர் வரி | 2216.57 | 2115.68 |
| கழிவு நீரகற்று வரி | 8152.65 | 7762.94 |
| மொத்தம் ( ஆ ) | 10369.23 | 9878.62 |
| மொத்தம் ( அ+ஆ ) | **34137.56** | **34005.63** |

4. 2011–2012 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூபாய் 530.15 கோடியாகும். இதில் செலவு ரூபாய் 711.87 கோடி. இந்த ஆண்டில் பற்றாக்குறை வருவாய் ரூபாய் 181.72 கோடியாக இருக்க, சென்ற ஆண்டில் ( 2010–11 ) பற்றாக்குறை வருவாய் ரூபாய் 125.45 கோடியாகும். வாரியம் அதன் பல்வேறு நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு மொத்த வருமானம் மொத்தச் செலவை விட குறைவாக இருந்தாலும் ,அதன் பணிகளை முழு நோக்குடன் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறது.

5. ஒவ்வோராண்டும் குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் அது சார்ந்த பணிகளைச் செய்வதற்கு வாரியம் பல திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆகவே, மொத்த வட்டியின் ஒரு பகுதியினைத் திட்ட செலவுகளுடன் கூட்டி முதலாக்கம் செய்யப்படுகிறது. மொத்த வட்டியான ரூபாய் 96.53 கோடியில் நடப்பு ஆண்டில் மட்டும் ரூபாய் 2.54 கோடி முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. வட்டியை முதலாக்கம் செய்யப்பட்ட பின் ரூபாய் 93.99 கோடி வட்டியாக, 2011–12 ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் கொள்ளளவினை அதிகரித்து மேம்படுத்த வாரியம் செயல்படுத்தும் இரண்டு கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டங்களில் ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கி இயக்கி, திருப்பித் தரும் திட்டம். மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகும்.

## 1) செயல்பாடுகள்

சென்னைப் பெருநகர் பகுதிகளின் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று சேவைகளின் திட்டமிட்ட வளர்ச்சியை மேற்கொள்ளுதல் மற்றும் உறுதி செய்தல், தேவைப்படும் கட்டமைப்புகளை உருவாக்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதிகளின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்கான திட்டங்களைச் செயலாக்குதல் குறித்த பொறுப்புகள் 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## 2) சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாட்டுப் பகுதிகள்

சென்னை மாநகர எல்லைக்குள் 42 உள்ளாட்சி அமைப்புகள் சமீபத்தில் இணைக்கப்பட்டுள்ளதால், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயலாக்க பரப்பளவு 174 சதுர கிலோமீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்துள்ளது. 2011–ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தற்காலிக விவரங்களின்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும். 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனை அலுவலகங்கள் வாயிலாக சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 3) குடிநீர் வழங்கல்

### 3.1. நகருக்கு குடிநீர் வழங்கும் ஆதாரங்கள்

சென்னைப் பெருநகர மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலையாய பணியாகும். சென்னைப் பெருநகரின் குடிநீர் தேவை, சென்னை நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள பூண்டி, செங்குன்றம், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய நீர்தேக்கங்களிலிருந்தும் மற்றும் கடலூர் மாவட்டம், வீராணம் ஏரியிலிருந்தும் பெறப்படுகிறது. மேலும் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம் மூலம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்தும் குடிநீர் பெறப்படுகின்றது.

இத்துடன் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித்தரும் வகையில் மீஞ்சூரில் கட்டப்பட்டுள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் குடிநீரை சென்னைக் குடிநீர் வாரியம் பெற்றுக் கொள்கிறது.

தற்போது, வாரியத்தால் சென்னைப் பெருநகர மக்களுக்கு நாள்தோறும் சுமார் 765 மில்லியன் லிட்டர் குடிநீரும், சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி பகுதிகளுக்கு நாள்தோறும் சுமார் 65 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் வசதிகளை சீரமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டு வருகின்றது.

### 3.2 கடல் நீரை நன்னீராக்கும் நிலையங்கள்

* குடிநீர்த் தேவை மற்றும் வழங்கும் அளவிலுள்ள இடைவெளியினை சமன் செய்வதற்கும், வறட்சி நிவாரண முயற்சியாகவும், வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் 25 ஆண்டு ஒப்பந்த காலத்திற்கு, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் நிலையம், மீஞ்சூரில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

மீஞ்சூரில் அமைக்கப்பட்ட 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மட்டும் அல்லாது தென் சென்னை பகுதியின் தேவைக்காக, மத்திய அரசின் மானியத்தில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் கடல்நீரை நன்னீராக்கும் மற்றொரு நிலையத்தினை நெம்மேலியில் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு தற்போது முடிக்கப்பட்டு இந்த நிலையம் பிப்ரவரி 2013 –ல் இருந்து செயல் பட்டு வருகிறது .

சென்னை நகரின் விரிவாக்கம் மற்றும் வளர்ச்சியினை கருத்திற்கொண்டு இந்த அரசு, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் மேலும் ஒரு நிலையத்தினை சென்னையின் தெற்கு பகுதியில் அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்கான நிலத்தை தேர்ந்தெடுக்கவும் சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்ளுதல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், நிதி ஆதாரங்களை வகை செய்தல், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பாய்வு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான கலந்தறிதற்குரியவரை நியமிப்பதற்கும் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன.

3.3. செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி வரை நீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய்

சென்னைப் புறநகர் பகுதிகளுக்கான குடிநீர் வழங்குதலை அதிகரிக்கும் பொருட்டு, நிர்ணயிக்கப்பட்ட முழு அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் குடிநீரை, செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எடுத்து செல்வதற்கு 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது இணையான குடிநீர் குழாய்கள் 6.5 கி.மீ. நீளத்திற்கு பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி . 41.35 கோடி மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. தற்போது நடைபெற்று வரும் குடிநீர்த் திட்டங்கள்

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ( கோடியில்) | மேற்கொள்ளப்பட்டுவரும் பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | சென்னை மாநகருக்கான திட்டங்கள் | | |
| 1 | சென்னை மாநகரின் குடிநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | 5 பணிகள் முடிவடைந்துள்ளன. இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | மதுரவாயல் | 23.30 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 24.24 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | திருவொற்றியூர் | 85.11 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | ஆலந்தூர் | 64.39 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | அம்பத்தூர் | 267.08 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | நெற்குன்றம் | 19.17 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | இதர உள்ளாட்சி அமைப்புகள் | | |
| 8 | ஆவடி நகராட்சி | 103.84 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | 909.13 | |

5.கழிவுநீரகற்றும் அமைப்பு

5.1. கழிவுநீரகற்றல் சேவையில் வளர்ச்சி

| விவரங்கள் | 1978 ன் நிலை | தற்போதைய நிலை |
|---|---|---|
| கழிவுநீர் அகற்றும் பிரதான குழாய்கள் (கி.மீ) | 1,223 | 2,677 |
| கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் | 58 | 209 |
| கழிவுநீர்ச் சுத்திகரிப்பு திறன் (எம்.எல்.டி) | 57 | 558 |
| நுகர்வோரின் எண்ணிக்கை | 1,14,000 | 6,11,275 |

5.2. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் உள்ள கழிவுநீர்த் திட்டங்கள்:

ஆவடி, அம்பத்தூர், தாம்பரம், மதுரவாயல், திருமழிசை, பெருங்குடி, போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம் மற்றும் பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் திட்டங்களை வாரியம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு;

| வ. எண் | பணியின் விவரம் | திட்ட மதிப்பீடு ( கோடியில்) | செயலாக்கத்தின் நிலை |
|---|---|---|---|
| | சென்னை மாநகர் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கான திட்டங்கள் | | |
| 1 | இராஜீவ் காந்தி தகவல் தொழில் நுட்ப சாலை வழியாக குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | பெருங்குடியில் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 31.48 | முடிவுற்றன |
| 3 | நெசப்பாக்கத்தில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 54.57 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | அம்பத்தூர் | 130.91 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | மதுரவாயல் | 57.45 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7 | போரூர் | 38.29 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8 | பெருங்குடி | 20.19 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 9 | பள்ளிக்கரணை | 58.61 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | இதர உள்ளாட்சி அமைப்புகள் | | |
| 10 | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 11 | தாம்பரம் நகராட்சி | 160.97 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 12 | திருமழிசை பேரூராட்சி | 20.47 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | 800.84 | |

5.3. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III (TNUDP-III) ன் கீழ் நடைபெற்று வரும் கழிவுநீர் திட்டங்கள்

| வ. எண் | பணியின் விவரம் | திட்ட மதிப்பீடு ( கோடியில்) | செயலாக்கத்தின் நிலை |
|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 87.63 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | மாதவரம் பாதாளச் சாக்கடைத் திட்டம் | 50.22 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | அம்பத்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் – முதற் கட்டம் | 65.75 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | 203.60 | |

## 6. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்

சென்னை மாநகரம் மற்றும் அதனுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பை, உலக தரத்திற்கு மேம்படுத்த வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்படி, சென்னை பெரு நகர வளர்ச்சி திட்டத்தை வருடாந்திர ஒதுக்கீடு ரூ.500 கோடியுடன் 2011–12 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது.

### 6.1. சென்னை மற்றும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை மாநகரில் ஏற்கனவே உள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை வலுப்படுத்தவும் மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும், விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்துள்ளது. சென்னை மாநகர் மற்றும் சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகள் செய்யும் பொருட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 189.10 கோடியினை 2011–12 ஆம் ஆண்டில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு வழங்க அரசு

ஒப்புதல் அளித்துள்ளது. இதன் விவரங்கள் பின் வருமாறு;

| வ. எண் | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (. கோடியில்) |
|---|---|---|
| 1 | நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 |
| 2 | பிரதான கழிவுநீரேற்று குழாய்கள் பெரிதாக்குதல் | 32.43 |
| 3 | குடிநீர் இணைப்புகள் இல்லாத குடிசைப் பகுதியில் வாழ்கின்ற வறுமை கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் வினியோகிக்க குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 |
| 4 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 |
| 5 | பிரதான கழிவு நீரேற்று குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல் | 22.98 |
| 6 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள அம்பத்தூர் பகுதியில் (முகப்பேர்) பல்வேறு இடங்களில் மனித நுழைவாயில்கள் அமைத்தல், மற்றும் கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 15.61 |
| 7 | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 |
| 8 | தற்பொழுது இயங்கி கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகளுக்கு | 11.24 |
| 9 | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 |
| 10 | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 |
| | மொத்தம் | 189.10 |

7.புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்

சென்னை மாநகராட்சியின் சமீபத்திய விரிவாக்கத்தின் விளைவாக, சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயலாக்க பரப்பளவு 174 சதுர கிலோமீட்டரில் இருந்து 426 சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்கு அதிகரித்துள்ளது. ஏற்கனவே உள்ள கட்டமைப்பு வசதிகளை இயக்குதல் மற்றும் பராமரிக்க பொறியியல் பணியாளர்களையும், வரிவசூலிக்கும் பணியாளர்களையும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் வாரியம் நியமித்துள்ளது. விரிவாக்கப்பட்ட பகுதிகளில், வாரியத்தின் கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.1. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கல்

நாளொன்றுக்கு சுமார் 76 மில்லியன் லிட்டர் குடிநீர் குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு சுமார் 2.5 மில்லியன் லிட்டர் குடிநீர் லாரிகள் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

குடிநீர் வழங்கும் லாரிகளின் எண்ணிக்கை 62ல் இருந்து 94ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வப்போது குடிநீரின் தரம் சரிபார்க்கப்படுகிறது,

அருகில் சாத்தியக்கூறு உள்ள ஆதாரங்களிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு கீழ்நிலைத் தொட்டி கட்டவும், நீர் நிரப்பும் நிலையம் மற்றும் சின்டெக்ஸ் தொட்டிகள் அமைத்தும், குடிநீர் வழங்குவதற்கு, வாரியம் தேவைக்கேற்ப உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

7.2. புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு ஏற்கனவே உள்ள மற்றும் புதிய குடிநீர் வழங்கும் திட்டங்கள்

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 42 உள்ளாட்சிகளில் கத்திவாக்கம் மற்றும் வளசரவாக்கத்தில் குடிநீர் வழங்கல் அமைப்புகள் ஏற்கனவே உள்ளன. போரூரில் குடிநீர் வழங்கும் பணிகள் சமீபத்தில் முடிக்கப்பட்டுள்ளன. திருவொற்றியூர், மதுரவாயல், நெற்குன்றம், உள்ளகரம்–புழுதிவாக்கம், ஆலந்தூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய 6 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாதவரத்தில் குடிநீர் திட்டம் 2012–13 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மீதமுள்ள 32 பகுதிகளில், இத்திட்டத்தை செயல்படுத்த சென்னைக் குடிநீர் வாரியத்தால் விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7.3. புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் கழிவுநீர் அமைப்புகளுக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள்

கழிவுநீர் சம்பந்தமான புகார்களை நிவர்த்தி செய்ய, ஜெட்ராடிங் மற்றும் தூர்வாரும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கழிவுநீர் உறிஞ்சும் லாரிகள் மூலமாக தேவையான இடங்களில் கழிவுநீர் எடுக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 42 உள்ளாட்சிகளில் வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்ட அமைப்புகள் எற்கனவே உள்ளன. திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், மதுரவாயல், போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், பெருங்குடி, மற்றும் பள்ளிக்கரணை பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றுள் சில பணிகள் பகுதி பகுதியாக முடித்து மக்களின் உடனடி பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிதாக இணைக்கப்பட்ட 18 பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 14 பகுதிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**கே.பி.முனுசாமி**

அமைச்சர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் ஊரக வளர்ச்சித் துறை

## நிதிநிலைச்சுருக்கம் ஒரு கண்ணோட்டம்

| விவரங்கள் | 2011-12 | 2010-11 | 2009-10 | 2008-09 | 2007-08 |
|---|---|---|---|---|---|
| குடிநீர் விற்பனை - குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 341.38 | 340.05 | 319.49 | 317.50 | 287.12 |
| இதர வருவாய் | 188.78 | 180.55 | 73.12 | 66.87 | 167.79 |
| மொத்த வருவாய் | **530.16** | **520.60** | **392.61** | **384.37** | **454.91** |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 263.27 | 131.97 | 127.91 | 97.79 | 80.62 |
| இயக்குதல் மற்றம் பராமரித்தல் | 158.66 | 227.73 | 117.21 | 110.23 | 101.75 |
| வட்டி | 93.99 | 93.11 | 95.17 | 93.72 | 95.87 |
| தேய்மானம் | 130.15 | 120.27 | 116.80 | 132.48 | 181.50 |
| இதர செலவினம் | 65.81 | 72.97 | 35.02 | 25.64 | 28.86 |
| மொத்த வருவாய் செலவினங்கள் | **711.88** | **646.05** | **492.11** | **459.86** | **488.60** |
| செலவை விட வரவு அதிகம் | **-181.72** | **-125.45** | **-99.50** | **-75.49** | **-33.69** |
| பங்குகள் | 1231.77 | 1174.42 | 1106.44 | 1101.72 | 1072.31 |
| அரசு மானியம் | 1485.63 | 1075.58 | 852.18 | 664.81 | 552.54 |
| நீண்டகால கடன்கள் | 1370.32 | 1240.38 | 1304.30 | 1340.39 | 1332.33 |
| நிலையான சொத்துக்கள் | 4480.87 | 4036.35 | 3564.42 | 3342.17 | 3298.12 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -784.95 | -756.05 | -383.14 | -220.38 | -250.58 |
| சேர்ந்த மிகை வரவு | -320.86 | -210.07 | -84.62 | 14.87 | 90.36 |
| மொத்த பணியாளர்கள் | **3,929** | **4,167** | **4,333** | **4,451** | **4,438** |

பணி மற்றும் நிர்வாக துறையே மனிதவள நிர்வாகத்திற்கும், வாரியத்தின் அனைத்து பணியாளர்களின் நலப்பணிகளுக்கும் பொறுப்பாகும். பணி மற்றும் நிர்வாகத் துறை பொது மேலாளரின் தலைமையில் இயங்கும். வருவாய் துறையின் மாவட்ட வருவாய் அதிகாரியே வாரியத்தின் பொது மேலாளராக அயற்பணியில் பணியமர்த்தப்படுகிறார். அவரே வாரியத்தின் செயலாளரும் ஆவார். பொது மேலாளர் நிர்வாக இயக்குநரின் நேரடி கண்காணிப்பில் பணிபுரிவார். பொது மேலாளரின் கண்காணிப்பில் கீழ்வரும் அலுவலர்கள் பணிபுரிகின்றனர்.

1) பணி மேலாளர்
2) தொழில் தொடர்பு மேலாளர்
3) மக்கள் தொடர்பு மேலாளர்
4) முதுநிலை நிர்வாக அலுவலர் (வாரிய பிரிவு)
5) முதுநிலை நிர்வாக அலுவலர் (விழிப்பு குழு பிரிவு)
6) முதுநிலை நிர்வாக அலுவலர் (சட்டப் பரிவு)
7) வட்டாட்ச்சியர் (நிலம் மற்றும் உடைமை)
8) வட்டாட்ச்சியர் (நில கையகப்படுத்தல்)
9) சட்ட ஆலோசகர்

பணி மற்றும் நிர்வாக துறை நுண்ணிய பிரிவுகளான நியமனம் மற்றும் மதிப்பீடு, விழிப்புக் குழு, சட்டப் பிரிவு, வாரிய பிரிவு, பணிப் பதிவேடு, தபால், பதிவறை, மக்கள் தகவல், தொழிலாளர் பதிவேடு, தொழில் தொடர்பு பிரிவு, மக்கள் தொடர்பு, பதிவறை பாதுகாப்பு ஆகிய பிரிவுகள் அடங்கியது.

இப்பிரிவுகள் வாரியத்தின் முக்கிய பணிகளான நியமனம் (நேரடி/பணிமாற்றம்/அயற்பணி), பதவி உயர்வுகள் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள், பொது நிர்வாகம், அரசால் வெளியிடப்படும் அரசாணைகளை நடைமுறைபடுத்துதல், குற்றத் தடுப்பு கண்காணிப்பு, ஊழியர்கள் மீதான புகார்கள்மீது நடவடிக்கை, புலனாய்வு மற்றும் ஒழுங்கு செயல்முறை ஆணை, கடவுச் சீட்டு பெற அனுமதி, நீதி பேராணை மனு, நீதி பேராணைமேல்முறையீட்டு மனு, வாரியத்திற்கு எதிராக தொடரப்படும் வழக்குகளில் எதிர்வழக்காட வழக்குரைஞர்களை அமர்த்துதல், அனைத்து சட்ட விசயங்கள், வாரிய கூட்டங்கள் நடத்துதல், விடுப்புகளுக்கு ஒப்பளித்தல், சம்பள உயர்வு, தேர்வுநிலை/சிறப்பு நிலை அளிப்பது, தகுதிகாண் பருவம் உறுதியாக்கம், தபால்களை பெறுவது மற்றும் பகிர்வதளிப்பது, வாரியத்தின் பதிவுருகளை பாதுகாப்பது, தொழிலாளர் நலன் சம்பயதமான நடவடிக்கைகள் மேற்கொள்வது, வீடு கட்டும் முன்பணம் ஒப்பளிப்பு, முன்பணம் மற்றும் படிகள், மருத்துவ செலவு ஈடுசெய்தல், சேமநல காப்பீடு, ஓய்வுகாலப் பணிப்பயன்கள், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிப்பயன்கள் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றன.

# சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மொத்த பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பதவி | பணியமர்த்தும் முறை | ஒப்பளிப்பு பெற்ற எண்ணிக்கை | பணியில் உள்ள எண்ணிக்கை | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | நிர்வாக இயக்குநர் | இ.ஆ.ப. | 1 | 1 | 0 |
| 2 | செயல் இயக்குநர் | இ.ஆ.ப. | 1 | 0 | 1 |
| 3 | நிதி இயக்குநர் | இ.க.த.ப. | 1 | 1 | 0 |
| 4 | பொறியியல் இயக்குநர் | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 5 | முதன்மை பொறியாளர் | பதவி உயர்வு | 5 | 5 | 0 |
| 6 | முதன்மை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 7 | பொது மேலாளர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 8 | தணிக்கை அலுவலர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 9 | மேற்பார்வைப் பொறியாளர் | பதவி உயர்வு | 17 | 17 | 0 |
| 10 | நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | பதவி உயர்வு | 2 | 1 | 1 |
| 11 | நிதி பகுப்பாய்வாளர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 12 | தொழிற் தொடர்பு மேலாளர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 13 | மக்கள் தொடர்பு மேலாளர் | அயல் பணி | 1 | 1 | 0 |
| 14 | துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் | அயல் பணி | 7 | 2 | 5 |
| 15 | தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 16 | விவர வகைப்பாட்டு மேலாளர் | நேரடி நியமனம்/பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 17 | தகவல் தொடர்பு மேலாளர் | நேரடியாக/பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 18 | செயற்பொறியாளர் | பதவி உயர்வு | 57 | 44 | 13 |
| 19 | புவியியலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 20 | பணியாளர் மேலாளர் | அயல் பணி/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 21 | முதுமை கணினி ஆய்வாளர் | அயல் பணி/ பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 22 | முதன்மை பகுப்பாய்வாளர் | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 23 | மருத்துவ அதிகாரி(டாக்டர்) | வேறு முறை | 1 | 1 | 0 |
| 24 | உதவி செயற்பொறியாளர் | பதவி உயர்வு | 161 | 141 | 20 |
| 25 | முதன்மை வேதியாளர் | பதவி உயர்வு | 7 | 4 | 3 |
| 26 | துணை புவியியலாளர் | பதவி உயர்வு | 2 | 2 | 0 |
| 27 | முதுநிலை நிர்வாக அலுவலர்/ முதுநிலை கணக்கு அலுவலர் | அயல் பணி/ பதவி உயர்வு | 37 | 11 | 26 |
| 28 | கணினி பகுப்பாய்வாளர் | பதவி உயர்வு/ அயல் பணி/ பணியிட மாற்றம் | 3 | 1 | 2 |
| 29 | உதவி பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் | நேரடி நியமனம்/பதவி உயர்வு | 508 | 368 | 140 |
| 30 | உதவி புவியியலாளர் | நேரடி நியமனம் | 6 | 3 | 3 |
| 31 | தொழில் நுட்ப அதிகாரி | நேரடி நியமனம்/பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 32 | கணக்கு அலுவலர்/நிர்வாக அலுவலர் | பதவி உயர்வு | 37 | 34 | 3 |
| 33 | திட்டமிடுபவர் | நேரடி நியமனம்/பதவி உயர்வு | 10 | 6 | 4 |
| 34 | இளநிலை நிர்வாக அலுவலர்/ இளநிலை கணக்கு அலுவலர் | பதவி உயர்வு | 130 | 79 | 51 |
| 35 | துணை மக்கள் தொடர்பு மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 36 | கணினி இயக்குபவர் | நேரடி நியமனம்/பதவி உயர்வு/ பதவி உயர்வு | 18 | 13 | 5 |
| 37 | உதவி நீர் பகுப்பாய்வாளர்/ வேதியாளர் | | 20 | 7 | 13 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–1 முதல் நிலை | பதவி உயர்வு | 7 | 7 | 0 |
| 39 | புகைப்பட நிபுணர் | நேரடி நியமனம் | 1 | 0 | 1 |
| 40 | தொழில் நுட்ப உதவியாளர்/ தொழில் நுட்ப அலுவலர் | நேரடி நியமனம் | 3 | 1 | 2 |
| 41 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 2 | பதவி உயர்வு | 20 | 19 | 1 |
| 42 | வரைவாளர்/ நில அளவையாளர் | நேரடி நியமனம் | 65 | 12 | 53 |
| 43 | மின்னியல் இயந்திரம் இயக்குபவர் (குறையதழுத்தம்) | நேரடி நியமனம் | 46 | 46 | 0 |
| 44 | மின்னியல் இயந்திரம் இயக்குபவர் (உயரழுத்தம்) | நேரடி நியமனம்/வேறு முறை | 171 | 18 | 153 |
| 45 | தொழில் நுட்ப பரிசோதனையாளர் (நிலை 1) | பதவி உயர்வு | 11 | 9 | 2 |
| 46 | தொழில் நுட்ப பரிசோதனையாளர் (நிலை 2) | நேரடி நியமனம் | 15 | 0 | 15 |
| 47 | மருந்து வழங்குபவர் | வேறு முறை | 1 | 1 | 0 |
| 48 | பண்ணை மேலாளர் | பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 49 | உதவியாளர் | பதவி உயர்வு | 100 | 11 | 89 |
| 50 | நூலகர் | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 51 | சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை 3) | நேரடி நியமனம் | 40 | 26 | 14 |
| 52 | உதவி இயக்குபவர்(இயந்திரம்) | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 53 | மின்னாளர் | பதவி உயர்வு | 128 | 121 | 7 |
| 54 | இளநிலை உதவியாளர் | பதவி உயர்வு/ நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 111 | 66 | 45 |
| 55 | தட்டச்சர் மற்றும் முதல் நிலை தட்டச்சர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 42 | 16 | 26 |
| 56 | பணிமனை மேலாளர்(முதல் நிலை) | பதவி உயர்வு | 22 | 18 | 4 |
| 57 | பணிமனை மேலாளர் (இரண்டாம் நிலை) | பதவி உயர்வு | 88 | 80 | 8 |
| 58 | பணிமனை மேலாளர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 159 | 47 | 112 |
| 59 | வாகன ஓட்டுனர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 67 | 26 | 41 |
| 60 | விவர குறிப்பு கணினி இயக்குபவர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 17 | 7 | 10 |
| 61 | தொலைபேசி இயக்குபவர் | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 4 | 2 | 2 |
| 62 | மிதி இயக்கி செய்தியாள் (இலகுரக ஓட்டுநர் உரிமம் உரியவர் ) | நேரடி நியமனம்/ பணியிட மாற்றம் | 1 | 0 | 1 |
| 63 | குழாய் அமைப்பாளர்/ குழாய் செப்பனிடுபவர்/ பொருத்துபவர் | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 64 | குழாய் மற்றும் இயந்திரம் ஓட்டுபவர் | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 1 | 1 | 0 |
| 65 | பொருத்துனர் (இரண்டாம் நிலை) | நேரடி நியமனம்/ பதவி உயர்வு | 6 | 3 | 3 |
| 66 | இயந்திரம் இயக்குபவர் (இரண்டாம் நிலை) | | 1 | 1 | 0 |
| 67 | நீரேற்று குழாய் இயக்குபவர் (முதல் மற்றும் இரண்டாம் நிலை) | | 14 | 9 | 5 |
| 68 | மின் நீரேற்று குழாய் இயக்குபவர் | | 154 | 10 | 144 |
| 69 | களப்பணியாளர் | வேறு முறை | 1 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 70 | மின் தூக்கி இயக்குபவர் | நேரடி நியமனம் | 1 | 1 | 0 |
| 71 | களப்பணியாளர் / நில அளவையாளர் | அயல் பணி | 2 | 1 | 1 |
| 72 | களப்பணி உதவியாளர் முதல் நிலை | பதவி உயர்வு | 1 | 0 | 1 |
| 73 | பதிவறு எழுத்தர் | பதவி உயர்வு | 45 | 17 | 28 |
| 74 | அலுவலக உதவியாளர் | நேரடி நியமனம் | 102 | 32 | 70 |
| 75 | துப்புரவு பணியாளர் | நேரடி நியமனம் | 15 | 12 | 3 |
| 76 | காவலர் | நேரடி நியமனம் | 50 | 35 | 15 |
| 77 | மருந்து/ வாயு இயக்குபவர் | பதவி உயர்வு | 8 | 5 | 3 |
| 78 | டீசல் மின் ஆற்றல் இயந்திரம் இயக்குபவர் | பதவி உயர்வு | 2 | 1 | 1 |
| 79 | வடிகட்டி இயக்குபவர் | பதவி உயர்வு | 17 | 7 | 10 |
| 80 | உதவி துளையிடுபவர் | வேறு முறை | 1 | 1 | 0 |
| 81 | வட்டாட்ச்சியர்/ வரி தண்டலர் | அயல் பணி | 11 | 10 | 1 |
| மொத்த பணியாளர் எண்ணிக்கை | | | 2602 | 1431 | 1171 |
| 82 | தொழிலாளப்பணியாளர்/ கனரக வாகன ஓட்டுநர் | நேரடி நியமனம் | 1993 | | |
| | மொத்தம் | | 7255 | 3424 | 3831 |
| | * ஒரு முதன்மை பொறியாளர் அயல் பணி மாநகர இரயில் திட்டம் | | | | |
| | "** இரண்டு செயற்பொறியாளர் பதவி உச்ச நீதிமன்ற ஆணைப்படி " | | | | |

## சென்னைக் குடிநீர் வாரியத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் பணியிடம் மாற்றம் செய்யப்பட்ட பணியாளர்களின் விவரம்

| வ. எண் | பதவி | பணியிடம் மாற்றம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மேற்பார்வைப் பொறியாளர் | 03 |
| 2 | செயற் பொறியாளர் | 11 |
| 3 | உதவி செயற் பொறியாளர் | 18 |
| 4 | முதுநிலை கணக்கு/முதுநிலை நிர்வாக அலுவலர் | 14 |
| 5 | உதவிப் பொறியாளர்/இளநிலை பொறியாளர் | 35 |
| 6 | கணக்கு அலுவலர் /நிர்வாக அலுவலர் | 07 |
| 7 | இளநிலை கணக்கு /இளநிலை நிர்வாக அலுவலர் | 14 |
| 8 | முறை இயக்குபவர் | 01 |
| 9 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-2 | 01 |
| 10 | வரைவாளர் மற்றும் அளவையர் | 01 |
| 11 | மின் இயக்குபவர் (குறைந்த அழுத்தம்) | 01 |
| 12 | மின் இயக்குபவர் (உயர் அழுத்தம்) | 02 |
| 13 | ஆய்வக தொழில்நுட்ப பணியாளர் நிலை-1 | 01 |
| 14 | உதவியாளர் | 01 |
| 15 | சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 | 05 |
| 16 | மின்னாளர் | 08 |
| 17 | இளநிலை உதவியாளர் | 10 |
| 18 | பணிமனை மேலாளர் நிலை-1 | 01 |
| 19 | பணிமனை மேலாளர் | 03 |
| 20 | ஓட்டுநர் | 07 |
| 21 | அலுவலக உதவியாளர்/களப்பணியாளர் | 53 |

## வாரியத்தில் வேற்றுபணியில் அயல்துறை பணி வரையறைகளுக்குட்பட்டு பணிபுரிந்த அலுவலர்களின் காலம் 01.04.2011 முதல் 31.03.2012 வரையிலான விவரம்

| வ. எண். | பெயர் திருவாளர்கள் | பதவி | காலம் முதல் | காலம் வரை |
|---|---|---|---|---|
| 1 | டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப. | மேலாண்மை இயக்குநர் | 22.06.11 | 13.12.11 |
| 2 | ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.. | மேலாண்மை இயக்குநர் (பொ) | 07.02.12 | 08.03.12 |
| 3 | அபூர்வ வர்மா, இ.ஆ.ப.. | மேலாண்மை இயக்குநர் | 08.03.12 | 12.12.12 |
| 4 | கே.மகர பூஷ்ணம், இ.ஆ.ப.. | செயல் இயக்குநர் | 06.08.10 | 03.06.11 |
| 5 | சி.ஆறுமுகம், இ.த.& க.ப | நிதி இயக்குநர் | 29.09.11 | இன்று வரை |
| 6 | பா.பாஸ்கரன் (மாவட்ட வருவாய் அலுவலர்) | செயலாளர் மற்றும் பொது மேலாளர் | 04.03.11 | 27.06.13 |
| 7 | என்.பாலையா | மக்கள் தொடர்பு மேலாளர் | 01.07.11 | இன்று வரை |
| 8 | ஆர்.உதயகுமார் | உள் தணிக்கையாளர் | 14.10.10 | இன்று வரை |
| 9 | எஸ்.சுரேஷ் | துணை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் (உத) | 09.04.09 | 08.04.13 |
| 10 | சிவகொழுந்து | சார் ஆய்வாளர்–நில அளவை | 02.01.09 | 29.08.11 |
| 11 | ஆர்.முகமது உபயதுல்லா | சார் ஆய்வாளர்–நில அளவை | 06.04.09 | 29.08.11 |
| 12 | ஜி.மோகன் | சார் ஆய்வாளர்–நில அளவை | 09.11.11 | இன்று வரை |
| 13 | எச்.அலெக்ஸாண்டர் | சார் ஆய்வாளர்–நில அளவை | 29.03.12 | 30.04.13 |
| 14 | டாக்டர் பி.காமேஷ் பாலாஜி, எம்.பி.பி.எஸ்., | மருத்துவ அலுவலர் | 12.06.09 | 31.05.13 |
| 15 | வி.வீரமணிகண்டன் | மருந்து வழங்குபவர் | 28.08.08 | இன்று வரை |
| 16 | என்.தரணிபதி | துணை ஆட்சியர் (ஓய்வு) | 28.11.11 | இன்று வரை |
| 17 | எம்.ஆர்.யுகேந்திரன் | தனி வட்டாட்சியர் | 10.06.11 | இன்று வரை |
| 18 | தமிழரசன் | வட்டாட்சியர் (ஓய்வு) | 05.11.08 | இன்று வரை |
| 19 | எம்.எஸ்.வெங்கட்ரமணி | வட்டாட்சியர் (ஓய்வு) | 01.12.11 | இன்று வரை |
| 20 | ஆர்.நடராஜன் | துணை ஆட்சியர் (ஓய்வு) | 03.11.08 | இன்று வரை |
| 21 | வி.ஆர்.எல்.சைமன் | துணை ஆட்சியர் (ஓய்வு) | 07.01.10 | இன்று வரை |
| 22 | ஆர்.தேவேந்திரன் | துணை ஆட்சியர் (ஓய்வு) | 17.09.10 | இன்று வரை |
| 23 | எஸ்.ராமலிங்கம் | வட்டாட்சியர் (ஓய்வு) | 24.11.08 | இன்று வரை |
| 24 | எஸ்.கே.ராஜன் | துணை ஆட்சியர் (ஓய்வு) | 28.11.11 | இன்று வரை |

### வாரியத்தில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் விவரங்கள் காலம் 01.04.2011 முதல் 31.03.2012 வரையிலான விவரம்

| வரிசை எண் | பணி நியமன முறை | பதவியின் பெயர் | நியமனம் செய்யப்பட்ட வருடம் | பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் | இளநிலை உதவியாளர் | நவம்பர் 2011 | 24 |

## சென்னைக் குடிநீர் வாரியம்
## பயிற்சி மையம்

சென்னைக் குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில் வாரிய பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் மற்றும் மத்திய பொதுநல மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல் அமைப்பின் ஆதரவில் அகில அளவில் உள்ள நிறுவனங்களுக்கும் இயதிய அளவில் மற்றும் நமது பணியாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்பு பயிற்சி வகுப்புகளும் தேவைக்கேற்ப நடத்தப்படுகிறது.

பயிற்சி மையத்தை மேம்படுத்தும் பணிகள்
பிரிவு – II திட்டப்பணிகள்:

| வ. எண் | பணிவிவரம் / ஒப்பந்த எண் | பணி தொடங்கும் நாள் | பணி முடியும் நாள் | ஒப்பந்த மதிப்பு ரூ | விலை மதிப்பு ரூ | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பயிற்சி மையத்தில் உள்ள நூலகத்தை கலந்தாய்வு கூடமாக மாற்றும் பணி CNT / WSS/ MWB/ 1993 / 2010 -11 | 23.06.2010 | 10.06.2011 | 26,24,362.07 | 18,24,846.00 | |
| 2 | பயிற்சி மையத்தில் உள்ள இயக்குநர் அறை மற்றும் நிர்வாக அலுவலகத்தை திருத்தி அமைக்கும் பணி CNT / WSS/ MWB/ 1991 / 2010 -11 | 30.06.2010 | 10.06.2011 | 24,27,923.76 | 22,44,910.08 | |
| 3 | பயிற்சி மையத்தில் உள்ளதொழிற் கூடாரம் 1 & 2 ஐ கண்காட்சி கூடமாக மாற்றுவதற்கான அலுமினியப் பிரிவினைகள் அமைத்தல் மற்றும் அதன் சார்யத பணிகள் TC / Improvement / 006 – A / 2011 - 12 | | 26.03.2012 | 1,58,897.08 | 1,52,152.23 | |
| 4 | பயிற்சி மையத்தில் உள்ள விடுதி கட்டிடத்தின் கட்டுமான பணிகளை சீரமைத்தல் CNT/WSS / GOTN / 2074 / 2010 -11 | 17.08.2011 | 10.05.2012 | 30,18,960.00 | 28,55,030.00 | |
| 5 | பயிற்சி மையத்தில் உள்ள விடுதி கட்டிடத்தின் மின் வசதி பணிகளை சீரமைத்தல் CNT / WSS / GOTN / 2080 / 2010 -11 | 22.11.2011 | 16.04.2012 | 15,03,829.00 | 15,28,608.34 | |
| 6 | பயிற்சி மையத்தில் இயற்கை நிலக்காட்சி மற்றும் தோட்டம் அமைத்தல் CMWSSB / C & M / CNT / WSS / MWB / 2009A / 10 - 11 | 25.10.2010 | 31.03.2011 & 31.3.2012 (பராமரிப்பு பணி முடிவடைந்த நாள்) | 10,52,575.04 | 11,03,319.99 | |

வாரியப் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள்:

24 பயிற்சி வகுப்புகள் பின்வரும் தலைப்புகளில் நடத்தப்பட்டன. அதன் வகைகள்.

1) இயக்குதல் மற்றும் பராமரித்தல்
2) குடிநீரின் தரம்
3) கழிவு நீரை அகற்றுதல்
4) மனித வள மேம்பாடு
5) திட்ட மேலாண்மை
6) நிதி நிலை மேலாண்மை

2011 – 12 ம் ஆண்டு பயிற்சி மையத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் மூலம் வாரிய பணியாளர்கள், களப்பணியாளர்கள் உள்பட 1025 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மத்திய சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் ஆதரவில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகள் கீழ்க்காணும் ஐந்து பயிற்சி வகுப்புகள் மத்திய சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் ஆதரவில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. அதன் பயிற்சி தலைப்புகள் , பங்கு பெற்றோரின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பயிற்சியின் பெயர் | கால அளவு (நாட்கள்) | பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | CMWSSB Staff | Other Organisation Staff |
| 1 | அரிமான கட்டுப்பாடு | 5 | 15 | 3 |
| 2 | கழிவு நீர் பணி மேற்பார்வையாளர்கள் | 10 | 14 | - |
| 3 | குளோரினேட்டர்களை பாதுகாத்தல் மற்றும் உபயோகித்தல் | 5 | 8 | 5 |
| 4 | வடிகட்டிகளை இயக்குதல் | 7 | 14 | 3 |
| 5 | குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை அமைத்தல் | 5 | 13 | 8 |
| | பங்கு பெற்றோரின் மொத்த எண்ணிக்கை | | **64** | **19** |

சிறப்பு பயிற்சி வகுப்புகள்

மேற்கூறிய பயிற்சி வகுப்புகளுக்கு கூடுதலான சிறப்பு பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பங்கு பெற்றோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மகளிர் கிறிஸ்துவ கல்லூரி மாணவர்களுக்கான பணிசார்ந்த பயிற்சி வகுப்புகள் ( 27.4.2011 வடி 21.05.2011) | 9 |
| 2 | புதிதாக பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களுக்கு அறிமுக பயிற்சி திட்டம் (20.09.11 வடி 21.09.2011) | 22 |
| | மொத்தம் | **31** |

தொழில் நுட்பம் – காலி பணியிட நிலவரம் – நேரிடையாக காலி பணியிடங்களை நிரப்புதல்–21.06.2013 அன்றைய நிலவரம்

| வ. எ. | பதவியின் பெயர் | நிரந்தரம் | தற்காலிகம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் | 3 | 3 | 6 | 5 | 1 |
| 2 | மேற்பார்வைப் பொறியாளர் | 14 | 3 | 17 | 17 | 0 |
| 3 | செயற் பொறியாளர் | 39 | 18 | 57 | 44 | 13 |
| 4 | உதவி செயற்பொறியாளர் கட்டிடவியல் / இயந்திரவியல் | | | 132 | 113 | 19 |
| 5 | உதவி செயற்பொறியாளர் மின்னியல் | | | 29 | 28 | 1 |
| | உதவி செயற்பொறியாளர் கட்டிடவியல் / இயந்திரவியல் / மின்னியல் – மொத்தம் | 122 | 39 | 161 | 141 | 20 |
| 6 | உதவி பொறியாளர் கட்டிடவியல்/ இயந்திரவியல் | | | 262 | 167 | 95 |
| 7 | இளநிலை பொறியாளர் கட்டிடவியல்/ இயந்திரவியல் | | | 88 | 65 | 23 |
| 8 | உதவி பொறியாளர் (மின்) | | | 118 | 67 | 51 |
| 9 | இளநிலை பொறியாளர் (மின்) | | | 40 | 69 | –29 |
| | உ.பொ/இ.நி.பொ(கட்டிடவியல்/ இயந்திரவியல் / மின்னியல் – மொத்தம் | 398 | 110 | 508 | 368 | 140 |
| 10 | வரைவாளர் / நில அளவையர் | | | 65 | 12 | 53 |
| 11 | மின் இயக்குபவர் (உயரழுத்தம்) | | | 171 | 18 | 153 |
| 12 | மின் இயக்குபவர் (குறையதழுத்தம்) | | | 46 | 46 | 0 |
| 13 | மின்னாளர் | | | 128 | 117 | 11 |
| 14 | மின்னியல் விசைக்குழாய் இயக்குபவர் | | | 154 | 10 | 144 |
| | மொத்தம் | | | 1313 | 778 | 535 |

## பகுதி அலுவலகம் மற்றும் பணிமனைகளின் விவரங்கள்

| வ எண். | விவரம் | பகுதி–1 | பகுதி–2 | பகுதி–3 | பகுதி–4 | பகுதி–5 | பகுதி–6 | பகுதி–7 | பகுதி–8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பகுதி அலுவலகத்தின் பெயர் | திருவொற்றியூர் | மணலி | மாதவரம் | தண்டையார்பேட்டை | இராயபுரம் | திரு–வி–க நகர் | அம்பத்தூர் | அண்ணாநகர் |
| 2 | மொத்த பணிமனைகள் | 14 | 7 | 12 | 15 | 15 | 15 | 15 | 15 |
| 3 | மக்கள் தொகை (சென்னை மாநகராட்சி பட்டியலின்படி) | 322600 | 92795 | 194939 | 424277 | 417835 | 1109287 | 483357 | 575016 |
| 4 | மொத்த தெருக்கள் | 1394 | 618 | 2562 | 2847 | 1392 | 2142 | 2320 | 2352 |
| 5 | தெருக்களின் நீளம் (கி.மீ.) | 221.99 | 166.91 | 398.65 | 441.34 | 250.42 | 344.64 | 362.89 | 351.43 |
| 6 | குடிநீர்க் குழாயின் நீளம் (கி.மீ.) | 82.29 | 171.91 | 412.55 | 398.48 | 270.32 | 388.71 | 257.33 | 401.06 |
| 7 | கழிவுநீர்க் குழாயின் நீளம் (கி.மீ.) | 56.37 | 38.23 | 0 | 464.11 | 258.09 | 356.102 | 119.74 | 316.58 |
| 8 | ஆள்நுழைவாயிலின் எண்ணிக்கை | 1855 | 1697 | 0 | 12005 | 8261 | 10629 | 3811 | 11038 |
| 9 | கழிவுநீரேற்று நிலையத்தின் எண்ணிக்கை | 6 | 2 | 0 | 34 | 20 | 17 | 4 | 28 |

| வ எண். | விவரம் | பகுதி–9 | பகுதி–10 | பகுதி–11 | பகுதி–12 | பகுதி–13 | பகுதி–14 | பகுதி–15 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பகுதி அலுவலகத்தின் பெயர் | தேனாம் பேட்டை | கோடம் பாக்கம் | வளசர வாக்கம் | ஆலந்தூர் | அடையார் | பெருங்குடி | சோழிங்க நல்லூர் | சென்னை |
| 2 | மொத்த பணிமனைகள் | 18 | 16 | 13 | 12 | 13 | 11 | 9 | 200 |
| 3 | மக்கள் தொகை (சென்னை மாநகராட்சி பட்டியலின்படி) | 585899 | 604888 | 367465 | 232974 | 860084 | 232482 | 193255 | 6697153 |
| 4 | மொத்த தெருக்கள் | 1799 | 2367 | 3095 | 1696 | 2794 | 2691 | 1820 | 31889 |
| 5 | தெருக்களின் நீளம் (கி.மீ.) | 817.72 | 439.84 | 349.27 | 255.78 | 406.22 | 407.48 | 271.14 | 5485.72 |
| 6 | குடிநீர்க் குழாயின் நீளம் (கி.மீ.) | 825.93 | 487.87 | 265.58 | 252.38 | 449.71 | 350.23 | 260.54 | 5274.882 |
| 7 | கழிவுநீர்க் குழாயின் நீளம் (கி.மீ.) | 376.73 | 458.75 | 525.500 | 143.45 | 520.43 | 9.0 | 0 | 3643.082 |
| 8 | ஆள்நுழைவாயிலின் எண்ணிக்கை | 10059 | 12239 | 3378 | 4863 | 15672 | 100 | 0 | 95607 |
| 9 | கழிவுநீரேற்று நிலையத்தின் எண்ணிக்கை | 23 | 23 | 7 | 2 | 46 | 2 | 0 | 214 |

சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
இருப்பு நிலை குறிப்பின் அட்டவணை 'எப்' க்கு துணை அட்டவணை

**துணை அட்டவணை – I**

( ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – குடிநீர் | 2011-12 |
|---|---|
| அணைகள் மற்றும் நீர்த் தேக்கங்கள் | 1825.10 |
| கிணறு மற்றும் குழாய்க் கிணறுகள் | 2024.94 |
| தண்ணீர் ஊடுறுவும் தொட்டி | 1.59 |
| திறந்த வெளி கால்வாய்கள் | 331.65 |
| பகிர்மான குழாய்க் கால்வாய் | 70203.74 |
| நீரேற்றும் நிலையம் | 8960.57 |
| வடிகட்டுதல் நிலையம் | 207.58 |
| குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் | 17024.63 |
| சுத்திகரிக்கப்பட்ட நிலையம் | 2102.76 |
| சுத்திகரிக்கப்பட்ட நீர் தொட்டி | 636.43 |
| மி ன் உற்பத்தி மின் ஆக்கி | 65962.11 |
| முதன்மை பகிர்மானம் | 2.32 |
| பெருங்குழாயிலிருந்து நீர் பெறுவதற்கான அமைப்பு | 7934.51 |
| நீருந்து இயந்திரம் மற்றும் நீரேற்று நிலையம் | 12747.95 |
| குடிநீர் இணைப்பு மற்றும் வழங்குதல் | 393.05 |
| புதிய அளவீடு மற்றும் விசைமானி | 169.88 |
| நுகர்வோர் அளவை | 11.49 |
| கை பம்பு | 316.05 |
| பொதுக்குழாய் | 1237.66 |
| நிலத்தடி நீர் வழங்குதல் | 22247.18 |
| குடிநீர் சார்ந்த கட்டுமானப்பணி | 1245.08 |
| குடிநீருக்கான மின் உபகரணங்கள் | 662.55 |
| குடிநீருக்கான தளவாடம் மற்றும் உபகரணங்கள் | 18187.49 |
| குடிநீர் ஊர்தி | 3.74 |
| சென்னை மாநகர் செயல் திட்டம் | 5551.48 |
| 5530 எம் எல் டி திட்டம் செயற்படுதல் | 4832.81 |
| மொத்தம் | **244824.33** |

(ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – கழிவுநீர் | 2011–12 |
|---|---|
| கழிவு நீர்ச் சேவை இணைப்புகள் | 3646.60 |
| கழிவு நீர்ச் சேகரிப்பு | 31887.58 |
| நீரேற்று நிலையம் | 14284.54 |
| மின் ஆக்கி | 778.56 |
| முதன்மை வலு ஈர்க்கும் கருவி | 15530.56 |
| கழிவு நீர்ச் சுத்திகரிக்கும் நிலையம் | 4000.80 |
| முதன்மை நிலை | 68.66 |
| ஆக்சிடேசன் பாண்ட் | 0.66 |
| கழிவுநீர் பண்ணை | 1094.61 |
| கழிவுநீர் – பிற தளவாடங்கள் மற்றும் கருவிகள் | 2974.48 |
| நிலத்தடி – கழிவுநீர் | 79.56 |
| பிற கட்டுமானங்கள் | 10883.28 |
| மின் உபகரணங்கள் | 4453.96 |
| கழிவுநீர் ஊர்திகள் | 79.83 |
| நடைமுறையில் உள்ள கழிவுநீர்த் திட்டங்கள் | 0.00 |
| செயலாக்கத் திட்டங்கள் – CCRCP கழிவுநீர் | 971.52 |
| **TOTAL** | **90735.19** |

(ரூபாய் இலட்சங்களில்)

| நிலையான இருப்புகள் – பொது | 2011–12 |
|---|---|
| நிலம் – பொது | 74.92 |
| தெருக்கள் மற்றும் பாலங்கள் | 384.70 |
| கட்டிடங்கள் | 1640.70 |
| மரச்சாமான்கள் மற்றும் தளவாடங்கள் | 231.92 |
| அலுவலக உபகரணங்கள் – பொது | 431.65 |
| கட்டுமான உபகரணங்கள் | 1403.51 |
| பயிற்சி மைய இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் | 18.47 |
| ஆய்வக கருவிகள் | 128.39 |
| நில அளவை மற்றும் வரைபட அலுவலக உபகரணங்கள் | 3.89 |
| தகவல் தொடர்பு சாதனங்கள் | 83.70 |
| அலுவலக ஊர்திகள் | 287.74 |
| திறந்த சுமை ஊர்திகள் – சிறிய சுமை ஊர்திகள் | 13.22 |
| பிற பொது தளவாடங்கள் | 112.98 |
| கணினி பொருத்துதல் | 907.53 |
| மொத்தம் | **5723.32** |